සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 41 | பெப்24 -மார்ச் 09, 1994 | விலை 7/=

**ஆடுமட்டும் ஆடி,...**

மானமென்ன ரோசமென்ன மக்களது வாழ்வென்ன
ஈனமுற்ற பிறவிகள்நாம். எங்களுக்கு -ஞானமற்றோய்
ஆடு மட்டும் ஆடி அனுபவித்துப் போகவென்று
தேடிவந்த தேர்தலுக்கு முன்.

— ஈழமோகம்

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் :

# எங்கள் வாக்குகள் யாருக்கு?

மார்ச் முதலாம் திகதி அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. பொய் வாக்குறுதிகளாலும், தில்லுமுல்லுகளாலும் இப்பிரதேசங்கள் குளிப்பாட்டப்படுகின்றன. வாக்காளர் பட்டியல் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து, பிரச்சாரக்கூட்டங்கள் வரை அவை அனைத்து அம்சங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. துப்பாக்கிகள் ஏந்திய படையினரின் கண்காணிப்பில் இப்பிரதேச மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ள -இவர்களை விலை பேசுகின்ற- சதித்திட்டத்துடன் போட்டியிடுகின்ற அனைத்துக்கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் இவற்றுக்குத் துணை போகின்றவையே என்பதை சம்பவங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

மாகாண சபைகளுக்கே எந்த அதிகாரமும் கிடையாது என அறிவித்துள்ள ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கவின் ஆட்சியின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் அமையவுள்ள சபைகள் எந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கப் போகின்றன? சிவில் நிர்வாகத்தை இராணுவமே செய்யும் போது தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு அங்கு என்ன வேலை இருக்கப் போகிறது என்ற கேள்விகளை எழுப்புகின்றனர் இப்பிரதேச மக்கள்.

யாருக்கு வாக்களிப்பது என்பதல்ல இப்போது அவர்களது கேள்வி. ஏன் இந்த தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும் என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

யாருக்கு வாக்களித்தாலும் சரி, வாக்குச் சீட்டை செல்லுபடியற்றதாக்கினாலும் சரி, அதனால் லாபமடையப் போவது இலங்கை அரசாங்கமே என்றால், நாம் எதற்காக வாக்களிக்க வேண்டும் என்ற கேள்வியே அங்கு நிலவுகிறது.

## மட்டக்களப்பு: வாக்குறுதிகள் கொட்டப்படுகின்றன

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரச்சாரங்கள் கிழக்கில் வேகமாக சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. அரச தரப்பிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் சிறிசேனகுரே, காமினி அத்துக்கோறளை, ஐ.தே.க.வின் புதிய அமைச்சரான அநுரா பண்டார நாயக்கா ஆகியோர் இந்த சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

வழமை போல எல்லாத் தரப்பினரும் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதில் மும்முரமாக இருக்கிறார்கள். 'ஏறாவூரை அழகான நகரமாக மாற்றுவேன்' காத்தான்குடிக்கு தண்ணீர் வழங்குவேன் என்றும் ஐ.தே.கட்சி இன, மத, மொழி பேதங்களைக் காட்டி ஒரு போதும் ஆட்சி அமைக்கவில்லை என்றும் ஐ.தே.க.வின் வரலாறு ஒருவருக்கும் தெரியாது என்கிறாற் போல அங்காங்கு நடந்த கூட்டங்களில் பேசி வருகிறார் அமைச்சர் சிறிசேன கூரே.

மறுபுறுத்தில் 'உங்கள் மீதுள்ள பாசத்தால் சொல்லுகிறேன், அரசாங்கத்தை ஒரு போதும் பகைக்கக்கூடாது. எமக்கு உதவி செய்த பட்டயணிகளை மறக்கக்கூடாது' என்று நன்றிக்கடனோடு ஐ.தே.க.வுக்கு வாக்களிக்கும் படி கூறி வருகிறார் அமைச்சர் மன்சூர். அரசுக்கு வாக்களிக்காவிட்டால் நீங்கள் மிகவும் கஷ்டப்பட நேரிடும் என்று மறைமுகமாக எச்சரிக்கிறார் போல இருக்கிறது அவரது பேச்சு.

மட்டக்களப்பு பிரிகேடியர் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் மட்டக்களப்பு மக்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்றும், வாக்கிளிக்காவிட்டால் இராணுவம் அவர்களைக் கவனிக்கும் என்ற தொனிப்பட பேசியிருக்கிறார். கூடவே கிழக்கு தளபதி லக்கி அல்கம கிராம சேவர்களுக்கான கூட்டமொன்றில் ஒவ்வொரு கிராம சேவகர்களுக்கும் தனிப்பட்ட பைல் தன்னிடம் இருப்பதாகவும், கிராம சேவகர்கள் அரசுக்கு சார்பாக நடந்து கொள்ளாவிடில் பைல்களைப் புரட்டி ஊழல் குற்றச்சாட்டின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்றும் மிரட்டியிருக்கிறார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், தமிழர் விடுதலைக்கூட்டணி பா.உ. ஜோசப் பரராஜசிங்கமும் தவறான செய்திகளை பரப்பி வருகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை புதுக்குடியிருப்பில் விசேட அதிரடிப்படைக்குப் பொறுப்பாக இருக்கும் றொனி ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்கும் படி மக்களை வற்புறுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

இதுதவிர அண்மைக்காலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணமாக ரூபா 4000 மட்டக்களப்பின் சில பகுதிகளில் வழங்கப்பட்டு வருவதாகவும், தமக்கு இம்முறை வாக்களிக்காவிட்டால் இம்மாதிரியான நிவாரணப் பணம் கிடைக்காது என்றும் ஐ.தே.க. வேட்பாளர்கள் கூறி வருகின்றனராம்.

## வவுனியா: போரும் பனிப்போரும்

வவுனியாவில் ஆளும் ஐ.தே.கட்சியும், புளொட்டும், ரெலோவும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் நிலைமை சுமூகமாகவில்லை எனக்கூறி ரெலொவுடன் சேர்ந்து போட்டியிடும் புளொட் வவுனியாவில் மட்டும் தனித்துப் போட்டியிடுகின்றது. இதுவரை காலம் வவுனியாவில் இருந்து வந்த தமிழ்த் தலைமைத்துவம் தேசியக் கட்சியொன்றின் கைக்குப் போய்விடக்கூடாது என்பதால் தாம் வவுனியாவில் போட்டியிடுவதாக புளொட்டினர் கூறி வருகின்றனர்.

முழுத் தமிழ் பேசும் மக்களது தலைவிதியையும் ஆளும் ஐ.தே.கட்சி அரசிடம் கொடுத்து விட்டு வவுனியா தமிழ்ப் பிரதிநித்துவம் தேசியக் கட்சிக்குப் போய்விடக்கூடாது என்று இவர்கள் பசப்புவதை நம்ப மக்கள் தயாராகவில்லை.

மறுபுறத்தில் ஆளும் ஐ.தே.கட்சி தனது வெற்றி நிச்சயமற்ற நிலையில் தமிழ் வூக்குகளை இரண்டாக உடைப்பதற்காகவே ரெலோவை போட்டியிட வைத்துள்ளது என்றும் பேசப்படுகிறது. மட்டக்களப்பில் புளொட்டுடன் சேர்ந்து ஒரே பட்டியலில் போட்டியிடும் ரெலோ வவுனியாவில் மட்டும் புளொட்டுக்கு எதிராக போட்டியிடுவது ஏன் என்ற கேள்வி எழுந்ததாலோ என்னவோ 'புளொட் இயக்கத்தினருக்கும் எமக்கும் எதுவித பிரச்சினையுமில்லை. சினேகபூர்வமான போட்டியிலேயே இறங்கியுள்ளோம்' என்று பத்திரிகைக்கு அறிக்கை விட வேண்டிய நிலைக்கு ரெலோ சிறிகாந்த உள்ளாகியிருக்கிறார்.

## சுண்டிக்குளம்கடற்பகுதியில் மீனவர் படுகொலை

யாழ்குடாநாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சுண்டிக்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை, மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 10 பேர் பலியானதாக அஞ்சப்படுகிறது.

பூனைத்தொடுவாய் கடற்பரப்பில் வழமைபோல 10 மீனவர்கள் கட்டுமரங்களில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் முல்லைத்தீவு பக்கமிருந்து பீரங்கிப் படகில் விரைந்து வந்த கடற்படையினர் மீனவர்கள் மீது கண் மண் தெரியாமல் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்கள். ஸ்தலத்திலேயே பலியான மூன்று மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் வெள்ளிக்கிழமை மாலை கண்டெடுக்கப்பட்டது. எஞ்சிய ஏழு பேருக்கும் என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை. இவர்கள் கொண்டு சென்ற ஐந்து கட்டுமரங்களும் கரையொதுங்கியுள்ளன.

யாக்கோப் பிள்ளை நிக்சன்(21) அமிர்தலிங்கம் ஜோன் பெர்னாண்டோ(32) யேசு சாந்தகுமார்(23) ஆகிய மூவருமே உயிரிழந்த மீனவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாக்கேஸ் பிள்ளை (நிக்சனின் தந்தை)(45) பபா(21) யேசு ஜெயா(18) (சாந்த குமாரின் சகோதரன்) மனுவேல்பிள்ளை மரிசீலன்(25) கபிரியேல் பிள்ளை ஜெயசீலன் (மிஸ்கின்)(25) ஆசிர்வாதம் மருசலீன்(42) ஆகிய ஏழு மீனவர்களுமே காணாமற் போயுள்ளார்கள். இவர்கள் படையினரின் தாக்குதலில் இறந்திருக்கலாம் என்றும், அதனாலேயே மீனவர்கள் கொண்டு சென்ற கட்டுமரங்கள் வெறுமனே மிதந்து கரையொதுங்கின என்று நம்பப்படுகிறது.

**ஈழநாடு பாரிஸ்**

## பாரிஸ் ஈழநாடு தீக்கிரை: மற்றுமொரு கருத்துச் சுதந்திர மறுப்பே!

**- சமர் பத்திரிகை அறிக்கை**

'எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாற்றுக் கருத்துக்களை ஜீரணிக்க முடியாது தடுக்க முனைவது ஒரு போக்காகவே வளர்ந்து வந்துள்ளது. இந்த வகையில் பத்திரிகைத் தாக்குதல், தடை செய்தல், எரித்தல், பத்திரிகையாளர்களை மிரட்டுதல், கொலை செய்தல் என்பன தொடர்ச்சியாகவே நடைபெற்று வந்துள்ளன. இந்த வளர்ச்சியின் இன்னொரு அம்சமாகவே பாரிஸ் 'ஈழநாடு' காரியாலயம் தாக்கப்பட்டிருக்கிறது. இத்தாக்குதல் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தப்பட முடியாதது. கண்டிக்கப்பட வேண்டியது' எனப் பிரான்ஸிலிருந்து வெளிவரும் 'சமர்' சஞ்சிகை, பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது; எமது போராட்ட வரலாற்றில் இந்திய இராணுவம் 'ஈழநாடு', 'ஈழமுரசு' பத்திரிகைக் காரியாலயங்களைக் குண்டு வைத்துத் தகர்த்தது.

→15

## லண்டனில் சுவரொட்டிகள்

மாத்தையா மீதான மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து லண்டன் நகரச் சுவர்களில் பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ருட்டிங், ஈஸ்ட்ஹாம் போன்ற இடங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் காணப்படும் சில வரிகள் இவை:

- மக்கள் முன்னணிக் கட்சியைக் கலைத்ததை, எதிர்த்தது துரோகமா?
- மாத்தையாவும் நூறு போராளிகளும் கொல்லப்படுவதைக் கைகட்டி நின்று பார்க்கப் போகிறோமா?
- மத்திய குழுவுக்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்டது துரோகமா?
- நாம் நேசிப்பது புலிகளையே; பலிகளை அல்ல!
- தமிழீழத்தை நேசித்தது மாத்தையா செய்த துரோகமா?

மாத்தையா ஆதரவு சக்திகளால் அவருக்கு எதிரான கருத்துக்கள் வந்ததற்காக பாரிஸ் ஈழநாடு பத்திரிகைக் காரியாலையம் எரிக்கப்பட்ட செய்தி,வாசகர்கள் அறிந்ததே!

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு அடிக்கப்படும் சாவுமணியா?

**1994ம் ஆண்டைத் தேர்தல் ஆண்டாக ஜனாதிபதி அறிவிப்பு**

- உள்ளூராட்சித் தேர்தல்
- பாராளுமன்றத் தேர்தல்
- ஜனாதிபதி தேர்தல்

**தம்பு திருநாவுக்கரசு**

சுதந்திரமான. ஜனநாயகரீதியிலான ஒரு தேர்தலை நடத்துவதற்கு உரிய இசைவான சூழல் இல்லை. யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவும் நிலைமையிலும் வவுனியாவிலோ அல்லது கிழக்கிலோ உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த முடியாது என சிறுபான்மை கட்சிகளும் ஆளும் கட்சியின் பிரதேச முகவர்களும் வலியுறுத்திய போதிலும் அந்த ஜனநாயகரீதியான குரல்களை அலட்சியப்படுத்திவிட்டு வடகிழக்கில் உள்ள சிறுபான்மை மக்கள் மீது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலங்கையின் ஜனாதிபதி திணித்துள்ளார்.

நியாயமான, அரசியல் ஜனநாயக உரிமைகளைக் கோரி, நாடு சுதந்திரமடைந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பல வகையான வழி முறைகளிலும் தொடர்ச்சியாகப் போராடிவரும் சிறுபான்மையினரான தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும் ஓரங்கட்டி நசுக்கி அழிப்பதற்கான முழுமுயற்சிகளையும் புதிய ஜனாதிபதியான டிங்கிரி பண்டா விஜேதுங்க மேற்கொண்டு வருகின்றார். இந்த முயற்சிகளுக்கான ஆரம்ப பிள்ளையார் சுழிதான் மார்ச் முதலாம் திகதி நடாத்தப்படவுள்ள, கிழக்கு மற்றும் வவுனியா நகரசபை உட்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலாகும்.

மேலோட்டமான பார்வையில் ஒரு ஜனநாயக நாட்டில் காலத்திற்குக் காலம் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி தமது அரசியல் உரிமைகளை நிலைநாட்டவும், அரசியல் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிகோல உதவும் தேர்தல்களையே இலங்கை அரசும் நடாத்தப் போகிறது என்று தோற்றலாம். ஆனால் பல உள்நோக்கங்களைக் கொண்டுள்ள இந்த தேர்தல்கள் இந்த நாட்டின் ஜனநாயக, அரசியல் வழிமுறைகளுக்கு அடிக்கப்படும் சாவு மணியாகவே விளங்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

சமமான அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதை எதிர்த்து நாட்டின் வடகிழக்குப் பிரதேசத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மிகக் கோரமான யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது இனப்பிரச்சினையல்ல; வெறுமையான பயங்கரவாதப் பிரச்சினையே எனக் கூறி அதற்கு இராணுவ அடக்குமுறையின் மூலமே தீர்வு காணமுடியும், தீர்வு காணப்பட வேண்டும் எனத் தீர்மானித்து அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இதனால், யுத்த செலவினங்கள் 25 ஆயிரம் கோடி ரூபாவாக உயர்ந்து நாட்டின் மொத்த செலவினத்தில் 30 வீதத்தை எட்டிப் பிடித்துள்ளது. ஒரு லட்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டின் படைவீரர்களில், வடகிழக்கு யுத்தம் தந்த கசப்பான போர் முனை அனுபவங்கள் காரணமாக 22,522 படைவீரர்கள் தமது படையணிகளை விட்டுத் திருட்டுத்தனமாக வெளியேறி ஓடிப்போயுள்ளார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் ஆயுதங்களோடு தலைமறைவு வாழ்க்கை நடத்துவதோடு ஆங்காங்கே பொது மக்களைத் துவக்கு முனையில் மிரட்டியும் கொலை செய்தும் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களது இந்தச் செயல் பொதுமக்களின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாயுள்ளது. கடந்த 1987 ஆம் ஆண்டுவரை அரசுக்கு எதிராகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தனிநாடு கோரி ஆயுதப் போராட்டம் நடத்தி, இந்திய -இலங்கை ஒப்பந்தத்தையடுத்து ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட, விடுதலைப்புலிகளைத் தவிர்ந்த ஏனைய குழுக்கள் அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறை காரணமாகச் சங்கடமான நிலைமைக்கு ஆளாகியுள்ளன. புலிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசபடைகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளையில் அரசியல் ரீதியாக இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஓர் இறுதித் தீர்வுக்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன.

எனினும் அரசாங்கத்தின் உறுதியற்ற போக்கும் தமிழ்ப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நம்பிக்கை வைக்கக் கூடிய தீர்வுக்கான ஆலோசனைகளை, இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் போது முன்வைக்காத நழுவல் தன்மையும் இந்தக் குழுக்களின் எதிர்காலம் குறித்த நியாயமான கவலைகளை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகின்றது..

இலங்கையின் சிறுபான்மை இனமக்கள் பெரும்பான்மை இனத்தவரிலேயே சார்ந்திருக்க வேண்டும்- அவர்களிலேயே தங்கியிருக்க வேண்டும்; இதுகால வரையும் உறுதியான அரசியல் நிலைப்பாட்டிற்கும், திடமான அரசாங்கத் தலைமைகள் ஏற்படுவதற்கும் பெரும்பான்மை இன மக்கள் சிறுபான்மை இனமக்களின் ஆதரவில் தங்கியிருந்த நிலைமைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற வெளிப்படையான முடிவோடு- அரசாங்கம் செயற்படத் தொடங்கியுள்ளது.

வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினாலும் வடகிழக்குப் பகுதிகளைத் தவிர்த்து ஜனாதிபதி தேர்தலை இப்போதுள்ள அரசியலமைப்பு விதிகளுக்கமைய நடத்த முடியாது. எனினும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஐ.தே. கட்சியே தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும், நாட்டில் ஜனநாயக நடைமுறை உரிய முறையில் பேணப்படுகின்றது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவும் வேண்டும். அதற்கு முன்னோடியாக, பேரினவாதம் தீவிர முனைப்பெடுத்துள்ள தெற்கிலும், யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள போதிலும் படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ள பிரதேசங்களில், ஜனநாயக வழிமுறையில் இணைந்துள்ள, தமிழ்க் குழுக்கள் மற்றும் முஸ்லீம் அமைப்புக்கள் அரசியல் நடத்தும் பகுதிகளிலும் தனது தேர்தல்கால நிலைமைகள் எப்படியிருக்கிறது என்பதை நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் வடகிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் தென்மாகாண சபைக்கான தேர்தலையும் அரசாங்கம் சோதனைக் களமாக எதிர்நோக்கவுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு வந்த உடனேயே அதிகாரங்கள் முழுவதும் குவிக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படல் வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி விஜேதுங்க, எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப எதிர்ப்புக்கு மத்தியிலும் புதிய ஜனாதிபதியை இலகுவான முறையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவதற்குரிய மாற்று வழியை தோற்றுவிப்பதற்கான வழிமுறைகளில் இறங்கியுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரினதும் நேரடியான வாக்களிப்பின் மூலம் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் முறையை மாற்றி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளிடையே வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் புதிய முறையை ஏற்படுத்துவதற்கான முயற்சியிலும் விஜேதுங்க முனைந்துள்ளார். இதற்கென பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைத்து, புதிய ஜனாதிபதி தேர்தல் முறையை சிபாரிசு செய்து ஐ.தே.கட்சியின் சார்பில் அதன் தலைவர் என்ற முறையில் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் முறையிலும் பார்க்க இலங்கையில் உள்ள ஜனாதிபதி தேர்தல் முறை வித்தியாசமானதாகும். பாராளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியாக உள்ளது. நாட்டில் உள்ள எல்லாத் தேர்தல் தொகுதிகளிலும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு நிலைமைகள் இடம்தராவிட்டால் ஒருசில தொகுதிகளுக்கான தேர்தலை வசதிக்கேற்ப ஒத்திவைத்து விட்டு நிலைமைகள் இசைவாக உள்ள தொகுதிகளில் தேர்தலை நடத்த முடியும். ஒத்திவைக்கப்பட்ட தொகுதிகளுக்கான தேர்தலை பின்னொரு திகதியில் நடத்தி அப்பகுதிகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ள இலங்கையின் தேர்தல் நடைமுறைச் சட்டம் இடமளிக்கின்றது.

ஆனால், ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்த மட்டில் முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றது. எனவே, நிலைமைகள் சாதகமாக இல்லாமலிருந்தால் குறிப்பிட்ட பகுதிகளின் வாக்கெடுப்பை வரையறுக்கப்பட்ட காலம் வரை ஒத்திவைக்க முடியும். ஆனால் முதலில் வாக்கெடுப்பு நடைபெற்ற இடங்களின் வாக்குகளை எண்ணும் பணியை, ஒத்திவைக்கப்பட்ட பகுதிகளில் வாக்கெடுப்பை நடத்தி முடிக்கும் வரையில் ஆரம்பிக்க முடியாது. அதாவது நாட்டின் முழுப் பிரதேசங்களிலுமே வாக்கெடுப்பு முடிந்த பின்புதான் வாக்குகளை எண்ணித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியும்.

ஆகவே, இன்றைய சூழ்நிலையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடகிழக்குப் பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பை முழுமையாக நிறுத்திவிட்டு தேர்தலை நடாத்த முடியாது. இந்த வகையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவும் யுத்த நிலை காரணமாகவும், அரசாங்கத்தின் கை வடக்கில் எந்த அதிகாரமும் அற்றதாகப் போயிருப்பதாலும், அரசிற்கு இன்றைய ஜனாதிபதி தேர்தல் முறை ஒரு நெருக்கடியாகவே உள்ளது.

இந்த நிலைமையில், ஜனாதிபதி தேர்தலை நடத்தி முடிப்பதற்கான வழிமுறை என்ன?

அரசாங்கத்தின் வசதிக்கும், ஆளும் கட்சியின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் இலங்கையின் அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து ஜனநாயக நடைமுறை விதிகளுக்கும் அரசியல் அமைப்பின் வழிமுறைகளுக்கும் அமையவே செயற்படுகின்றோம் என்று வெளி உலகிற்கு காட்டிக் கொள்கின்ற செயல் முறையையே ஜனாதிபதி தேர்தலிலும் ஐ.தே.கட்சி அரசாங்கம் கடைப்பிடிக்க முனைந்துள்ளது.

தனக்கு இதுவரையிலும் கிடைத்துள்ள ஆலோசனைகள் சிபார்சுகளின் அடிப்படையில் ஜனாதிபதியைப் பாராளுமன்ற அங்கத்தவர்களே தெரிவு செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதி விஜேதுங்கவின் கூற்றையே பெரும்பான்மையான ஐ.தே.கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு சிபாரிசு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மார்ச் மாதம் இக் குழுவின் முடிவுகள் வெளியிடப்படவுள்ளன.

புதிய ஜனாதிபதியை நாடு தழுவிய ஒரு தேர்தல் மூலமாக அல்லாமல் பாராளுமன்ற அங்கத்தவர்களது வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யலாம் என அரசியலமைப்பை மாற்றிவிட்டால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியதாக முடியும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்ததும் ஜனநாயக மரபின்படி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்றது. இது முதலாவது.

இரண்டாவதாக, நாடளாவிய தேர்தலின் மூலம் விரும்பிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படும் போது சிறுபான்மை மக்களின் நிபந்தனைகளுடன் கூடிய ஆதரவைத் தேடிப் போக வேண்டிய நிலைமைக்கு ஆளாக வேண்டியதில்லை.

பேரினவாதம் முனைப்பெடுத்து, அதற்கு ஜனாதிபதி விஜேதுங்கவும் (பின் விளைவுகளையோ அல்லது நீதி நியாயங்களையோ கருத்திற் கொள்ளாமல்) முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபாரிசுகளை ஏற்கச் செய்து அதே சிங்களப் பேரினவாதத்தின் துணையோடு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறமுடியும் என்று ஜனாதிபதி விஜேதுங்க மற்றும் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீட வட்டாரங்களும் உறுதியாக நம்புகின்றன.

இதற்கு, பூநகரி தாக்குதலின் மூலம் முன்னிலும் பார்க்க ராணுவ ரீதியாக கையோங்கிய நிலையில் காணப்படும் புலிகளின் அச்சுறுத்தல்களும் வடகிழக்கு போர் நிலைமைகளும் நிச்சயம் கைகொடுத்து உதவத்தான் போகின்றது.

அரசியல் திருத்தத்திற்கு தேவையான பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற்றதும், அதனை உறுதி செய்து கொள்வதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கம் ஈடுபடத் தயாராக இல்லை; ஈடுபடவேண்டிய தேவையுமில்லை.

இந்த திருத்தத் தீர்மானத்திற்கு உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டாலே போதும். இதற்கு இன்றைய நெருக்கடி நிலைமைகள் சாதகமாகவே காணப்படுகின்றன.

சில ஆண்டுகளின் முன்பு பாகிஸ்தானின் அரசதலைவர் பூட்டோவுக்கு எதிராகப் புரட்சி செய்து சியாவுல் ஹக் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது அவரது அதிகாரமும் நிர்வாகமும் செல்லுப்படியற்றது எனச் சுட்டிக் காட்டி பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் சியாவுல் -ஹக்குக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்குகளை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் நாட்டின் அப்போதைய பொது நலன்களைக் கருத்திற் கொண்டு அந்த அரசின் ஆளுமையை ஏற்றுக் கொண்டது.

சியாவுல் ஹக்கின் ஆட்சியும் நிர்வாகமும் இல்லாது போனால் அரசு இல்லாத ஓர் (Anarchy) ஓர் ஆபத்தான நிலைமையை நாடு எதிர்கொள்ள நேரிடும். பல விபரீதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பாகலாம் எனச் சுட்டிக் காட்டி அந்த அரச நிர்வாகத்திற்கு சட்டரீதியான ஓர் அங்கீகாரத்தை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் வழங்கியது.

அதேபோல, இலங்கையில் கடந்த 1956ஆம் ஆண்டு தனியார் பஸ் கம்பனிகளை பண்டாரநாயக்கா அரசு தேசியமயமாக்கியது. அப்போது களனி தொகுதிக்கும் தம்பதெனியா தொகுதிக்கும் இரண்டு வெவ்வேறு வேட்பாளர்களுக்குப் பதிலாக ஆர்.ஜீ.சேனநாயக்காவே இரு தொகுதிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இதனால் அரசியலமைப்பு விதிகளின்படி பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையில் ஒன்று குறைந்திருந்தது.

இந்த குறைபாட்டை சுட்டிக்காட்டி, அன்றைய பாராளுமன்றம் சட்டரீதியாக பூரணத்துவம் அற்றது என்றும் எனவே அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய அமைக்கப்படாத ஒரு பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பஸ் கம்பனிகளின் தேசியமயச்சட்டம் சட்டரீதியாகச் செல்லுபடியற்றது. அதனை ஏற்க முடியாது என பாதிக்கப்பட்ட பஸ் கம்பனி உரிமையாளர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அன்றைய சூழ்நிலையில் குறைபாடுடையதாக இருந்தாலும் அந்த பாராளுமன்றம் அங்கீகரிக்கத் தக்கது. ஆகவே அதனால் நிறைவேற்றப்பட்ட சட்டமும் செல்லுபடியானது எனத் தீர்ப்புக் கூறிய உயர் நீதிமன்றம் பண்டாரநாயக்கா அரசுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்கியது.

இது போலவே நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஸ்திரமான அரசுக்கும் வட-கிழக்கில் மட்டுமல்லாமல் முழு நாட்டிலுமே புலிகள் அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள். தீர்க்கப்படாத ஒரு யுத்தமும் நடைபெறுகின்றது என்ற காரணங்களைக் காட்டி ஜனாதிபதி விஜேதுங்க தமக்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்த மசோதாவுக்கு உயர்நீதிமன்றத்தின் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.

ஆகவே, வெள்ளி திரையில் ஓடிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைமையிலான அரசாங்கத்தின் சர்வாதிகார பாணியிலான பெரும்பான்மை இனவாதப் போக்கை யார், எப்படி முடிவுக்கு கொண்டு வரப் போகிறார்கள்?

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
4.ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

பிரதம ஆசிரியர் சேரன்

# தேர்தலும் ஜனநாயகமும்

மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான தயாரிப்பு வேலைகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்து விட்டார்.

சகலவிதமான 'பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு'மாக இராணுவமும், பொலிஸ், விசேட அதிரடிப்படை என்பனவும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன, என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தமது 'பணிகளை' முடிந்தளவு 'சிறப்பாகச்' செய்து வருகின்றன.

ஆளுங்கட்சியினர் தேர்தலில் 'எப்படியாவது' வெற்றிபெற்று விட வேண்டும் என்பதற்காக தீவிரமாக முயன்று வருகின்றனர். அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலின் வெற்றி தோல்வியை விட, அது 'அமைதியாக' நடந்தது என்று காட்டி விடுவதே போதுமானது. தேர்தல் நடாத்தப்படுவதே அதைப் பொறுத்தவரையில் வெற்றிதான்!

கள்ள வோட்டுப் போடுபவர்கள், ஆள்மாறாட்டம் செய்யும் நிபுணர்கள் இன்னும் இன்னோரன்ன திறமை வாய்ந்த நபர்களும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கேள்வி.

தேர்தல் நடக்கப் போகிறது.
இராணுவம் 'சிவில்நிர்வாகம்' செய்யும் பிரதேசங்களில், வாய்திறந்தால் புலி என்று சீல் குத்தப்பட்டு 'தூக்கிக் கொண்டு போகப்படும்' பிரதேசங்களில் மக்களுக்குத் தங்களது பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு கோரித் தேர்தல் நடாத்தும் ஆட்சியாளர்களின் சூசகமான கோரிக்கை என்ன என்பது வெளிப்படை.

எந்தக் கட்சி தெரிவு செய்யப்பட்டால் என்ன, எந்தச் சுயேட்சைக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டால் என்ன அவர்கள் அனைவரும் ஆளும் கட்சியினரின் அல்லது அரசாங்கத்தின் பிரதிநிதிகளே என்பது தான் அந்தச் செய்தி.

பணத்திற்கும், பொய்யான வாக்குறுதிகட்கும், மிரட்டல்களுக்கும் மத்தியில் பலவந்தமாகப் பெறப்படவுள்ள இந்த வாக்குகளால் தெரிவாகப்போகும் பிரதிநிதிகள் அப்பிரதேசத்து மக்களது பிரதிநிதிகளாகப் போகின்றார்களாம்!

இவையெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் 'ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தின் அருமையான சின்னங்கள்!

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஒரு பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் அகதிகளாகவோ, இடம்பெயர்ந்தோ வாழ்க்கையில், 'விடுவிக்கப்படாத' பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வாக்களிப்பதற்கான சூழ்நிலையே கிடையாத நிலையில், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பாரம்பரிய மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு பெருமளவு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில் துப்பாக்கி ஏந்தி யுத்தம் செய்யவும், அப்பிதேச மக்களை தாக்கவும் என்று அனுப்பப்பட்ட இராணுவத்தின் 'பாதுகாப்புடன்' இந்த ஐந்து நட்சத்திர ஜனநாயகத் தேர்தல் நடக்கவுள்ளது!

வடக்குக் கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினையே என்று ஜனாதிபதி சவால் விடவும்; கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்களை விமானப்படையினர் செய்யவும், கடற்பிரதேசங்கள், வயல்கள் போன்றவற்றை நம்பிவாழும் ஏழை மீனவர்களை விவசாயிகளை அவர்களது தொழிலிலீடுபடாது தடுக்கவும், கடத்தவும், பாலியல் பலாத்காரம் செய்யவும், கொன்று போடவும் ஏன் வயல்களுக்குத் தீமூட்டவும் கூட ஜனநாயகம் நிலவுகின்றது இந்த நாட்டில்! வெறும் பெயரளவில் அல்லாமல் எல்லாவிதத்திலும், முன்னுதாரணத்திற்கு எந்தவொரு நாடுமில்லாத அளவுக்கு சிறப்பான ஜனநாயகம் நிலவுகிறது இந்த நாட்டில்! அந்த ஜனநாயகத்தின் இன்னொரு வெளிப்பாடு தான் இப்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்!

தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் தமிழ்க்கட்சிகளுக்கு இந்த ஐந்துநட்சத்திர ஜனநாயகம் ஒன்றும் புதியது அல்ல.

தேர்தலை நிராகரிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உம் த.வி.கூ.யும் கூட இந்தியப்படையின் நல்லாசியின் கீழ் இத்தகைய ஒரு ஜனநாயகத்தை மனப்பூர்வமாக நேசித்து, அக்காலத்தில் நடந்த தேர்தலில் போட்டியிட்டவர்கள். தேர்தலில் நிற்கும் கட்சிகளோ, அதிகாரம் துப்பாக்கி ஏந்திய மனிதனுக்கு உள்ள பிறப்புரிமையாகக் கருதியவை.

பொதுக்கூட்டம் போட முடியாத நிலையிலும், வேட்பாளர் மனுத்தாக்கல் கூட செய்ய முடியாத நிலையிலும் ஜனநாயகம் நிலவ முடியும் என்று கூறியவர்கள் இவர்கள். யூ.என்.பி.யைப் பொறுத்தவரை அதன் ஜனநாயகம் பிரசித்தமானது.

தெருமுனைகளைச் சுடுகாடாக்கிய 'கட்சி' அது. ரயர் நெருப்பில் தன் சொந்த இனத்தவரையே எரிப்பதில் மற்றெந்தத் தமிழ் இயக்கங்கட்கும் தான் தாழ்ந்ததல்ல என்று நிரூபித்த கட்சி அது. தேர்தலில் வென்றவர்களைக் கூட சிறையில் பூட்டிவைக்கின்ற ஜனநாயகப் பண்பு அக்கட்சிக்கு உண்டு.

ஆக, எல்லா ஜனநாயகப் பாரம்பரியங்களும் சேர்ந்து ஜனநாயகத் தேர்தல் ஒன்றை நடத்த முன்வந்துள்ளதை நாம் எல்லோரும் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

இந்த ஜனநாயகப் பண்பு என்ன, அதன் மாட்சி என்ன என்பதைப் புரிந்து கொள்ளாத மக்களைத்தான் என்ன செய்வது என்று புரியவில்லை.

துப்பாக்கிக் குண்டு, கடத்தல், பாலியல் பலாத்காரம், இன்ன பிற மிரட்டல்களால் கூட இவர்களுக்கு ஜனநாயகத்தை போதித்து புரிய வைத்துவிட முடியாமல் இருக்கிறது.

யாருக்கும் வோட்டுப் போடுவதால் நமக்கு என்ன பயன் என்கிறார்கள் அவர்கள்.

மக்களின் இந்தச் சுயநலமிக்க கேள்வி மிகவும் அபத்தமானது.
பயன் கருதாத தொண்டு செய்து புகழ்பெற்ற மக்கள் எம் தமிழ் பேசும் மக்கள்.
சுதந்திரத்துக்குப் பின்னான இத்தனை கால வரலாற்றில் அவர்கள் செய்த பயன்கருதாத் தொண்டுகள் பல.
அப்படி என்றால் ஏன் இம்முறையும் அப்படி அவர்கள் செய்யக்கூடாது?
இத் தேர்தலில் நிற்பவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது?
தேர்தல்கள், மக்களின் நலனுக்காக நடத்தப்படுவதாகச் சொன்னதற்காகவே, மக்கள் அப்படி எதிர்பார்க்கலாமா?
ஜனநாயகத்தின் குரல்வளையில் ஏறி நின்று, தேசிய இனமொன்றைச் சிரச்சேதம் செய்ய வாளேந்தி நிற்கும் இந்தக் கட்சிகளதும், சுயேட்சைக் குழுக்களதும் கொலை வெறிக்கு அங்கீகாரம் வழங்க அவர்கள் ஏன்தான் மறுக்கிறார்களோ?

உங்கள் யாருக்குமே புரிந்து கொள்ள முடியாத இக் கேள்விக்குப் பதில் இதுதான்:
'மக்கள் உங்கள் ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தை விரும்பவில்லை! அவர்கள் விரும்புவது அமைதியான வாழ்வு. எனவே உங்கள் ஐந்து நட்சத்திர ஜனநாயகத்துக்கு அவர்கள் ஒருபோதும் வாக்களிக்கப் போவதில்லை! அவர்கள் செய்யப் போவதெல்லாம் உங்களையும் உங்கள் தேர்தல்களையும் பகிஷ்கரிப்பதுதான்! கூடவே இன்னுமொரு விடயத்தையும் செரல்ல வேண்டும். தேர்தலை நிராகரிக்குமாறும் சில கட்சிகள் கேட்கின்றன. இந்த ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தை ஏற்கின்றவர்கள்தான் நிராகரிக்கின்றதைப் பற்றிப் பேசுவார்கள். வாக்குச் சீட்டுப் போடுமிடத்துக்குப் போய் வாக்குச்சீட்டை கிழிக்குமாறு அவர்கள் கேட்கிறார்கள். தேர்தலில் இருக்கின்ற, இந்தத் தேர்தல் முறையை நம்பச் செய்கின்ற திருட்டுத்தனம்தான் இது என்கின்ற விடயத்தையும் மக்கள் விளங்கி வைத்திருக்கிறார்கள். நிராகரிப்பது என்ற பெயரால் அவர்களை ஏமாற்றி விட முடியாது! உண்மையில் அவர்கள் செய்யப் போவது நிராகரிப்பல்ல! பகிஷ்கரிப்பே! சுத்தமான புறக்கணிப்பு!

# முஸ்லீம் காங்கிரசின், தேர்தல் காலத்துத் தேசியவாதம்

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லீம் கட்சிகளான இலங்கை முஸ்லீம் கட்சியும், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசும் போட்டியிடுகின்றன. பிரதானமாக முஸ்லீம்கள் வாழ்கின்ற அனைத்து இடங்களிலும் முஸ்லீம் காங்கிரஸ் போட்டியிடுகிறது. முஸ்லீம் காங்கிரசுக்கு பிரதான போட்டியாக தேர்தலில் நிற்பது ஐக்கிய தேசியக் கட்சியே என்பதால், அது ஐ.தே.கவின் முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதத்தை எதிர்த்து தனது தேர்தற் பிரசாரக் கூட்டங்களில் பேசிவருகிறது.

உண்மையில் இலங்கை அரசாங்கத்தின் முஸ்லீம்கள் மீதான இன எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒன்றும் புதியவை அல்ல. இந்தத் தேர்தற் காலத்தில் மட்டும் உருப்பெற்றவையும் அல்ல. ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சியுடைய இத்தகைய இனஎதிர்ப்பு போக்குப்பற்றி முஸ்லீம் காங்கிரஸ் இதற்குமுன் எங்கும் தனது எதிர்ப்பைப் காட்டியதில்லை. அவ்வப்போது பட்டும் படாமலும் வெளிவந்த பத்திரிகை அறிக்கைகளோடு சரி. அத்துடன் நிறுத்திவிடாது இக்கட்சி தனது கட்சி மாநாட்டுக்கு சிங்கள இனவாதத்தை இறுக்கமாக நிறுவனப்படுத்தத் துடிக்கும் ஜனாதிபதியையும் பிரதமரையும் பிரதம விருந்தினர்களாகக் கூட அழைத்திருந்தது!

பெருமளவு முஸ்லீம்களை கொண்ட அவர்களது பிரதேசமான அம்பாறையில் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான நிலப்பரப்பில் 2/3 பங்கு (1005.92 ச.மைல்) நிலம் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டுள்ளது. தீகவாபி புனித பிரதேசத் திட்டத்தின் கீழ் 980 ஏக்கர் முஸ்லீம்களின் நிலம் பறிக்கப்டுள்ளது. தமிழ் முஸ்லீம் மக்களுக்காக எஞ்சியிருப்பது இம்மாவட்டத்தில் 746.5 ச.மைல் நிலப்பரப்பு மட்டுமே!

1948 இல் மொத்தம் 3000 ஆக காணப்பட்ட சிங்கள மக்களின் தொகை இப்போது 146 371 ஆகியுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் அதிகளவு சிங்கள பிரதிநிதிகளை சேர்த்துக் கொள்வதற்காக மொனராகலை மாவட்டத்துடன் இருந்த மகா ஓயா, பதியதலாவை என்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் முஸ்லீம்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட திட்டமிட்ட இன ஒதுக்கல் நடவடிக்கையாகும். அம்பாறை மாவட்டத்தின் தலைப்பட்டினமான அம்பாறை பெயர் மாற்றப்பட்டு அனைத்து நிர்வாகங்களும் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளமை. முஸ்லீம்கள் பெருமளவு வாழும் பிரதேசத்திற்கு 'திகாமடுல்ல' என்ற சிங்களப் பெயரை வைத்துள்ளமை எல்லாமே முஸ்லீம் மக்களுக்கெதிரான இன ஒதுக்கல் நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்கள்

திருமலையில் முஸ்லீம் மக்களின் நிலை 2ம் இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. நகர்ப்புறத்தில் இருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்!

இவையெல்லாம் இருந்தும் முஸ்லீம் மக்களின் தனித்துவம் குறித்து இக்கட்சிகள் முன்பெல்லாம் எதுவும் செய்ததில்லை. இன்று பெருமளவில் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்ற முறையில் அங்கு -தமிழ் முஸ்லீம் -கசப்புகள் காரணமாக உருவாகியுள்ள நெருக்கடிகளின் மத்தியில் ஒரு தேர்தலை வலிந்து திணிக்க முன்வந்துள்ளது இந்த அரசு. இந்தச் சதி குறித்தும், வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான முஸ்தீபாக நடத்தப்படும் இத்தேர்தல் குறித்தும், தேர்தலுக்கான தயாரிப்புகளின் போது நடைபெற்ற, நடைபெறும் தில்லுமுல்லுகள் குறித்தும் இக்கட்சிகள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

தேர்தல் திருவிழாவை நடாத்துபவர்கள் அதன் பலன்களை அனுபவிக்கப் போகிறார்கள்.

அதற்காக கடைவிரித்திருப்பவர்களுக்கும் ஏதாவது கிடைக்கக்கூடும்.
ஆனால் மக்களுக்கு?
அவர்கள் தமிழரோ முஸ்லீமோ ஏன் சிங்கள்வரோ யாராயிருந்தாலும் தேர்தலின் பின் கிடைக்கப் போவதெல்லாம் ஒன்றுதான்.

யுத்தசூழலுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்படுதல் தான்!

# அம்பாறை: தேர்தலும் மோதலும்

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நிலைமைகளைக் கவனிக்கும் பொழுது, அங்கு முஸ்லீம் காங்கிரஸ், ஐ.தே.க. என்பவற்றுக்கிடையே பலமான போட்டி நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

முஸ்லீம் காங்கிரஸின் பலமான தளமாகக் கருதப்படும் இப்பிரதேசத்தில் நடைபெறும் இத்தேர்தல் இங்குள்ள சில ஐ.தே.க.வைச் சேர்ந்த முஸ்லீம் அமைச்சர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தலாக உள்ளது. முக்கியமாக அமைச்சர் மன்சூரின் அரசியல் எதிர்காலமே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் பகுதிகளில் ஐ.தே.க வெற்றி பெறுவதில் தான் தங்கியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்தில் செல்வாக்குள்ள அமைச்சராக இருந்த இவரின் நிலை தற்போது மிகவும் இறங்கியுள்ளது. அம்பாறை மாவட்ட முஸ்லீம்களின் ஏன் கிழக்கு மாகாண முஸ்லீம்களின் தலைவராகத் தன்னைக் கருதிக் கொள்ளும் இவர் எப்போதும் ஆளும் ஐ.தே.க அரசின் நலன்களுக்குட்படுத்தியே முஸ்லீம்களின் நலனையும் கருதியவர் என்கின்ற காரணத்தினால் இவருக்கு முஸ்லீம்களின் மத்தியில் செல்வாக்கு குறைவு என்பதும் உண்மை. மற்றைய அமைச்சர் எம். ஏ.அப்துல் மஜீது, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டவர் என்ற ரீதியில் தற்போதுள்ள ஐ.தே.க. அரசில் செல்வாக்கு குறைந்தவராகவும் உள்ளார். இதன் காரணமாக இவர்கள் இருவரும் இன்று இரவு பகல் என்று பாராது ஐ.தே.க.வின் வெற்றிக்கு உழைப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒன்றில் அரசியலை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அம்பாறை முஸ்லீம்கள் மத்தியில் ஐ.தே.கவுக்கு செல்வாக்கு இருப்பதை நிலைநாட்டி அதனூடாக தங்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த பொதுத் தேர்தலில் இவர்கள் ஐ.தே.கவில் வேட்பாளர்களாக நிற்பதோ அல்லது தேசியப் பட்டியல் மூலமாக எம்.பி.யாவதோ எல்லாமே அண்மையில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலிலேயே தங்கியுள்ளது. இதன் காரணமாக போட்டிக் கட்சியான முஸ்லீம் காங்கிரஸுடன் பலாத்காரத்தில் எல்லாம் இவர்கள் ஈடுபட வேண்டியுள்ளது. இன்று அம்பாறை மாவட்டத்தில் ஒவ்வொருநாளும் எங்கேயாவது ஒரு இடத்தில் ஐ.தே.க, முஸ்லீம் காங்கிரஸ் என்பன அடிதடியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதில் இருந்து உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.


இவ்வாறு இவ்விரு கட்சிகளும் அடிபடுவது அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லீம்களின் ஒற்றுமைப்பாட்டிற்கு ஆபத்தானது என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒனறு. முஸ்லீம்களின் பிளவில் குளிர்காயவும் அதனூடாக தம்முடைய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் இவர்கள் ஆயத்தமாகவே இருக்கின்றனர்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க தமிழ்ப் பிரதேசங்களில் இவ் உள்ளூராட்சித் தேர்தல்கள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. திருக்கோவில், ஆலயடிவேம்பு பிரதேசங்களில் விசேட அதிரடிப்படையின் வற்புறுத்தலின் பேரில் சுயேட்சைக்குழு ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது.


இச் சுயேட்சைக்குழுவில் போட்டியிடும் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் ரூபா 50,000/= வீதம் வழங்கவிருப்பதாகவும், முதற்கட்டமாக ரூபா 25,000/= வழங்கியிருப்பதாகவும் அறியக் கூடியதாக உள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்





# தொண்டமானின் அரசியல் உயிர்வாழ்வு எதுவரை?




— மலைத் தேவன் —

இலங்கைத் தோட்டங்களில் நிர்வாகப் பொறுப்பினை 22 கம்பனிகள் கையேற்று 420 தோட்டங்களை 1992 ஜூலை மாதத்திற்குப் பின் நிர்வகித்து வருகின்றன. குறுகிய காலத்தில் லாபம் அடையும் எண்ணத்தைக் கொண்டிருப்பது கம்பனிகளின் இயல்பு. இதனால் மூலவளங்கள் உறிஞ்சப்பட்டன. தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்பட்டனர். தொழிலாளர் பிரச்சினைகள் என்றுமில்லாத அளவு உக்கிரமடைந்துள்ளன. இதனால் தொழிற்சங்கங்கள் இடைவிடாது போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இப்போராட்டங்களை கம்பனிகள் அசட்டை செய்தன. அரசாங்க சார்பு தொழிற்சங்கங்கள், தோட்ட மறு சீரமைப்பு குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எந்த விதமான முன்னேற்றமும் காணப்படவில்லை.

அரசாங்கம், தோட்டங்களை கம்பனி நிர்வாகத்திடம் கையளித்ததோடு தோட்டங்களையும், தோட்ட மக்களின் பிரச்சினைகளையும் கை கழுவி விட்டது அவர்களின் பிரச்சினைகளுக்கான போராட்டத்தினை கண்டும் காணாமல் இருக்கமுடியவில்லை. ''தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு கொடுக்க முடியாது.'' என்று ஜனாதிபதி பகிரங்கமாக மேடையில் கூறி உள்ளார். அப்பொழுதும் மலையகத்தலைவர்களுக்கு ரோசம் வரவில்லை.

தொழிலாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதால், வருமானம் தேடி அலையும் நிலை உருவாகியுள்ளது. கந்தளாய், பெலவத்த கரும்பு தோட்டங்களுக்குச் சென்று, விரட்டப்பட்டுத் திரும்பிவிட்டனர். தொழிலாளர்களின் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே வந்தன. மக்கள் விரக்தியின் விளிம்பிற்கு வந்தனர்.

கம்பனிகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்க்க முன் வரவில்லை. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட தோட்ட மறு சீரமைப்புக் குழுவிற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பது வெளிப்பட்டது. ஜனாதிபதியின் பேச்சு தோட்டத்துறையில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் புறக்கணிப்பது புரிந்தது. இந்நிலையில் தொண்டமானுக்கு மலையக மக்களைத் திருப்திபடுத்த எதையாவது செய்ய வேண்டும், என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்க உறுதுணையாக இருந்ததால் அவர் அமைச்சர் பதவியைப் பெற்றார்.

இந்த 28 வருட காலத்தில் ஐ.தே.கட்சி அரசிடமிருந்து மலையக மக்களுக்கு அவர் பெற்றுக் கொடுத்த ஒரே ஒரு மகத்தான சாதனையாக பிரஜா உரிமை விளம்பரப்படுத்தப்படுகின்றது.

ஆனால் உண்மையில் சகல அரசாங்க உத்தியோகங்களிலும் பிரஜா உரிமை இல்லாத காரணத்தால் மலையக இளைஞர்கள் வாய்ப்பிழந்துள்ளனர். பிரஜா உரிமை பத்திரத்திற்குப் பதிலாக, சத்தியக் கடதாசி போதும் எனச் சட்டம் கூறிய போதும், அது நடைமுறையில் இல்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாச ஆகியோர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தொண்டமானின் முக்கியத்துவத்தை இருவரும் உணர்ந்திருந்தனர். அவர் அரசுக்கு வெளியில் இருந்தால் முழு தொழிலாள வர்க்கப் போராட்டமும் ஒரு புதிய வீச்சைப் பெறும், தமிழ் மக்களின் போராட்டம் ஒரு திருப்பு முனையை அடையும் என அவர்கள் உணர்ந்திருந்தனர். எனவே அவர் சார்ந்துள்ள மலையக மக்களைத் திருப்திப்படுத்த முடியாத போதும், அவரைத் தனிப்பட்ட முறையில் திருப்திப்படுத்துவதில் கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

டி.பி.விஜயதுங்கவும் கண்டியச் சிங்களவர். அவர் தொடர்ச்சியாக மத்திய மலைநாட்டில் தொண்டமானுடையதும், தமிழர்களுடையதும் ஆதரவை நம்பி இருக்க கூடாது எனவும், தொண்டமான் வெளியேறினால் கூட சிங்கள இனத்தின் மூலம் சிங்களவரின் ஆதரவைப் பெற்று, அதனை ஈடுசெய்து விடலாம் எனவும் கொள்கை வகுப்பாளர் சிலர் அவருக்கு ஆலோசனை கூறி வருவதாகத் தெரிகின்றது.

தொண்டமான், தோட்டத் தொழில் துறைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், மத்திய மாகாணசபையின் கல்வியமைச்சு தொடர்பாகவும் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு முயன்றதில், மத்திய மாகாண அமைச்சு தொடர்பாகப் பேச ஜனாதிபதி இணங்கவில்லை எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறின. இதனைத் தொடர்ந்து ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொண்டமானின் தனி கௌரவத்தைப் பாதிக்கும் விடயமாகவும் மாறிவிட்டது.

எனவே, தொண்டமான் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் சில காரியங்களை ஆற்றத் தொடங்கினார். தொண்டமான் எத்தகைய சவால்களையும் எதிர் நோக்கத் தயாராக இருக்க வேண்டும். இன்று எம்மில் பலர் அமைச்சர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். சூழ்நிலை மாறலாம் அதற்கேற்ப எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்'' எனத்தனது கட்சி முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் பேசினார். அத்துடன் மாகாண சபையில் ஐ.தே.கட்சிக்கு இ.தொ.கா வழங்கி வரும் ஆதரவை விலக்கிக் கொண்டு, எதிரணிக்கு ஆதரவு நல்குவது தொடர்பாக பேச்சு வார்த்தையை முடுக்கி விட்டார். இது தொடர்பாக ஜ.ஐ.தே. முன்னணித் தலைவர் காமினி திசாநாயக்கா, எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டார். ஓரளவுக்கு பேச்சுவார்த்தை இறுதி வடிவம் பெறும் நிலையில் உற்சாகமடைந்த எதிர்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் 'இன்னொரு மாகாணசபை, எதிர்கட்சிகளின் கைக்கு மாறப் போகிறது' எனப் பேசினார். இதை அடுத்து ஐ.தே.கட்சி விழிப்படைந்தது. அதன் பின்னரே இந்த ரகசியப் பேச்சுவார்த்தைகள் ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் சிறிசேனகூரேக்குத் தெரியவந்தது. இவ்விவகாரம் தனக்குத் தட்டுப் பட்டதும் அதன் விபரீத நிலையை உணர்ந்தார். இ.தொ.காவின் ஆதரவை மாகாண சபைகளில் விலக்கிக் கொண்டால் ஏற்படக் கூடிய விளைவுகளை, ஐ.தே.கட்சியின் மேல் மட்டம் பரிசீலனை செய்தது. உடனடியாக மத்திய மாகாண சபை பறிபோகும் ஆபத்தையும், ஊவா மாகாண சபை, ஒரே ஒரு அதிகப்படியான வாக்குடன் ஊசலாடும் நிலையையும் இருந்தது

இந்த முறுகல் நிலைமை பற்றி மூன்று விதமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

முதலாவது; 23 வருடங்களாக ஐ.தே. கட்சிக்கும் 16 வருடங்கள் இந்த அரசாங்கத்திற்கும் ஆதரவு நல்கியும் கூட தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை, தற்போது தனியார் கம்பனி நிர்வாகத்தின் முன், எப்போதும் இல்லாத அளவு கூர்மை அடைந்துள்ளது. மறுபுறத்தில் இந்த நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்து, தொழிலாளரின் பொருளாதார நலன் எதனையும் திருப்திப்படுத்த முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டைத்தான் தொண்டமான் செயல்படுத்துகிறார் என்பது ஒரு சாராரின் கருத்து.


இன்று கூர்மையடைந்திருக்கும் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகளைத் தணிப்பதற்காக ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் தொண்டமானின் செல்வாக்கு மங்கிவிடும். இதற்கு அரசாங்கம் ஒத்துப் போவதாக இல்லை. மறுபுறத்தில் இ.தொ.கா.அரசாங்கத்தில் இருப்பதனால், நன்மையடைந்து வரும் கொழும்பையும் மலையக நகரங்களையும் மையமாகக் கொண்ட வர்த்தகர்கள் தொண்டமான் அரசிலிருந்து வெளியேறுவதை விரும்பவில்லை. இந்நிலையில் அரசாங்கத்தில் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே, தொண்டமான் இத்தகைய ஒரு ஸ்ரண்டில் இறங்கி இருக்கிறார். ஜனாதிபதி, அவரை அழைத்து, மனமகிழக் கூடிய விதத்தில் நாலு வார்த்தைகளைக் கூறி, அவரை திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் நடந்து கொண்டால், அவர் தணிந்து விடுவார் என இன்னொரு சாரார் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

தொண்டமானைப்பற்றி, வெளி உலகம் என்னதான் பூதாரகாரமாக நினைத்தாலும். அவரது செல்வாக்கு பெருமளவு மலையகத்தில் சரிவு கண்டிருக்கின்றது என்பது தான் உண்மை. தேர்தல் மோசடி மூலமும், வடக்கு, கிழக்கு பிரச்சினையைப்பற்றி வீறாப்பான அறிக்கை விடுவதன் மூலமும், ஓரளவு அவர் அரசியலில் உயிர் வாழ்ந்து வருகின்றார்.

மலையக மக்களுடைய சூடேறிய பிரச்சினைகள் தற்போது புதிய விடயம் பெற்று வருகின்றன. அவற்றை வெளியுலகிற்குத் தெரியாமல் மூடி மறைக்க வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கின்றது. இல்லையென்றால் அவருடைய ''இமேஜ்'' சீர்குலைந்துவிடும். மலையக மக்களின் பிரச்சினையின் உண்மை உணரப்பட்டு, அது ஒரு விவகாரமாகி விடும். எனவே அதனை மறைக்க, வடக்கு கிழக்கு மக்கள் பிரச்சினையைப் பற்றி உரக்கப் பேச வேண்டிய அவசியம் இருக்கின்றது. எனினும் நடைமுறையில் கொழும்பில் நடைபெறும் கண்மூடித்தனமாக தமிழர் கைது போன்ற பிரச்சினைகளும் உரசல்களை ஏற்படுத்தி வருகின்றன. எனவே அடிக்கடி அவர் இத்தகைய ஸ்ரண்டுகளில், ஈடுபடுவார் என்பது மூன்றாவது தரப்பினரின் அபிப்பிராயம்.

இவ்வபிப்பிராயங்கள் சரிதானா அல்லது தொண்டமான் மலையக மக்களது பிரச்சினை குறித்து உண்மையிலேயே ஏதாவது செய்யப் போகிறாரா?

தொண்டமானின் நடவடிக்கைகள் தான் பதில் தரும்




# வாகரை மக்கள் ஒதுக்கப்பட்டவர்களா?

–சத்தியேந்திரா

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லையாகக் காணப்படும் வாகரைப் பகுதி இன்று முற்று முழுதாக ஒதுக்கப்பட்ட பகுதியாகவும், ஒரு இருண்ட பகுதியாகவுமே காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடிய நிலப்பரப்பைக் கொண்ட இந்த பிரதேச செயலாளர் பிரிவு இன்று கேட்பாரற்றும், இருக்கும் வளங்களைக் கூட மக்கள் பயன்படுத்த முடியாத நிலைமையிலும் உள்ளது. பெருமளவில் மீன்பிடித் தொழிலையே மேற்கொள்ளும் மக்களைக் கொண்ட இப்பகுதியில் மீன்பிடிப்பது கூடக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மீன் பிடிக்கும் இடங்களான மாங்கேணி, பனிச்சங்கேணி, காயாங்கேணி ஆகிய இடங்களிலெல்லாம் இராணுவத்தினரே நிலை கொண்டுள்ளனர். தற்போது இறால் பிடிபடும் காலமாக இருந்தும் கூட இப்பகுதி மக்கள் அத்தொழிலைக் கூடச் செய்ய அனுமதிக்கப்படவில்லை. உண்மையில் இங்கு வாழும் மக்கள் ஒரு காட்டு வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. நகரின் வேறு பகுதிகளுடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. ஒருவர் 3 கிலோ அரிசிக்கு மேல் கடையில் வாங்க முடியாது. அதே போன்றுதான் ஏனைய அத்தியாவசியப் பொருட்களும் வாங்குவதும், விற்பதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள ஒவ்வொருவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றே இராணுவத்தினர் நோக்குகின்றனர்.

இங்கு செயற்படும் அரச அலுவலகமான பிரதேச செயலகம் கூட ஏதோ பெயருக்கு ஒரு அலுவலகம் என்றளவில் தான் இருக்கின்றதே தவிர இதனால் மக்களுக்கு பெரிதாக ஒரு பிரயோசனமும் இல்லை. அதே நேரம் இங்குள்ள ஊழியர்கள் கூட அலுவலகத்தில் இருப்பதும் அரிதாக உள்ளது.

இவ்வாறான நிலைமைகளைக் கொண்ட வாகரைப் பிரதேசத்திற்கு மட்டக்களப்பில் இருந்து யாராவது பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் அவர்கள் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி முன்கூட்டியே மட்டக்களப்பு இராணுவப் பிரிகேடியரிடம் இருந்து அனுமதி பெற வேண்டும். இவ்வாறான நிபந்தனையை அடுத்து தொண்டர் ஸ்தாபனங்கள் கூட இப்பகுதிக்கு செல்வதை நிறுத்தி விட்டன. அரச செயற்பாடுகள் கூட அற்ற இப்பகுதி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை வார்த்தைகளால் அளவிட முடியாது.

பொதுக்கட்டிடங்கள், வீடுகள், அரச கட்டிடங்கள், பாடசாலைகள் என்று பல கட்டிடங்கள் இராணுவத்தினரால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. தற்போது இயங்கும் பாடசாலைகள் கூட மரநிழலிலும், தற்காலிகக் கொட்டில்களிலும் தான் நடைபெறுகின்றன. அரசின் வைத்தியசாலைகளில் கால் நடைகள் தான் உறைகின்றன. வாரத்தில் ஒரு நாளுக்கு மாத்திரம் ஒரு வைத்தியர் சொற்ப மருந்துகளுடன் வந்து நோயாளிகளைப் பார்வையிட்டுச் செல்கின்றார். ஓரிரு பஸ் வண்டிகள் வந்து செல்கின்றன. ஒதுக்கப்பட்ட வாழ்க்கை வாழும் இம் மக்கள் கூட இவ்வாறான அற்ப வசதிகள் இருந்தென்ன இல்லாவிட்டாலென்ன என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

வாகரை விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று அரசு கூறுகின்றது. ஆனால் உண்மை நிலை அவ்வாறில்லை. உண்மையில் அங்கு புலிகளின் ஆட்சிதான் நடைபெறுகின்றது. இராணுவத்தினர் தங்களின் முகாம்களைக் காவல் காப்பதில்தான் முழுநேரத்தையும் செலவிடுகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் கூட இந்த மக்களைத்தான் அதிக அளவில் பாதித்துள்ளது. ஒவ்வொரு சிறிய வீடும் • வெள்ளத்தில்தான் மூழ்கியுள்ளது. இரவில் கூடத் தங்குவதற்கு பொது இடங்கள் அற்ற நிலையில்தான் இம்மக்கள் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கின்றனர். பெரு வெள்ளத்தினால் இம் மக்கள் சிறிய அளவில் மேற்கொண்ட சேனைப்பயிர்களும் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இறுதியில் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக விறகு வெட்டி விற்கும் வேலையை ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் முழுக் குடும்பமுமே மேற்கொள்கின்றது. இவ்வாறான நிலைமைகளினால் இப்பகுதியில் கல்வி கூட வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. யுத்தத்தினால் அதிகமாக விதவைகள் தான் பெருகிக் கொண்டு செல்கின்றார்கள்.

இப்பகுதியிலிருந்து முதலில் இராணுவத்தினர் வெளியேற வேண்டும். அல்லது வாகரைப் பகுதி மக்கள்தான் தங்கள் நிம்மதியைத் தேடி வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ත්‍රිකුණාමලය
# திருகோணமலை
# TRINCOMALEE

## சர்வமும் சிங்களமயமாகும் திருமலை

## திருமலையில் இருந்து ஒரு றிப்போர்ட்

வடகிழக்கு மாகாணத்தின் அதாவது தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை இன்று அத்தன்மையை படிப்படியாக இழந்து ஒரு பௌத்த பிரதேசமாக மாற்றமடைந்து வருவதையே அங்கு நடைபெறும் செயற்பாடுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கே மாஓயாவையும் மேற்கில் அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களையும், தெற்கில் வெருகல் ஆற்றையும் எல்லைகளாகக் கொண்ட இம் மாவட்டம் 2630 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டதாகவும், மீன்பிடியையும், விவசாயத்தையும் தனது பிரதான தொழில்களாகக் கொண்டது. இவ்வாறான தன்மைகளுடன் காணப்படும் இம் மாவட்டத்தின் இன்றைய உண்மைநிலை, இம்மாவட்டத்தில் உள்ள மக்களும், திருமலை நகரமும் துண்டு துண்டாக சிங்களக் குடியேற்றங்கள் மூலம் உடைக்கப்பட்டும் இராணுவ முகாம்கள் மூலம் சூழப்பட்டுமே காணப்படுகின்றன.

### தம்புலுகமுவவாக மாறிய தம்பலகாமம்

கொழும்பில் இருந்து திருமலையை நோக்கிப் பிரயாணம் செய்யும் போது பொலனறுவை மாவட்ட எல்லையில் இருந்து திருமலை நகர எல்லைவரை அனைத்துக் கிராமங்களும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களாகவே காணப்படுகின்றன. இடையிடையே காணப்படும் தமிழ், முஸ்லீம் கிராமங்களை கூட சிங்கள மயப்படுத்தப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க தமிழ் கிராமமான **தம்பலகாமம்** அது **தம்புலுகமுவ** என்று தமிழிலேயே எழுதப்பட்டுக் காட்சியளிக்கின்றது.

### பல்லின சங்கமம் என்கிற பம்மாத்து

மாகாணசபை அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்ட காலம் தொட்டே திருமலையைச் சிங்களமயமாக்கும் முயற்சியில் அரசு வெளிப்படையாகவே ஈடுபட்டு வந்துள்ளது என்பது நாடறிந்த உண்மை. 1971ல் 29% ஆக இருந்த சிங்களவர்களின் தொகை 1981ல் 34% ஆக அதிகரித்திருப்பதில் இருந்து இதை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். தற்போது ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டால் நிச்சயமாக சிங்கள மக்களின் தொகை 45%-50% வீதமாகக் காணப்படும். திருகோணமலை சகல இனமக்களுக்கும் உரிய பூமி என்று கூறிக்கொண்டே இவ் அரசு அனைத்தையும் செய்து வருகின்றது. கண் துடைப்புக்காக பல்லின சங்கமம் என்னும் மாதிரிக் கிராமத்தையும் அமைத்து அதில் மூவின மக்களையும் குடியமர்த்திக் கொள்ளும் அதே வேளையில் திருக்கடலூர் கிராமத்தின் வடக்குப் புறத்தில் உள்ள பிரச்சினைகளால் அகதிகளாக இடம்பெயர்ந்து இந்தியா சென்ற தமிழர்களின் வீடுகளில் சிங்கள மக்கள் அவசர அவசரமாகக் குடியமர்த்தப்படுகின்றார்கள். அதே சமயம் அதே வேகத்தோடு பௌத்த விகாரைகளும் திருமலையில் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுவதையும் ஊன்றிக் கவனித்தால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

### சர்வமும் சிங்களமயம்

இவ்வாறான நிலைமைகளோடு நிர்வாக ரீதியிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் திருமலை மாவட்டத்திற்கு சிங்கள அரசாங்க அதிபர் ஒருவா ஏற்படுத்தப்பட்டதில் ஆரம்பித்து, பின்பு வேறுமாவட்டங்களின் எல்லையில் காணப்பட்ட சிங்களக் கிராமங்களை திருமலை மாவட்டத்துடன் இணைத்து, சிங்களவர்களுக்கென தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கையாக மீன் பிடித்தொழில் அமைச்சை திருமலைக்கு இடமாற்றம் செய்ததனூடாக கரையோரங்களில் சிங்கள மீனவர்களை மேலும் குடியமர்த்தி இறுதியாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்டு தற்போது அரசினாலேயே ஆளுனருக்கூடாக ஆட்சிசெய்யப்படும் வடகிழக்கு மாகாணசபையில் உள்ள அமைச்சுகளின் செயலாளர்கள்ளையும் சிங்களவர்களாக நியமிப்பதில் முடிவடைந்துள்ளது.

இங்குள்ள தமிழ் மக்கள் கூட தங்களுடைய குரலை வெளிப்படுத்துவதற்கு சரியான வழி மூலங்கள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசைச் சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிலையில் திருமலைத் தமிழ் மக்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபடுவதற்கும் கூட அஞ்சுகின்ற நிலையே காணப்படுகின்றது. புண்ணிய பூமியாகக் கருதப்பட்ட இந்த இடம் தற்போது பௌத்த விகாரையையும், சிங்களமக்களுக்கான கச்சேரியையும் இராணுவமுகாமையும் கொண்ட பிரதேசமாக மாற்றியமைத்து தமிழ் மக்களே அங்கு செல்ல முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தமிழ் இயக்கங்களான ஈ.பி.டி.பி, புளொட் என்பன அலுவலகங்களைத் திறந்து வைத்துக் கொண்டு அரசியல் நடாத்துகின்றார்கள்.

இவர்களுடைய அரசியல் நகரசபைத் தேர்தலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலுமாகவே இருக்கின்றது. முஸ்லீம்களும் ஐ.தே.க.வினாலும், முஸ்லீம் காங்கிரஸினாலும் பிளவுபடுத்தப்பட்டு தனித்துவம் இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழர்களும், முஸ்லீம்களும் ஒன்றுபட்டு 'திருமலை தமிழ் பேசும் மக்களின் பூமி' என்பதை நிலைநாட்ட முன் வருவதனூடாகத்தான் திருமலை மாவட்டத்தை சிங்கள அரசிடம் இருந்து காப்பாற்ற முடியும்.

**சத்தியேந்திரா**

---

## மலையக மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள்
## இன ஒதுக்கலுக்கான இன்னுமோர் எத்தனம்

மலையகத் தமிழ் மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவது பற்றிப் பேசப்படுகிறது. ஏற்கனவே 'V', 'X' என்றவகையில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதே அம்மக்களை பிரித்து அறிவதற்காகத்தான். 'V', 'X' என்ற இரண்டு எழுத்துக்கள் மூலம் இனங்காணப்பட்டு நாடுகடத்தப்பட்டகாலம், கடந்ததாயிருக்கலாம். ஆனால் அது எதிர்காலத்தில் நடைபெறாது என்பதற்கான எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. எனவே விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதற்கான எத்தனம் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அத்தியாவசியமாகின்றது.

கடந்த காலத்தில் வாக்குரிமையும், பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்டதைப் போல மீண்டும் வெவ்வேறு வடிவங்களில் அதே நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

தொழிற்சங்க ரீதியாக தம்மை பிளவுபடுத்திக் கொண்டுள்ள எவ்விதமான எதிர்வு கூறலும், முன்னோக்குமற்ற 'சங்கக் கடை' நடாத்துகின்ற சில நபர்களுக்காக மலையக மக்கள் அவலங்களையும் நஷ்டங்களையும் போதுமான அளவு சம்பாதித்துள்ளார்கள். கடந்த தேர்தல்களில் மலையக தமிழ் வாக்காளரின் நிகழ்வுப் போக்கை அவதானித்த பேரினவாத சக்திகள், கட்சி பாகுபாடின்றி ஒன்றிணைந்து, வாக்களிப்பதற்கு அடையாள அட்டையை ஒரு கட்டாய தேவையாக்கும் சட்டமூலத்தை கொண்டு வந்திருக்கின்றன. இதற்கான காரணம் கள்ள வாக்குகளைக் குறைப்பதே எனக் கூறப்பட்டாலும் அதன் உண்மை வடிவம் குறிப்பாகவும் அபாயகரமாகவும் மலையகத்தமிழரையும் பாதிப்பதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

அண்மைக்காலப் போக்கில் சகல பேரினவாத சக்திகளும் ஒன்றிணைந்து வருவதும், அவர்களது பகிரங்க இனவாத கூக்குரலும் மலையகத் தமிழருக்கு உகந்த சூழல் இல்லை என்பதைக் காட்டுகின்றது. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் மலையகத்திலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சுற்றிவளைப்பு கைதுகளின் போது பல நூற்றுக் கணக்கான மலையக தமிழ் இளைஞர்கள் சிறை செல்ல நேர்ந்தது ஒன்றும் தற்செயலானது அல்ல. அது திட்டமிடப்பட்ட சுத்திகரிப்புதான். அவர்களில் பெரும்பாலானோர் அடையாள அட்டையில்லை என்ற காரணத்தால் கைதானார்கள். (அடையாள அட்டை இருப்பினும் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்பது வேறுவிடயம்) இந்நிலையில் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் மலையக தூதுக்குழு ஒன்றிடம் மலையக தமிழர் எதிர்நோக்கும் நெருக்கடியை தீர்க்கவே விசேட அடையாள அட்டை வழங்கப்படுவதாகவும் அதனை அரசியல் வாதிகள் குழப்புவதாகவும் கூறியிருக்கின்றார். ஆமாம் சாமி கும்பல் அதையும் கேட்டுக் கொண்டு தலையசைத்து விட்டு வந்து பத்திரிகைக்கு அறிக்கை வெளியிட்ட மானக்கேட்டை என்னவென்பது?

விசேட இயந்திரங்களைக் கொண்டு விசேட காரியாலயம் அமைத்து விசேட அடையாள அட்டை வழங்கி நெருக்கடியை தீர்க்கப் போகிறோம் என கூறும் அரசும்- ஆணையாளரும் ஏன் அவற்றைப் பாவித்து தேசிய அடையாள அட்டைகளை கொடுக்க முடியாது?

தோட்டத் தொழிலாளர்களின் சகல விபரங்களும் தோட்டக் காரியாலயங்களில் இருக்கின்றன. எனவே விண்ணப்பம் மட்டும் சமர்ப்பித்தால் போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதே போல தேசிய அடையாள அட்டையிலுள்ள 'V', 'X' என்ற வேறுபாடுகளையும் நீக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளாகளுக்கு அந்த தோட்ட நிர்வாகம் வழங்கும் அடையாள அட்டைகள் சகலநிர்வாக மட்டத்திலும் ஏற்கப்படுமென சில மாதங்களுக்கு முன்னர் பிரதமர் அறிவித்தார். விளைவு பல தோட்டங்கள் போட்டி போட்டுக் கொண்டு அடையாள அட்டை வழங்கும் வியாபாரத்தை ஆரம்பித்தன. அதனை பெற்றவர்களுக்குத்தான் தெரியும் அதன் பெறுமதி என்ன வென்று!

விசேட அடையாள அட்டை என்ற பெயரில் இன ஒதுக்கலுக்குத் தூபமிடப்படுகின்றது. இத்திட்டத்திற்கு எதிராக பலத்த கண்டனம் எழுந்த போதும் அது நடைமுறைப்படுத்தப்படும் போல் தெரிகிறது. இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டால்;

- வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படலாம்.
- வங்கிக்கடன்கள் பெறமுடியாமல் போகலாம்.
- வேலைவாய்ப்புகள் மறுக்கப்படலாம்.
- தொழிலாளர் தமது சேமலாப நிதி, நம்பிக்கை நிதி போன்றன பெறமுடியாது போகலாம்.
- நேர்முகப் பரீட்சைகளில் பாரபட்சம் எழலாம்.
- பொலிஸ் ராணுவ அடக்கு முறையில் விசேட அணுகுமுறை ஏற்படலாம்.
- எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய (பாஸ்போர்ட்) கடவுச்சீட்டு பெற்றோர் நாடுகடத்தப்பட அது ஒரு துருப்புச்சீட்டாகிப் போகும்.

ஆக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதன் மூலம் மலையக தமிழ் மக்கள் மீண்டும் இருண்ட காலத்தை நோக்கி தள்ளப்படுவார்கள். மலையக மக்களது ''இருப்பு'', ''உயிர் வாழ்வு'' ஆகியவற்றின் மீது தொடுக்கப்படும் தாக்குதலாகவே இது அமையும்.

**தோட்டக்காட்டான்**

---

## தமிழர் தலைவிதியில் சட்டம் காட்டும் விளையாட்டு!
### -ஒரு குறிப்பு

சொல்லுக்கும், செயலுக்கும் காத வழி என்பார்கள். இவ்வாக்கியம் அதன், உண்மையான கருத்தை எங்கே மெய்பிக்கின்றது என்றால் அது அரசியல், அரங்கில் என்றே கூறலாம். அதுவும், சிங்கள பெருந்தலைவர்கள் இலங்கைத் திருநாட்டின் அரசியல் அரங்கில் சிறுபான்மை இனத்தவரை வாக்குறுதி எனும் உயர் சொல்லை பிரயோகித்து, ஏமாற்றி குத்துக்கரணம் அடித்த கதைகள் என்பதே ஒரு தொடர் வரலாறு.

கடந்த சில வருடங்களாக, சட்டத்தைக் கூட தம் கைகளில் கொண்டு, எடுத்து அனைவர் கண்களிலும், மண்வாரித் தூவி வரும் விகடமான வேடிக்கையான ஆனால், நயவஞ்சகமான நாடகம் தான் என்ன?

பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி திரு.ஜே. ஆர்.ஜயவர்த்தன அவர்களுக்கும் இடையிலான இலங்கை - இந்திய உடன்படிக்கை 1987.7.29ம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

1987.07.29இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கை அரசாங்கம் 1987 நவம்பர் மாதத்தில் தற்போதைய அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச்சட்டமூலத்தையும் மாகாணசபைகள் சட்ட மூலத்தையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

இதற்கமைவாக, அரசியலமைப்புக்கான, பதினாறாவது திருத்தச் சட்டமூலம் 1988 டிசம்பர் மாதத்தில் இலங்கை அரசினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தச்சட்டத்தில, மூன்றாவது சரத்து, மேற்படி அரசியலமைப்பின் 22ம் சரத்துக்கு திருத்தமாக சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதிலும், நிருவாக மொழியாக இருத்தல் வேண்டுமென முதலாவது வாசகம் குறிப்பிடுகிறது

குறித்த திருத்தச் சட்டத்தில் அரசியலமைப்பின் 23 வது சரத்துக்கு திருத்தமாக, எலலாச்சட்டங்களும், சிங்களத்திலும், தமிழிலும் சட்டமாககப்படுதல் வேண்டுமென கூறுகிறது அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது.

இந்நிலையில் இலங்கை பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்கள் எல்லாவற்றின் இறுதியிலும் ''ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய வாசகம் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் எனக்கூறுவதற்கும், சட்டவாக்க மொழியிலே, சிங்களத்திலும், தமிழிலும் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென எழுதப்பட்டிருப்பதற்கும் இடையிலான அர்த்தம் என்னவென்று தெரியாது தவிப்பவர்கள் பலர். அப்படியாயின் அதன் அர்த்தம் தான் என்ன?

சகல சட்டங்களும் சிங்களத்திலும், தமிழிலும் ஆக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளமையினால் ''சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்'' வேண்டுமென ஒவ்வொரு சட்டமூல இறுதியிலும் கூறப்படுவது சட்டத்திற்கு முரணானது! பிழையானது! அர்த்தமற்றது! வேதனைக்குரியது!

உதாரணமாக 1993ம் ஆண்டின் 15ம் இலக்க பிரஜாவுரிமைச் (திருத்தச்) சட்டம் 5ம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது.

''இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எனவே, இம்மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலே, அதுவும் இலங்கை எனும் ஜனநாயக் நாட்டின் இறைமை கொண்ட பாராளுமன்றத்திலே நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் சூழவிலே... நாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முக்கிய தடையாக இருந்த மொழியுரிமை எனும் தடைக்கல்லை அகற்றிவிட்டோம்'' என பாசாங்கு செய்யும் அரச குள்ள நரித்தனத்தை என்னவென்பது!

**கேகாலை மலர்**

நன்றி - நூலகத்திட்டம்



# விடுதலைக்குத் துப்பாக்கியை மட்டும் நம்பிப் பயனில்லை

## விடுதலைப்புலிகளின் பெண்போராளிகள் நூல் பற்றி சில அபிப்பிராயங்கள்

### -மல்லிகா சிவகடாட்சம்-

சென்ற வருட முற்பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்(Women Fighters of Liberation Tigers) என்ற ஆங்கில நூலை விடுதலைப புலிகள் இயக்கத்தினர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டனர். திருமதி அடேல் பாலசிங்கம் இந்நூலை எழுதியுள்ளார். விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளது இராணுவ நடவடிக்கைகள் பற்றிப் பெருமையுடன் எடுத்துக் கூறுவதாகவே இந்நூல் அமைந்துள்ளது. 'இது அவர்களின் கதை' என்று அடேல் கூறுகிறார். 1986ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பெண் போராளிகள் பங்குபற்றிய தாக்குதல்கள் அவர்களின் வெற்றிகள் என்பனவே இந்நூலில் அமைந்துள்ளன.


அடேல் பாலசிங்கம்

பெண் போராளிகளின் கதை என்று அடேல் பிரகடனப்படுத்தினாலும் கூட, இந்நூல் ஒரு முழுமையற்ற கதையாகவே தென்படுகிறது. தாக்குதல்களும், இராணுவ நடவடிக்கைகளுமே அவர்களது வாழ்க்கையின் பிரதானமான அடிப்படையான அம்சங்கள் என்ற கருத்தே இந்நூலில் மேலோட்டமாகக் காணப்படுகிறது. இவ்வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் வழமையான இராணுவ வாதத்தின் ஒரு பகுதியாகவே இந் நூல் அமைந்துவிடுகிறது.


இந்நூலின் முன்னுரையில் அடேல் கூறியுள்ள சில கருத்துக்கள் விவாதத்திற்கு இடமானவையாகும். குறிப்பாக வன்முறையற்ற, எதிர்ப்ப நடவடிக்கைகள் போன்றவற்றை அவர் முக்கியமற்றவையாகக் கூறுகிறார். குறிப்பாக பெண்களது வாழ்க்கையிலும், நிலைமையிலும் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்த வல்லது அவர்களது ஆயுதப்போராட்டப் பங்களிப்பே என அறுதியிட்டுக் கூறுகிறார். இது போராட்ட வடிவங்கள் பற்றிய கருத்துநிலைப் பிரச்சினையொன்றை எழுப்புகிறது. அடேல் பின்வருமாறு கூறுகிறார்.

'அகிம்சைரீதியான அரசியல் நடவடிக்கைகள், பாராளுமன்ற அரசியலில் பெண்கள் பங்குபற்றுவதானது அவர்களைப்பற்றிய கலாசாரப் படிமங்களில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. இவை பாராளுமன்ற அரசிலும், அகிம்சைரீதியான அரசியற் செயற்பாடுகளிலும் பெண்களது நடவடிகைகள் என ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட எல்லையுள்ளேயே அமைந்துள்ளன. ஆனால் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடும் பெண்களின் வரலாறு அடிப்படையில் வேறானதாகும். போராடும் பெண்களது வாழ்க்கை சாதாரண பெண்ணின் வாழ்க்கைக்குப் பறம்பான ஒரு உலகத்தைச் சார்ந்தது.' பெண்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டாலன்றி அவர்களது வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றமோ அவர்களைப்பற்றிய சமூகக் கருத்தோட்டத்தில் அடிப்படை மாற்றமோ ஏற்படாது என்ற கருத்தே மேற்கூறும் கூற்றில் தொனிக்கிறது. அப்படியானால் பெண்களது நிலைமையில் முற்போக்கான அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் ஆயுதப் போராட்டம் கட்டாயமான முன் நிபந்தனையா? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் பெணகள் சாதாரண நடைமுறையில் இருந்து மாறுபட்ட நிலைமையையும் சவாலையும் சந்திக்க வேண்டியுள்ளதென்பது உண்மைதான். ஆனால் அவர்கள் எதிர்கொள்கிற இந்த அசாதாரண நிலைமைகள் பெண்கள் பற்றிய, சமூகக் கருத்தினையும் மனோபாவத்தினையும் எவ்வளவு தூரம் மாற்றியுள்ளன? ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்கேற்ற ஏனையநாடுகளின் அனுபவங்கள் யாவை? தேசிய விடுதலை இராணுவத்தில் அங்கம் வகித்த பெண்கள் விடுதலைக்குப் பின்னர் எவ்வாறு நோக்கப்பட்டனர்? அவர்களது அரசியல் ரீதியான அந்தஸ்து அதிகாரம் என்பன எவ்வாறிருந்தன? தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்த ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதாரணங்களை நோக்குவதன் மூலம் இவ் வினாக்களுக்கு ஒரு பொதுமையான விடையை உருவாக்க முடியும்.



இந்த நாடுகளின் அனுபவங்களை நோக்கும் போது பெண்களுக்கெதிரான ஒடுக்கு முறைகளும், ஆணாதிக்கமும் விடுதலை இயக்கத்திலும், விடுதலை இராணுவத்திலும் உள்ள ஆண்களிடையே தொடர்ந்து நிலவியதைக் காணலாம். இராணுவத்தின் பலத்தை அதிகரிப்பதற்குப் பெண்கள் பயன்பட்டார்கள். ஆனால் இத்தகைய பங்கு பற்றலினால் விடுதலைக்குப் பின்னர் அவர்களது நிலையில் பெரியளவு மாற்றங்கள் ஏற்படவில்லை. பால் அடிப்படையில் அமையும் வேலைப்பிரிவினையில் எந்தவித மாறுதல்களும் ஏற்படவில்லை. மேலும் புரட்சி முடிந்ததும் பெண்கள் இராணுவப் பணியில் இருந்து விலக்கப்பட்டனர். சீனா, வியட்நாம், நமீபியா, அல்ஜீரியா, மொசாம்பிக், நிக்கரகுவா போன்ற நாடுகளின் நிலைமை இதுவாகவே இருந்தது. போர்க்காலமானது ஒரு அசாதாரணமான காலமாகவே கருதப்படுகிறது. போர் முடிந்தபின் மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்ப வேண்டும் எனப் புதிய தலைவர்கள் எதிர்பார்கின்றனர். இந்தச் சாதாரண நிலைக்குத் திரும்புவதன் ஒரு அம்சமாகப் பெண்களும் தமது வழமையான தாய், மனைவி என்ற பாத்திரங்களை ஏற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. போர்க்காலத்தில் இழந்த மக்கட் தொகையை ஈடுசெய்யவேண்டும். புதிய, ஆரோக்கியமான சமூக அங்கத்தவர்களை உருவாக்க வேண்டும். இத்தகைய தேவைகளை ஈடுசெய்ய குடும்பம் என்ற நிறுவனத்தை உறுதிப்படுத்த வேண்டும். பாரம்பரிய சமூக அமைப்பில் குடும்பக்கடைமைகள் பெண்களுக்கே உரியன. தாய், மனைவி என்ற பாத்திரங்களை உறுதிப்படுத்துவதன் மூலமே குடும்ப நிறுவனத்தை நிலை நிறுத்த முடியும். இதனாலேயே புரட்சிக்கு அல்லது விடுதலைக்குப் பிறகான காலங்களில் பெண்கள் மீண்டும் தமது மரபுவழிக்கடமைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

இத்தகைய வரலாற்று அனுபவங்களை மனங்கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சமாந்தரமாகப் பெண்கள் தமது உரிமைகட்கான கோரிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். இல்லாவிடின் மீண்டும் சமையலறைகளுக்குள் தள்ளப்பட வேண்டிய அபாயமே ஏற்பட்டு விடலாம். அல்ஜீரியத் தேசிய விடுதலைப் போரில் பெண்கள் பங்கெடுத்தனர்; ஆயுதம் ஏந்தினர். அவ்வாறே ஈரானிலும் நடந்தது. ஆனால் இன்று பெண்களைப் பொறுத்தவரை மிகுந்த வைதீக வாதத்தையே அந்நாட்டு அரசுகள் கடைப்பிடித்து வருகின்றன. பெண்களின் போராட்ட நடவடிக்கைகளுக்கு சிறந்த உதாரணமாகக் கூறப்படும் நிக்கரகுவா, பலஸ்தீனம் போன்றவற்றிலும் வைதீகவாதம் இல்லாவிடினும் பொதுவான பின்தள்ளப்பட்ட நிலைமையே காணப்படுகிறது. எதிர்காலம் பற்றிய இந்த விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபடும் பெண்களுக்கு இல்லாவிடின், புரட்சிக்குப் பிறகான எதிர்காலச் சமூகம் பற்றிய அவர்களது கனவு நனவாக முடியாது. போராட்டம் நடைபெறும் வரைக்கும் அவர்கள் போற்றப்படுவர். ஆனால் அவர்களது எதிர்காலம் குறித்து எத்தகைய உத்தரவாதமும் கொடுபடுவதில்லை. மேலும் பெண்களை இராணுவத்தில் சேர்த்துப் பயிற்றுதல் தாக்குதல்களிற் பங்கெடுக்க அனுமதித்தல் போன்றவை எப்போதும் பெருமைக்குரிய விடயங்களாகவே கருதப்படுகின்றன. சர்வதேசப் பெண்கள் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் விடுக்கும் செய்திகளில் இத்தகைய பெருமித உணர்வு தொனிப்பதைக் காணலாம். காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வாழ்ந்த பெண்கள் இராணுவ உடை அணியவும், களத்தில் எதிரிகளுடன் நேருக்கு நேராகச் சமர் செய்யவும் வாய்ப்பை உருவாக்கியது தமது இயக்கமே என்றும் பெண்களது வீரத்தையும் துணிச்சலையும் வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை அது அளித்திருக்கிறது என்றும் பொருள்பட இச்செய்திகள் அமைந்துள்ளன. பலஸ்தீனம், ஈரான் போன்ற நாடுகளில் பெண்களது இராணுவப் பங்களிப்பு, பெண்விடுதலை ஆகியவை தொடர்பாக ஆராய்ந்த ஆய்வாளர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.




''முகத்திரை அணிவதைக் கைவிட்ட ஒரு பெண்ணுக்கும் ஒரு உழவு இயந்திரம், ஒரு கைத்தொழிற்பேட்டை, ஒரு புதிய தண்டவாளப்பாதை ஆகியவற்றுக்கும் இடையே பெரிய வித்தியாசத்தை ஆண்கள் காண்பதில்லை. முகத்திரை அணியாத அளவு பெண்ணை முன்னேற்றி விட்டோம் என்பது ஆணினுடைய இன்னோர் சாதனையின் ஒரு அடையாளமாகவே கருதப்படுகிறது''

எனவே இராணுவத்தில் பெண்களின் முன்னேற்றம் சாதனை ஆகியவற்றைத் தேசிய இயக்கம், விடுதலை இயக்கம் ஆகியவற்றின் தலைவர்கள் தமது சாதனையின் ஒரு அம்சமாகக் கருதுகின்றார். விடுதலைப்புலிகள் இராணுவத்தின் பெண்கள் அணியை நிறுவியவர் என்ற குறிப்புடன் பிரபாகரனின் புகைப்படம் இந்நூலில் இடம் பெறுதல் இதற்கு ஒரு சான்றாகும.

மேலும் நாம், அடேல்பாலசிங்கத்தின் முன்னுரையிலிருந்து எடுத்துக்காட்டிய கூற்றில் இன்னோர் பிரச்சினையும் உள்ளது. அதாவது ஆயுதப்போராட்டம் தான் பெண்கள் பற்றிய கருத்துநிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதனால் ஏனைய போராட்ட வடிவங்களின் தகுதிப்பாடு என்ன என்ற வினாவை இது எழுப்புகிறது. ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள், வேலை நிறுத்தம் போன்ற ஆயுதத் தாக்குதலை உள்ளடக்காத போராட்டங்கள் பெண்களைப் பொறுத்தவரை பயனற்றவை என்ற கருத்து இதில் தொனிக்கிறது. ஆனால் இத்தகைய போராட்ட வடிவங்களூடாக பெண்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட்டமைக்கு சில நாடுகளையாவது உதாரணம் காட்டலாம்.

எனவே பெண்களைப் பழைய கட்டுகளிலிருந்து விடுவித்து விட்டோம் என்பதற்கு அவர்கள் இராணுவச் சீருடை அணிவதையோ, துப்பாக்கி ஏந்துவதையோ மாத்திரம் அளவு கோலாகக் கொள்ள முடியாது என்பதை உணர வேண்டும். பிறநாடுகளில் பிறசமூகங்களில் என்ன நிகழ்ந்திருக்கின்றது என்பது பற்றிக் கவனம் கொள்ளாது, எம்மிடையே எல்லாம் உள்ளது என மனப்



பால் குடிக்கும் போக்கைக் கைவிட வேண்டும். பெண்கள் தமது வாழ்க்கையைத் தமது கையில் எடுத்துக் கொள்ள வேண்டும், விடுதலைக்குத் துப்பாக்கியை மட்டும் நம்பிப்பயனில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# சாதியமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

## ஒரு சமூகவியல் பரிசீலனை -3

யாழ்ப்பாணச் சாதியமைப்பின் கீழ் வண்ணார், அம்பட்டர், பறையர், துரும்பர் சாதியினரும் இவர்களுடன் சாதிவாரி அடிமைகளுள், சூத்திரரான கோவியர் புறநீங்கலாக நளவரும் பள்ளரும் நாற்பாலுக்கு வெளியில் பஞ்சமர் அமைப்பினுள் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளனர். மொத்தக் குடித் தொகையில் பஞ்சமர்கள் ஏறக்குறைய 15 சதவீதத்தினர் (1824 புள்ளி விபரம்)

தமிழகச் சாதியமைப்பில் பறையர்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்ட பண்ணையாட்களாக இருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் பறையர்கள் அடிமைப் பிரிவினர் அல்ல. பறையருள் வெள்ளாளரின் குடிமைகளாக இருந்தவர்கள் கோவியப் பறையர் என அழைக்கப்பட்டனர். இதை விட போர்த்துக்கீசராலும், டச்சுக்காரராலும் சாயவேர் (அவுரிவேர்) சேகரிப்பதற்கும் நெசவு, துணிசாயம் போடுதல் போன்ற வேலைகளுக்குமாக தமிழகத்தில் பண்ணையாட்களாக இருந்த பறையரையும் பள்ளரையும் கொண்டு வந்தார்கள். இவ்வாறு அந்நிய அரசுகளால் கொண்டு வரப்பட்ட பறையர்களும் பள்ளர்களும் ஏற்கனவே நிலவிய யாழ்ப்பாணச் சாதிய முறைமையின் கீழ் முறையே குடிமைகளாகவும் அடிமைகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டனர். எனினும் இவர்கள் சுதந்திரமானவர்கள். அந்நிய ஆளுநர்களின் பணியாளர்களாக இருந்த இவர்களுக்கு குடியிருப்பு நிலம் சொந்தமாக இருந்தது. இவர்களது சாதிப் பெயருக்கு முன்னர் அடைமொழியாக இவர்கள் ஈடுபடுத்தப்பட்ட மரபு சாராத பணிகளின் பெயர்கள் அமைந்தன. உதாரணம் வேர்க்குத்திப் பறையர், சாயக்காரப் பறையர், வேர்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிப் பள்ளர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

நளவர்களுள் ஒரு பகுதியினர். டச்சுக் கம்பனியாரின் அடிமைகளாக இருந்தனர். இவர்களும் சுதந்திரமானவர்கள். இவர்களுக்கு உதாரணமாக கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கரையோர மீனவர் கிராமத்தில் நிலங்களும் மீன்பிடிச் சாதனங்களும் புறநீங்கலாக வெள்ளாளனே நிலம் ஏனைய உற்பத்திக்காரணிகள் என்பவற்றின் ஏக உடமையாளனாக இருந்தான். மீனவர் கிராமங்களில் நிலமும் கருவிகளும் கரையார், திமிலர், முக்குவர், பள்ளிவிரியர் போன்ற பல்வேறு மீனவச் சாதியினரின் உடமையாக இருந்தது. யாழ் மாவட்டத்தில் மீனவர்களுள் கரையோரப் பெரும்பான்மையினர். இவர்களுள் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்கள் சமய வாரி அகமண வழக்கம் காரணமாக நடைமுறையில் ஒரு தனிச்சாதிப் பிரிவினராக வளர்ச்சி பெற்று விட்டனர். இது ஏற்கனவே சிறுபான்மையாக இருந்த மீனவர்களை மேலும் பிளவு படுத்தியது. யாழ்ப்பாணச் சாதி அமைப்பில் வெள்ளாளரைத் தவிர்த்து மீனவர்களுக்கே சொத்துடைமையும், சமூக ஆதிக்கமும் இருந்தது. அவர்களும் கடற்புறத்துக் கராமங்களில் நிலத்திற்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தனர். எனினும் கலாசாரரீதியாக அவர்கள் வெள்ளாளரை விடப் பிற்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களது உற்பத்தியான மீன் விரைவில் சேதப்படக்கூடியதும் உப உணவுத்தன்மை வாய்ந்ததும் ஆகும். மீனை அவர்கள் வெள்ளாளருக்கு விற்று பிரதான உணவுப் பொருளான தானியத்தை வெள்ளாளரிடம் இருந்து பெற வேண்டி இருந்தது. இத்தகைய பரிமாற்றத் தொடர்புகளாலும் தொகைரீதியான சிறுபான்மைத் தன்மையாலும் கூட ஒரு வகையில் அவர்கள் வெள்ளாளர்களில் சார்ந்திருக்க வேண்டி இருந்தது. வெள்ளாளத் தலைவர்களுக்கும் கரையாரத் தலைவர்களுக்குமிடையிலான பிளவுகளும் மோதல்களும் யாழ்ப்பாண வரலாற்றில் முக்கிய அம்சமாகும். இதற்கு இலக்கிய சான்றாதாரமாக நாடக நூலான 'பூதத்தம்பி விலாசத்தை குறிப்பிடலாம்.

கடற்புறத்து மீனவக் கிராமங்கள் புறநீங்கலாக பெரும்பாலான யாழ்ப்பாணத்து கிராமங்கள் பல் சாதிக் கிராமங்களாகும். இங்கெல்லாம் வெள்ளாருக்கு சாதி வாரியான பெரும்பான்மைஇருந்தது. நிலத்தினதும் உற்பத்திக்காரணிகளதும் பெரும் பகுதி வெள்ளாளரது உடமையாகும். ஏனைய அடிமை குடிமைச் சாதியினர் ஏதோ ஒரு வகையில் வெள்ளாளரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலை இங்கெல்லாம் இருந்தது. இது யாழ்ப்பாண மாவட்டத்தில் பரு மட்டத்தில் மட்டுமன்றி கிராமிய குறு மட்டத்திலும் வெள்ளாளரது ஆதிக்கத்தைப் பலப்படுத்தி நிறுவனமயப்படுத்தியது.

சிறுநீர்ப்பாசன குளங்கள் சார்ந்த வன்னிக்கிராமங்கள் பெரும்பாலும் தனித்தனி சாதிக்கிராமங்களாக அமைந்தன. இத்தகைய கிராமிய அமைப்பில் சாதிய ஒடுக்குதலுக்கான வாய்ப்புகள் குறைவாகவே அமையும்.

திருமலை மாவட்டத்தில் பெரும் பகுதியிலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் பிரதேச ரீதியான தனிச்சார்பு பரம்பரை அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தின் வடபுலம் பெரும்பாலும் விவசாயிகளாக மாறி விட்ட கரையாரின் கையிலும் தெற்குப் புலம் முக்குவரின் கையிலும் இருந்தது. இப்பகுதிகளில் நிலப்பஞ்சம் இருக்கவில்லை. நிலவுடமையும் நிலமின்மையும் ஒரே சாதியினுள் அமைகிற கிராமங்களிலும் பிரதேசங்களிலும் சாதிவாரியான ஒடுக்குதலுக்கான வாப்ப்புகள் அதிகமில்லை. இத்தனிச்சாதிப் பிரதேசங்களில் மிகச் சிறுபான்மையினராக வாழும் அம்பட்டர், வண்ணார் போன்ற தாழ்த்தப்பட்ட சேவைச் சாதிகளின் (குடிமைகள்) அனுபவங்கள் புறநடையாக அமையலாம்.

யாழ்ப்பாணச் சாதியமைப்பின் முக்கியமான அம்சம் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட சாதியினரின் பெரும் பகுதியினர், ஒடுக்கப்பட்ட சாதியினராக மட்டும் இல்லாமல் வெள்ளாளரினதும் அடிமைகளாகவும் இருந்ததுதான். இதுபற்றிப் பிறிதொரு கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளேன்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் முக்கியமான ஒரு பிரிவினர் கோயில் சார்ந்த சேவைச் சாதியினரான சாதிவாரிக் கலைஞர்களாகும். இவர்களுள் வீர சைவர்கள், நட்டுவர்கள் (இசை வேளாளார்கள்) குறிப்பிடத்தக்கவர்கள். கிராமிய வழக்கில் 'பண்டாரம்' என்றும் குறிப்பிடப்படுகின்ற வீர சைவர்கள் கன்னடத்தைச் சேர்ந்த 'லிங்காயுதர்'களின் வம்சாவழியினராவர். வீர சைவர்கள் கோயில் பூசகர்களாகவும் உடுக்கு, கரகம், அனுமார், புலிஆட்டக் கலைஞர்களாகவும் விளங்கினர்.

நட்டுவர்களான யாழ்ப்பாணத்துத் தவில் நாதஸ்வர வித்துவான்கள் பலர் தென்னாசியப் புகழ் பெற்றவர்கள்.

இந்த இரண்டு பிரிவினரும் அளவெட்டி வடக்கு கிராமத்தில் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர்.

இவர்களைவிட 'பண்டாரம்' என்று குறிப்படப்படுகின்ற பிறிதொரு கோவில் சேவைச் சாதிகள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் பரவலாக வாழ்கின்றனர்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

### யாழ்ப்பாண மாவட்டத்தின் அடிமை முறை

திருமலை நகரம் புறநீங்கலாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே குறிப்பிடத்தக்க வகையில் சாதிவாரி அடிமை முறை தமிழ்ப் பகுதிகளிலோ சிங்களப் பகுதிகளிலோ இருக்கவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் திருமலைக்கும் வெளியே இலங்கை அடங்கிலும் மிகச் சில வீட்டுப் பணியாட்களே அடிமைகளாக இருந்துள்ளனர்.

1824 ஆண்டில் சனத்தொகை கணிப்பின அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் 12.5 வீதத்தினரும் திருமலை மாவட்டத்தில் 6.9 வீதத்தினரும் அடிமைகளாக இருந்தனர். ஏனைய பகுதிகளில் கொழும்பில் தான் அதிக அடிமைகள் இருந்தனர். இவர்கள் வீட்டுப் பணியாட்கள். இருப்பினும் கொழும்பில் அடிமைகளின் வீதம் 0.3 மட்டுமே.

தேசவழமைச்சட்டப்படி நளவரும் பள்ளரும் கோவியரும் சாதிவாரி அடிமைகளாகப் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களை விற்கலாம், வாங்கலாம், சீதனமாக்க கொடுக்கலாம் நகை நட்டுப் போல் அடைமானமுமாகவும் வைக்கலாம்.

அடிமைச் சாதியினருள் பள்ளரைத் தவிர கோவியரும் நளவரும் தமிழகத்தில் இல்லை. நளவர் பஞ்சங்களின் போது வெள்ளாளரால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்ட மலையாளத்து ஈழவர் என்ற கருத்து பொதுவாக உள்ளது. கோவியரின் தோற்றப்பாட்டின் பின்னணிகளை எனது ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளது.

கோவியர்கள் கலாசார ரீதியாத வெள்ளாருக்குச் சமநிலையான, பொதுவாக வடுகர் என்று குறிப்படப்படும் தெலுங்குச் சூத்திரச் சாதியைச் சேர்ந்தவாகள். தென்னகப் பஞ்சங்களின் போது வெள்ளாளரால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்டவர்கள். ஏனைய சாதியினரைப் போல் வெள்ளாரும் கூட அரசுக்கு சிங்களத்தில் இராஜகாரியம் எனவும், தமிழில ஊழியம் எனவும ஐரோப்பிய மொழிகளில் 'கோவி' (corvee)எனவும் அழைக்கப்பட்ட கட்டாய சேவையை வழங்க வேண்டி இருந்தது. இது தொடர்பாக வெள்ளாளருக்கு இருந்த சலுகைகள் யாவும் அரசுப்பணிகளும் ஊழியத்தின் தேவையும் அதிகரித்ததால், போர்த்துக்கீசர் காலத்திலேயே ரத்துச் செய்யப்பட்டு விட்டது. ஊழியம் செய்யும் ஏனைய வெள்ளாளர்களுடன் சேர்ந்து பணிபுரிவதற்காக, அடிமைச் சொந்தக்காரர்களான வெள்ளாளர்கள் பஞ்சம சாதியைச் சேர்ந்த அடிமைகளுக்குப் பதிலாக, சாதிவாரியாக தமக்குச் சமமானவர்களை அனுப்பவேண்டியிருந்தது. வெள்ளாளர்களுள் மேம்பட்ட பிரிவினரான அடிமைச் சொந்தக்காரர்கள் தமக்குப் பதிலாக ஊழியம் செய்வதற்காக 'வடுகர்' சாதியைச் சேர்ந்த அடிமைகளை அனுப்பினார்கள். வடுகர்கள் 'கோவி' என போர்த்துக்கீச, டச்சு ஆவணங்களில் எழுதப்பட்டனர். இதுவே பின்னர் அவர்களது சாதிப் பெயர் ஆயிற்று. இதனால் வடுகர்கள் உத்தியோகபூர்வமாக 'கோவி' எனப் பெயர் பெற்றனர். இது தனியான கட்டுரையில் விரிவாக ஆராயப்படவேண்டிய ஒரு விடயம்.

திருமலையில் இருந்த அடிமைகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய வெள்ளாளரின் சாதிவாரி அடிமைகளான கோவியர்களாக இருந்தமை, திருமலை மாவட்டத்துக்கு புலம் பெயர்ந்திருந்த யாழ்ப்பாணத்து வெள்ளாளரால் அடிமைகள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற கருத்துக்கு இடம் தருகின்றது. இவர்கள் துறைமுகம் சார்ந்த பணிகளிலும், விவசாயத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம். கிழக்கு மாகாணத்தில் வரலாற்றுரீதியாக ஓரளுவுக்கேனும் யாழ்ப்பாணத்தின் செல்வாக்குள்ள பகுதியாக திருமலை நகர்ப்பகுதி இருந்து வந்துள்ளது. எனினும் திருமலையில் யாழ்ப்பாணத்தைப் போல சாதி ஒடுக்குதல்கள் வளராமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும்.

திருமலையில் அடிமைகளாக இருந்த கோவியர்கள் கலாசார ரீதியாக வெள்ளாருக்கு சமமானவர்களாகவும் வெள்ளாளரது உள்வீட்டுப் பணியாளர்களாகவும், சட்டரீதியாக அடிமைகளாக இருந்த போதும் நடைமுறையில் பெரும்பாலும் வெள்ளாளரது வாரக்குடிகளாகவும், அடிமை ஆளணி அடிமை முகாமையாளர்களாகவும் இருந்தவர்கள். 1844 இல் சட்டரீதியாக அடிமை முறை ஒழிக்கப்பட்ட போது நிலப் பஞ்சமற்ற திருமலையில் கலாசார ரீதியாக வெள்ளாளருக்கு சமதையாக இருந்த கோவியர்கள் பொருளாதாரரீதியாகவும் விடுதலை பெறுவதில் அதிகம் சிரமம் இருந்திருக்காது என்று கருதலாம். யாழ்ப்பாணத்தின் நிலை மாறுபட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை ஆங்கில அரசாங்க அதிபர்களால் 1850களில் 'போடி' நிலவுடமையாளர்கள் ஆதிக்கம் தகர்க்கப்பட்டு, போடியாரின் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்த வாரக்குடிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு வாவியின் மேற்குக் கரையில் விவசாயத்திற்கும் குடியிருப்புக்கும் நிலம் வழங்கப்பட்டது. இது விடுவிக்கப்பட்ட வாரக்குடிகளில் சமூக, பொருளாதார, கலாசார சுதந்திரத்துக்கு வழிவகுத்தது. இவைபற்றி வேறு ஒரு கட்டுரையில் ஆராயலாம்.

1844இல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண மாவட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு 'அடிமை விடுதலைச் சட்டத்தை' இயற்றினர். இதற்கு முன்னர் படிப்படியாக அடிமை விடுதலையை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷாரால கொணடு வநத எலலாச சடட ஏற்பாடுகளும் வெள்ளாளர்களால் முறியடிக்கப்பட்டது. 1844ம் ஆண்டுச் சட்டம் சட்டரீதியான அடிமை விடுதலைக்கு வழிவகுத்த போதும் மேற்படி சட்டத்தின் கீழ் அடிமைச் சாதியினருக்கு குடியிருப்பு நிலம் தானும் ஏற்பாடு செய்யப்படவில்லை. குடியிருப்பு நிலமின்மை, மரபுசார்ந்த மாற்றுத் தொழில் வாய்ப்பு இன்மை என்பவை அவர்களைத் தொடர்ந்தும் வெள்ளாளரது நிலங்களில் பிணைத்து வைத்திருந்தது. இந்நிலமை ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பெரிய மாற்றம் ஏதுமின்றித் தொடர்ந்தது. 1850 களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாரக்குடிகள் விடுவிக்கப்பட்ட போது அவர்களுக்கு குடியிருக்கவும், பயிர் செய்யவும் நிலம் ஏற்பாடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

# - இன்னொரு சதி

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான பிரச்சாரப் போர்கள் சூடுபிடித்துள்ளன. ஒரு காலத்தில் எந்தப் பிரச்சினைக்கும்(இன்னும் கூட?) கிறனைட்டோ அல்லது ஒரு துப்பாக்கிக் குண்டோ தான் தீர்வைத் தரும் என்ற நம்பிக்கையுடன் 'களத்தில்' நின்ற வீரமறவர்கள் உட்பட பலரும் இப்பிரச்சாரப் போரில் குதித்துள்ளனர். தேர்தற் காலத்தில் திட்டுவதும் ஏசுவதும் -மக்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகளைப் போலவே -கணக்கில் எடுக்கப்படமாட்டா என்பதாலோ என்னவோ இலங்கை அரசைத் தாக்கிப் பேசவும் சில தமிழ்க்குழுக்கள் துணிந்து விட்டன. வவுனியாவின் 'சென்றிப் பொயின்ற்'களிலும் மட்டக்களப்பிலிலும் அரச இராணுவத்தின் 'முன்னணிப் படை'யாக இயங்குகின்ற அதே நேரத்தில் இவர்கள் அரசாங்கத்தை எதிர்த்தும் பேசுகின்றார்களே!

அட, ஒரு பேச்சுக்குத்தானே என்று பின்னாளில் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றார்கள் போலும்! ஆனால் இவர்கள் மறைமுகமாக ஒப்புக் கொள்கிற ஒரு விடயம் இதனூடாக வெளிப்படுகிறது. அதாவது இவர்கள் சார்ந்துநின்ற போதும், புலிகளை எதிர்ப்பதற்காகவே அப்படிச் செய்கின்றோம் என்று கூறிக் கொண்ட போதும், மக்கள் இந்த அரசை அங்கீகரிக்கவில்லை என்பதைத்தான் இவர்களின் இந்தப் பேச்சுக்கள் காட்டுகின்றன.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அடுத்தடுத்து வந்த எல்லாத் தேர்தல்களிலும் இத்தகைய வீரப்பிரதாபப் பேச்சுக்களை கேட்டுக் கேட்டு காது கள் புளித்துப் போன தமிழ் பேசும் மக்களுக்கு இப்போது இவர்கள் 'இதயக்கனிகளே' என்று அழைத்து விடுவதனால் மட்டும் இதயம் பூரித்துவிடப் போவதில்லை.

உண்மையில் இந்தத் தேர்தலை நடாத்துவதற்கு, அங்குள்ள மக்கள் தாம் தமது உள்ளூராட்சி சபைகள் தமது பிரதிநிதிகளால் பிரதிநிதித்துவப் படுத்தப் படவில்லை என்று அவர்கள் கோரியதற்காக நடாத்த முன்வரவில்லை இந்த அரசு. தனது பேரினவாத நடைமுறையை தக்கவைக்கவும், வடக்குக் கிழக்கை நிரந்தரமாகப் பிரிக்கவும், வடக்கு கிழக்கில் குறைந்தது குடாநாடு தவிர்ந்த பகுதியிலாவது ஜனநாயகச் சூழல் நிலவுகிறது என்று காட்டவுமே இந்த நடவடிக்கையை அரசு தொடங்கியது. தனது கட்சிக்கு ஆட்பிடிக்க செலவழித்த நேரத்தைவிட அதிகளவு நேரத்தை இந்த இயக்கங்களை தேர்தலில் ஈடுபடுத்தச் செலவழித்ததாகவும், ஏன் பலருடைய தேர்தலுக்கான கட்டுப் பணத்தைக்கூட அரசே செலுத்த முன் வந்ததாகவும் தெரியவருகிறது.

தமிழர்விடுதலைக் கூட்டணியை சேர்ந்த யோசப் பராஜசிங்கம் அவர்களின் கூற்றுப்படி அரசு கூட்டணியைக் கூட தேர்தலில் நிற்குமாறு வற்புறுத்தியுள்ளது!

வேட்பாளருக்கான பட்டியல் தயாரிப்பின் போது பலாத்காரமாக கையொப்பங்கள் வாங்கப்பட்ட நிகழ்ச்சிகள், பிற தில்லுமுல்லுகள் பற்றியெல்லாம் வாய் கிழியக் கத்துகின்ற பல சுயேட்சைக் குழு(?)க்கள் இதுபற்றி ஒரு போதும் சுட்டிக்காட்டித் தேர்தல் ஆணையாளரை இவற்றில் தலையிடுமாறு கோரியது கிடையாது. இந்தக் கட்சிகளுக்கு, எல்லாமே, அரசின் சதித்திட்டம், தமிழ் பேசும் மக்களின் தலைவிதி, தேர்தல் தில்லுமுல்லுகள் எல்லாமே வெறும் 'பம்பல்' விவகாரங்கள்தான். பிழைப்பு வாதம்தான் அவர்களது 'கோட்பாடு'. அதற்கு சால்ஜாப்பு சேர்க்க அரசியல் உரிமைகள் அபிவிருத்திகள் பற்றிய பேச்சுக்கள்.

தேர்தல் கடையில் வியாபாரத்தைத் திறம்பட செய்ய இவர்கள் எங்குதான் கற்றுக் கொண்டார்களோ?

மக்களின் சுயமரியாதை பற்றியும், பிரதேச அபிவிருத்தி பற்றியும் அவர்கள் பேசுகின்றார்கள். எப்போதும் மக்களின் பக்கம் நிற்பதாகக் கூறுகிறார்கள்! குண்டுகள் போட்டு வீதிகளையும் வீடுகளையும் தகர்க்கும் அரசின், தடைச்சட்டம் போட்டு மீன்பிடியையும் வேளாண்மையையும் சீர்குலைத்துள்ள அரசின், வடக்கு கிழக்கைப் பிரித்து, திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் கிழக்கை ஏறக்குறைய சிங்கள பிரதேசமாகவே மாற்றிவிட்ட அரசின் சதித்திட்டமான தேர்தலுக்கு தராசும் விளக்கும் காவிய படி மக்கள் முன் வந்து நிற்கிறார்கள் இவர்கள்.

சுயேட்சைக்குழுக்கள் என்ற பெயரிலான
சுய இச்சைக்குழுக்கள் தான் இவை சந்தேகமே இல்லாமல்
தமது சுய இச்சைகளுக்கு மக்களின் வாக்குகளால் அங்கீகாரம் தேடிக் கொள்ள விரும்புகிறார்கள் இவர்கள். இவர்களுக்கு மக்கள் சொல்லப் போகின்ற பதில் என்ன?

இத்தேர்தல்களில் இக்கட்சிகள் வெற்றி பெற்றாலும் சரி, ஆளும் கட்சிகள் வெற்றி பெற்றாலும் சரி நடக்கப் போவது என்ன என்பது மக்களுக்குத் தெரியும்.

தாம் வாக்களிக்கப் போவது இந்தக் கட்சிகளின் பிரச்சாரங்களில் வருவது போன்று அபிவிருத்திகட்காகவோ அல்லது தமது சுயமரியாதையை காக்கவோ அல்ல.

தம்மைப் புதைக்கவுள்ள புதைகுழிகளை தயார் செய்யவே என அவர்கள் அறிவார்கள்.

எனவே அவர்களது பதில் எப்படி அமையும் என்று சொல்ல வேண்டியதில்லை. அதற்கேற்பவே அமையும்; அமைய வேண்டும்.

வாக்குச் சீட்டில் புள்ளடி போட்டு தமது வாழ்க்கையையே சீரழிப்பதை விட; சீரழிக்கப் போகும் அரசுக்கு அங்கீகாரம் வழங்குவதை விட அதைப் பகிஸ்கரிப்பதே ஒரே வழி என அவர்கள் அறிவார்கள்.

இன்று தேர்தலில் நிற்கும் எந்தக் குழுவுக்கு வழங்கும் வாக்கும், என்றென்றைக்கும் தமிழ் பேசும் மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு போடப்படும் வாக்கு என்பதே உண்மை. அவர்கள் அறிவார்கள்.

எனவே அவர்களது முடிவு இந்த சதித் தேர்தலை பகிஷ்கரிப்பதாகவே அமைய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

## மக்களைப் பாதுகாக்கவே போட்டியிடுகிறோம்



### ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா

என்னுடைய அபிப்பிராயத்தில் வடக்கும் கிழக்கும் ஏற்கனவே இணைந்துள்ள ஒரே பிரதேசம் தான். அதில் பிரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் வட-கிழக்கை பிரித்து விட முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அம் முயற்சிகளுக்கு துணை போகக்கூடியவர்களை வாக்குப் பலத்தால் புறம்தள்ளிவிட்டு தமிழ் பேசும் மக்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதாகவும், மக்களது நாளாந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் ஒரு களமாக உள்ளூராட்சி சபைகள் இருப்பதாலும். புலிகளின் நாசகார நடவடிக்கையின் எதிர்விளைவாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்பிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

## அரசுக்குப் பதிலடி கொடுக்கவே போட்டியிடுகிறோம்

### -ரெலோ தலைவர் கோ.கருணாகரம்

தமிழ்மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தேர்தலாக இது இருக்கிறது. ஜனாதிபதி இந்தத் தேர்தல் முடிவுகளூடாக தனது கூற்றுக்களுக்கான அங்கீகாரத்தை எடுக்கப் பார்க்கிறார். இக்கூற்றுக்கு கிழக்கு மாகாண மக்கள் இத்தேர்தல் மூலமாகப் பதிலடி கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம். அரசு இத்தேர்தலுக்கூடாக வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறப் பார்க்கிறது. நாமே வட-கிழக்கு இணைப்புக்கு ஆதரவாக, எமக்கு கிடைக்கும் வாக்குகள் வட-கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதற்காக வழங்கப் பட்ட வாக்குகளே என இதன் மூலமாக அரசுக்குப் பதிலளிக்க விரும்புகிறோம். இத்தேர்தலில் வென்றால் கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை வைக்க வேண்டாம் எனக் கோருவோம்!

## வன்னியைக் காப்போம்

### -புளொட் விசுபாரதி

முன்னர் இருமுறை அரசு இத்தேர்தலை நடாத்த முயற்சித்தபோது அதனை நிராகரித்திருந்தோம். கூடவே வன்மையாகக் கண்டித்து இருந்தோம். ஏனெனில் வடக்கிலும், கிழக்கிலும் மக்கள் அகதி முகாம்களில் வாழ்க்கை நடாத்துகிறார்கள். இம்மாகாணங்களில் இருந்து வெளியேறியவர்கள் பூரணமாக மீளக் குடியேற்றப்படவில்லை. 1981ற்குப் பின்பு தேர்தல் இடாப்புக்கள் ஒழுங்கான முறையால் தயார் செய்யப்படவில்லை.

இந்த நிலையிலும் கூட ஜனாதிபதி வலுக்கட்டாயமாக மீண்டும் தேர்தலை நடாத்த அறிவிப்பு விடுத்து இருந்தார். இவ்வறிவிப்பானது எம்மைத் தேர்தலால் வலுக்கட்டாயமாக போட்டியிட வேண்டிய நிலையை உருவாக்கிவிட்டது. காரணம் ஒன்று; ஜனாதிபதி அண்மைக் காலமாக நம்நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதப்பிரச்சனையே எனக் கூறிவரும் தனது கூற்றை தேர்தலினூடாக உலகிற்கு நிறுவ முனைகிறார். இரண்டாவது; நடைபெற இருக்கும் வடகிழக்குப் பிரிப்புக்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பிற்கு ஒரு ஒத்திகையாக இந்த தேர்தலை பயன்படுத்த உறுதிபூண்டுள்ளார். மூன்றாவதாக; காலம் காலமாக வவுனியாவில் இருந்துவரும் தமிழ் பிரதிநிதித்துவம் ஒரு தேசிக்கட்சியிடம் போய்விடும் அபாயம் விலவுகின்றது. எனவே இவ்வபாயங்களில் இருந்து மீளுவதற்கான ஒருதள்மாக இத்தேர்தல் போட்டியிடுகின்றோம்.

ஆனால் ஈழமக்கள் புரட்சிகர முன்னனி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன தேர்தலை நிராகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. இதில் எத்தகைய நியாயம் இருக்கின்றது என்பது எனக்குப் புரியவில்லை. ஏனெனில் 1988ம் ஆண்டில் இந்திய அமைதிகாக்கும் படையினர் புடைசூழ நடாத்தப்பட்ட மாகாண சபைத்தேர்தலில் ஈழமக்கள் புரட்சிகர முன்னனியினர் போட்டியிட்டனர். அப்போது தேர்தல் நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லை என புலிகள் உட்பட ஏனைய தமிழ்க் குழுக்கள் தேர்தலை நிராகரித்திருந்தும் கூட ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன போட்டியிட்டன. இது மட்டுமல்ல ஏனைய சுயேட்சைக் குழுவினரோ, கட்சிகளோ போட்டி மனுத் தாக்கல் செய்யாதவாறு பலாத்காரத்தையும் பிரயோகித்தனர். மக்களை மிரட்டி வாக்களிக்கச் செய்தனர். அப்படிப் பட்டவர்கள் உள்ளூராட்சித் தேர்தலை எப்படி நிராகரிக்க முடியும்.

அடுத்து தேர்தலை நிராகரிக்கும்படி கேட்கும் கூட்டணியினர் இந்திய படை இருந்த காலத்தில் நடந்த பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு எப்படி பாராளுமன்றம் சென்றார்கள் என்பதும் புரியவில்லை.

## அரசின் நோக்கம்

- இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பிரகார[...] மாக இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கும் பி[...] மக்களின் அபிப்பிராயம் என்ற பேரால் அரசி[...] ரீதியில் இரண்டாகப் பிளப்பதற்கான திட்டத்[...] ஒத்திகையாக இது நடாத்தப்படுகிறது.
- இதன் மூலம் வடக்கு கிழக்கில் ஒரு ஜனநா[...] நிலவுகின்றது என்று காட்டிக் கொள்ள அது வி[...] -பல்லாயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்[...] ளாக வாழ்கின்ற நிலையில், இராணுவ அதிக[...] காட்டாட்சி நடப்பதை இதன் மூலம் மூடிம[...] அது முயல்கிறது.
- சரிந்து கொண்டிருக்கும் அரசுமீதான எ[...] நம்பிக்கைகளையாவது காப்பாற்றி விடும் வி[...] உள்ளூர்த்தலைமையை, பேரினவாதத்துக்[...] கொடுக்கக்கூடிய உள்ளூர்த்தலைமையை [...] கொள்ள விரும்புகிறது. இத்தலைமைகள் ஆ[...] ஆதரித்து போட்டியிட்டாலும் சரி எதிர்த்துப் [...] டாலும் சரி, எல்லாமே அரசின் நோககததுக்[...] என்றே அது கணிப்பிடுகிறது.
- பெருமளவு தமிழ் பேசும் மக்கள் இடம்[...] கும் நிலையில், 1981 ஆண்டுக்குப் பி[...]ன இடாப்புகள் புதிதாக தயார்செய்யப்படாத நி[...] மளவில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டபி[...] வாக்காளர் இடாப்புகள் அவசர அவசரமாக [...] யப்பட்டு இத்தேர்தலை நடாத்துவதன் மூலம் [...] யல் பிரதிநிதித்துவத்திற்கு பெருமளவு வா[...] வாக்கி, சிங்களவர்களே பெரும்பான்மை[...] எனக்காட்டும் பேரினவாத ஆக்கிரமிப்பை [...] விரும்புகிறது.
- தமிழ் -முஸ்லீம் மக்களிடையே ஏற்பட்[...] ணர்வுகளை இத்தேர்தலினூடாக மேலும் ஊ[...] வதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் அரசிய[...] யைப் பலவீனப்படுத்த நினைக்கிறது.
- அரச இயந்திரங்கள், ஆளும்கட்சியின் [...] ஆகியவற்றின் மூலம் தேர்தல் முறையினை [...] கேலிக்கூத்தானதாக இருந்தாலும் சரி[...] மொத்த அரசியலில் நிலவுவது பயங்கரவ[...] னையே என்று காட்ட விரும்புகிறது.
- நாட்டில் இனப்பிரச்சினையில்லை இருப்[...] வாதம் தான் என்றும், அதுவும் யாழ்குடா[...] மட்டும் தான் இருக்கிறது என்கிற தனது கூ[...] பது.
- கிழக்கில் அமைதியான சூழல் நிலவுகிற[...] எதுவுமில்லை என்கிற போலியான தோற்றத்[...] குவது.

## தேர்தலில் நிற்பவர்கள் இப்படிக் கூறுகிறார்கள்

## தேர்தலை நிராகரிப்பவர்கள் இப்படிக் கூறுகிறார்கள்


## அரசின்[...]

இந்த உள்ளூராட்[...] பிரதேசமான வட[...] ஜன வாக்கெடுப்[...] எனவே வட கி[...] கான நிலைமை[...] துள்ள வாய்ப்பை[...] கொண்டு அரசு இ[...]

முழுக்க முழுக்க [...] நடவடிக்கையில் [...] பெயரில் நடாத்து[...] வது என்பது தமி[...] குத் துணை போ[...] கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்






நற்காலிக
தேசத்தை
லமைப்பு
ற்கு ஒரு

கச் சூழல்
ம்புகிறது
அகதிக
தின் கீழ்
த்து விட

சொச்ச
தில் ஒரு
முண்டு
நவாக்கிக்
கட்சியை
ட்டியிட்
கந்தவை

பர்ந்திருக்
ளர்
பில் பெரு
இப்போது
பார் செய்
கள் அரசி
பை உரு
னவர்கள்
து செய்ய

ள கசப்பு
பெருக்கு
காரிக்கை

ண்டர்கள்
எப்படி
து
பிரச்சி

பயங்கர
ட்டிற்குள்
நிரூபிப்

ரச்சினை
உருவாக்

| தேர்தல் நடத்தப்படவுள்ள மாவட்டம் | மொத்த வாக்காளர் தொகை (1989) | 1989 பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் | இடம் பெயர்ந்துள்ள தமிழ் முஸ்லீம்களின் தொகை (1993) | மாவட்ட சனத்தொகையில் தமிழ், முஸ்லீம் மக்களின் வீதாசாரம் (1981) | | | தமிழ், முஸ்லீம் வாக்காளர்களின் தொகை | மாவட்ட சனத்தொகையில் வாக்காளர் சதவீதம் (*) (1989) | இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்களின் தொகை. (*) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தமிழ் | முஸ்லீம் | மொத்தம் | | | |
| வவுனியா | 53 733 | 21950 | 15992 | 76.4 | 6.8 | 83.2 | 44706 | 47.98 | 7676 |
| திருகோணமலை | 152289 | 106456 | 34249 | 36.4 | 29.3 | 65.7 | 100053 | 49.61 | 17124 |
| மட்டக்களப்பு | 216574 | 169284 | 65772 | 72.0 | 23.9 | 95.9 | 207694 | 54.01 | 35516 |
| அம்பாறை | 265768 | 224441 | 23186 | 20.4 | 41.5 | 61.9 | 164510 | 57.15 | 14375 |

* -அண்ணளவாக

தேர்தல் நடக்கும் பிரதேசங்களில் இடம் பெயர்ந்து வாழும் தமிழ் முஸ்லீம் வாக்காளர்களின் தொகை 74691. இது இப்பிரதேசங்களில் உள்ள மொத்த வாக்காளர் தொகையின் 10.8% ஆகும். இத்தொகை 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் 14.3%ஐ வகிக்கிறது.

## நீங்கள் இந்தத் தேர்தலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பெயர்..................... மட்டக்களப்பு**

இந்தக் கேள்வியை எங்களிடம் நீங்கள் கேட்டதை விட நீங்கள் இங்கேயே இருந்து பார்த்திருந்தால் பல சுவாரஸ்யமான விடயங்கள் உங்களுக்குத் தெரிய வந்திருக்கும். அரசாங்கம் தேர்தல் நடாத்தப் போவதாக அறிவித்ததோ இல்லையோ, அதுமட்டும் எங்களை நாயாய் நடத்தின இயக்கங்களும், தலைவர்களும் நாய் போல வாலைக் குழைத்துக் கொண்டு தேடிவந்தார்கள், காலில் விழாக்குறையாக தங்கள் சார்பில் தேர்தலில் நிற்கும்படி வேண்டினார்கள். நான் மறுத்த போது தேர்தலில் நின்றால் எவ்வளவு சலுகைகள் கிடைக்கும் என்று ரகசியமாகச் சொன்னார்கள். நான் அதற்கும் மறுத்தேன். மறுத்தால் தேர்தல் முடிய கவனிக்க வேண்டியமாதிரிக் கவனிப்போம் என்று மிரட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்த லட்சணத்தில் அரசும், பிரிகேடியரும், அரசாங்க அதிபரும் சுதந்திரமான தேர்தலை நடாத்தப்போவதாகப் பசப்புவதை யார் நம்பப் போகிறார்கள்? முதலில் மக்களைக் கொன்றொழிக்கிற யுத்தத்தை நிறுத்த வேண்டும். தேர்தலைப் பற்றி யார் இப்போது கேட்டார்கள்?

**பெயர்..................... ஏறாவூர்**

எல்லாத் தமிழ்க் கட்சியினருக்கும் தெரியும். தமிழ்ச்சனம் ஒருத்தருக்கும் 'வோட்' போடாதென்று. அந்தப் பயத்திலை தான் தேர்தலை நடத்த வேண்டாமென்று முதல்லை சொல்லிப் பார்த்தவை இந்தக் கட்சிகள். அரசாங்கம் இவையளைப் பற்றி அக்கறைப்படாமல் தேர்தலை நடத்த முடிவெடுத்தவுடனேயே கொழும்பிலிருந்து இங்கை வந்து தேர்தலை நிற்பாட்டிறதுக்கு ஆள்ப்பிடியிலை இறங்கினார்கள். சில பேரைப் பயமுறுத்தி கையெழுத்து வாங்கினார்கள். அரசாங்கம் இதுகளைப் பற்றிக் கவலைப்படேல்லை. அரசாங்கத்துக்கு வெற்றியோ தோல்வியோ தேர்தலை நடத்தினாச்சரி. தேர்தலை நிராகரிக்கச் சொல்கிற ஈ.பீ.ஆர். எல்.எவ்வும் கூட்டணியும் இந்தியப்படை இருந்த காலத்திலை நடந்த தேர்தலை சரியானது எண்டவங்கதானே. இப்ப ஏன் பிழை என்று சொல்லிகினமெண்டு விளங்கேல்லை. வெல்லுறாக்கள் தேர்தல் சரியானது எண்டு சொல்லுறதும், தோற்கிறாக்கள் பிழையானது எண்டு சொல்லிறதும் வழமை; என்னவோ இதைப்பற்றி ஆர் இப்ப கவலைப்பட்டது. வோட் போடுற அண்டைக்கு துவக்கோட வந்து வா வந்து கட்டாயம் போடு எண்டால் ஏதோ ஒண்டிலை கிறீப் போட்டு வாறது தானே. மனிசருக்கு இருக்கிற ஆயிரம் பிரச்சினையிலை உதைப் பற்றி ஆர் யோசிக்கிறது?

**பெயர் ..................... கல்முனை**

நான் நினைக்கிறன் அடிக்கடி இந்தத் தேர்தலை நடத்த வேணுமெண்டு. ஏனெண்டா இந்தக் காலத்திலை தான் மனிசருக்குக் கொஞ்சம் மதிப்புக் கிடைக்குது. கொஞ்ச மெண்டாலும் மனிசர் மாதிரி அப்பதான் நடத்துவார்கள். எங்களுக்கு அரசாங்கமோ இல்லாட்டி மற்றக் கட்சியளோ ஒண்டும் செய்து தராட்டிலும், எல்லாம் செய்து தாறதா சொல்லிறது இந்தக் காலத்திலை தானே. அப்பிடிச் சொல்லுறதைக் கேட்டுக் கொண்டெண்டாலும் கொஞ்சக் காலத்தை சந்தோஷமாக கழிக்கலாம். இப்ப பாருங்கோ எத்தினை பேர் காணாமல் போனவை எண்டு இயக்கங்கள் கணக்கெடுக்கினம்; பிரிகேடியர் கணக்கெடுக்கிறார்; நிவாரணக் காசு ஒழுங்காகக் கிடைச்சுதோ எண்டு எத்தினை கட்சிகாரர் படலையிலை தட்டிக் கேட்டுட்டுப் போயிருக்கினம். பிரிகேடியற்ற தலைமையில இருக்கிற ஆமிக்காறரும் இயக்கக்காரரும் தானே பொடியள் காணாமல் போறதுக்குக் காரணம் எண்டு நீங்கள் கேக்கக்கூடாது. கடத்திறதும் அவை கணக்கெடுக்கிறதும் அவை. முன்னை கடத்திச்சினம், இப்ப கணக்கெடுக்கினம். தேர்தல் வந்தபடியாத் தானே கணக்கெடுப்பு நடக்குது. அதுதான் நான் சொல்லிறன் அடிக்கடி தேர்தல் நடக்க வேணுமெண்டு. நீங்கள் ஆருக்கு வோட் போடப் போறியள் எண்டு கேக்கிறியள். நான் என்ன சொல்லிறதெண்டால் தேர்தல் அடிக்கடி நடக்கட்டும். ஆனா நீங்கள் ஆருக்கும் 'வோட்' போட மாட்டோம். எங்களை கொலைக்களத்துக்கு கொண்டு போறாக்களுக்கு எங்கடை கையாலையே வோட் போட எங்களுக்கென்ன விசரே?

**குறிப்பு:**

நாம் பேசிய இந்த மூவரிடமும் பெயரும், புகைப்படமும் கேட்டோம். உங்கடை பேப்பரிலை கடிதம் எழுதப்போய் ஆரையம்பதியில் நடந்தது என்ன என்று உங்களுக்குத் தெரியும்தானே. பெயரையும், படத்தையும் தந்து மரண அஞ்சலிக்கு ஏற்பாடு செய்யச் சொல்கிறீர்களா? என்று அவர்கள் திருப்பிக் கேட்டார்கள்.

எங்களால் என்ன பதில் சொல்ல முடியும்?



## தமிழ்ப்பிரச்சினைக்கு தீர்வில்லாமல் தேர்தலா?

### த.வி.கூட்டணி பா. உ. ஜோசப் பரராஜசிங்கம்

தமிழ் மக்களுக்கு எதுவித பாதுகாப்புமற்ற நிலையில் இராணுவ நிர்வாகத்தின் கீழேயே தேர்தல் நடைபெறுகிறது. இது சுதந்திரமான தேர்தலாக எப்படி அமைய முடியும்?

இதுதவிர இந்தத் தேர்தலூடாக கிழக்கு மாகாண மக்கள் ஜனநாயக ரீதியாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து விட்டார்கள். அங்கு முறையான சிவில் நிர்வாகம் நடக்கப் போகிறது. வடக்கில் மட்டும் தான் இனிப் பிரச்சினை அதுவும் பயங்கரவாதப் பிரச்சினை தான் என அரசு தனது கூற்றை மெய்ப்பிக்க விரும்புகிறது. இது வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான ஒரு ஒத்திகையே.

அரசாங்கம் இதுவரை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வினையும் முன்வைக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொக்ஸி போன்றோர் இத்தேர்தலில் எம்மைப் போட்டியிடுமாறு வற்புறுத்தினார்கள். இத்தேர்தலில் கலந்து கொள்வதாயின் முதலில் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமாறு அரசாங்கத்திடம் நாம் கேட்டோம். மறுபுறத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளவர்களில் 90% மான மக்கள் அகதிகளாக வீடுகளை இழந்து அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். 75000க்கும் அதிகமான மக்கள் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். இது தவிர பாராளுமன்றத் தேர்தலைப் போலல்லாது பதிவு செய்யப்படாத வாக்காளர்கள் அல்லது அகதிகளாக பிற இடங்களிலிருந்து தேர்தலில் பங்கு கொள்ளும் வாயப்பில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரை பெருமளவானவர்கள் கடந்த காலத்தில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து சென்ற காரணத்தினால் அவர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்படாத சூழ்நிலை உள்ளது. மற்றது மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் எதுவும் கொடுபடவில்லை. மரணக் கொடுப்பனவுகள் கொடுபடவில்லை. அதேபோல் காயப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் கூட கொடுபடவில்லை. இந்நிலையில் அங்கு தேர்தலை நடாத்துவது அவ்வளவு நல்லதல்ல என்பது எமது அபிப்பிராயம்.



## வட-கிழக்கு பிரிப்புக்கான ஒத்திகையே தேர்தல்

### - தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம்

தமிழ் காங்கிரஸ் இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு எதிராகவே இருக்கிறது. நாம் தேர்தலை ஏன் நடாத்தக் கூடாது என முன்னரே கூறியிருக்கிறோம். ஆனால் அரசாங்கம் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆலோசனைக்கு மாறாகத் தேர்தலை நடாத்துகிறது. தமிழ்க் கட்சிகள் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றன. இந்நிலையில் தமிழ் வாக்காளர் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசு இரண்டு பிரதான நோக்கங்களுக்காகத் தேர்தலை நடாத்துகிறது. முதலாவது; வடக்கு-கிழக்கில் அமைதி நிலவுகிறது. சுமுகமான நிலை ஏற்பட்டுவிட்டது என்று காட்டுவதனூடாக வெளிநாடுகளிலிருந்து ஆதரவையும், பண உதவியையும் பெறுவது இரண்டாவது; வடக்கையும் கிழக்கையும் துண்டிப்பதற்கான ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை வைக்க முடியுமா என ஒத்திகை பார்ப்பது. இந்நிலையில் தமிழ் வாக்காளர் முன் வாக்களிப்பதா, பகிஷ்கரிப்பதா, செல்லுபடியற்றதாக்குவதா என்கிற மூன்று பிரதான கேள்விகள் எழுகின்றன. தமிழ் மக்கள் ஆளும் ஐக்கிய தேசியகட்சிக்கு வாக்களித்தால் இதுவரை காலம் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த வன்முறையையும், ஒடுக்கு முறையையும் ஏற்றுக் கொண்டதாகி விடும் என்பதோடு இனிமேலும் அதே ஒடுக்குமுறையும், வன்முறையும் தொடர வழி வகுத்ததாகி விடும். மாறாக ஏனைய, தமிழர் கட்சிகளால் நிறுத்தப்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு வாக்களிக்கலாம் என்று யாராவது கருதக் கூடும். உண்மையில் இந்தத் தமிழ்க் கட்சிகளும் ஐ.தே.கவும் வேறானவை அல்ல. இவ்வளவு காலமும் இதே ஐ.தே.காவின் காலை நக்கிப் பிழைத்தவை தான் இவை. தேர்தலுக்காக 'வடகிழக்கு இணைப்பு, தமிழர் உரிமை என்று இவர்கள் போடுகிற கோஷத்துக்கு தமிழ் மக்கள் பலியாகி விடக் கூடாது. தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராகவே இதுவரை இக்கட்சிகள் அரசியலை நடாத்தி வந்தன. உண்மையில் இவர்கள் கடைந்தெடுத்த பொறுக்கி அரசியல் வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதானது தமிழ் தேசிய இனத்துக்கெதிரான பாரதூரமான செயல்.



## ...திக்குப் ...பியாக மாட்டோம் -

### ...பி.ஆர்.எல்.எப் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

...றத் தேர்தல் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத்
...கு மாகாணத்திலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான சர்வ
...டாத்துவதற்கான ஒத்திகையாக நடாத்தப்படுகிறது.
...பிரித்தல், தொடர்ச்சியான யுத்தத்தை நடாத்துவதற்
...ணுதல், யுத்தத்தின் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்
...ன்படுத்துதல் என்கிற நோக்கை அடிப்படையாகக்
...தேர்தலை நடாத்த முயல்கிறது.

...லுவமும், விசேட அதிரடிப்படையினருமே தேர்தல்
...ன பங்கெடுத்துள்ளனர். இதனை ஜனநாயகம் என்ற
...ிக்கூத்தாகவே கருதமுடியும். இதில் நாம் பங்கு பற்று
...ம் மக்களுக்கெதிரான அரசின் சதி நடவடிக்கைகளுக்
...வ அமையும். இதனாலேயே நாம் தேர்தலை நிராகரிக்

நன்றி - நூலகத்திட்டம்



எமக்கு வந்து சேர்கின்ற படைப்புகளில் கவிதை அளவு சிறுகதை தரத்தை எட்டுவதில்லை. காரணம் பல. எமது வாசகர்களுக்கு **நல்ல சிறுகதை எப்படி இருக்கலாம்** என குறிப்பிடத்தக்க சிறுகதை ஆசிரியர்களின் சிறு கதைகளைப் பிரசுரிப்பதன் மூலம் இனம் காட்டலாம் என்று நம்புகிறோம். அவ்வகையில் இம்முறை ஒரு கதை. வரும் இதழ்களில் இடையிடை இவ்வாறான **சிறுகதைகள்** வெளியாகும்.

# யாருக்குப் பிரதிநிதி?

**விந்தன்**

'அம்மா!'
'யார், அது?'
'ஐயா இருக்கிறாரா, அம்மா?'
'இருக்கிறார்; என்ன சமாச்சாரம்?'
'ஒண்ணுமில்லை, அம்மா! அவரைக் கொஞ்சம் பார்க்கணும்.'
'ரொம்பப் பார்க்க வேண்டியதில்லையோ! ஒண்ணுமில்லாததற்கு அவரைப் பார்ப்பானேன்?'

'இல்லை அம்மா! வந்து....

'என்னத்தை வந்து...? ஐயாவைப் பார்ப்பதற்கு வேளை நாழி ஒன்றுமே கிடையாதா? நினைத்த நேரத்திலெல்லாம் பார்க்க வந்துவிட வேண்டியது தானா? இந்தக் கொட்டும் மழையிலே எப்படித்தான் நீங்கள் வந்து இப்படிக் கழுத்தை அறுக்கிறீர்களோ தெரியவில்லையே!'

இந்தச் சமயத்தில் பதிதாகச் சிநேகமான ஒரு பெரிய மனிதருடன் சுவாரஸ்யமாககப் பேசிக் கொண்டிருந்த 'ஐயா', 'என்னடி அது? இப்படி உள்ளே வா!' என்று தம்முடைய தர்மபத்தினியை அழைத்தார்.

'அது என்ன எழவோ! இங்கே வந்து பாருங்கள்! அசல் தரித்திரங்களா ஏழெட்டு வந்து நிற்கிறதுகள்!' என்று சொல்லிக் கொண்டே 'அம்மா' உள்ளே சென்றாள்.

இன்னொரு சமயம் வந்து தம்மைப் பார்க்கும்படி அந்தப் பெரிய மனிதரிடம் சொல்லிவிட்டு, 'ஐயா' எழுந்து வெளியே வந்தார். 'அம்மா' சொன்னபடி அங்கே ஏழெட்டு 'அசல் தரித்திரங்கள்' தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் தலைவிரி கோலமாக வந்து நின்று கொண்டிருந்தன.

'என்னடா, இது? நீங்கள் யார்? என்ன சேதி?' என்று வெளியே வந்த 'ஐயா' அதிகாரத் தோரணையில் இரைந்து கேட்டார்.

'சாமி! நாங்க செம்படவனுங்க! சமுத்திரக் கரையோரமா ஆளுக்கொரு குடிசை போட்டுகிட்டு எங்க தொழிலைச் செஞ்சிக்கிட்டு இருந்தோம். அந்தக் குடிசைகள் இருக்கிறது சமுத்திரக்கரையின் அழகைக் கெடுக்குதாம். அதுக்காவ யாரோ அஞ்சாறு பேர் வந்து எங்க குடிசைகளையெல்லாம் பிரிச்சுப் போட்டுட்டாங்க! நாங்க என்ன செய்வோம், சாமி! எங்களுக்கு இருக்க இடமில்லை....

'ஏன் உங்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுத்தார்களோ, இல்லையோ!'

'கொடுக்காம என்ன, சாமி! ஆளுக்குப் பத்து ரூவாக் காசு கொடுத்தாங்க....!'

'பத்து ரூபாய்க் காசு கொடுக்காமல் உங்களுடைய படங்களாக்கள் ஒவ்வொன்றுக்கும் பத்து லட்சமா கொடுப்பார்கள்?'

'பத்து லட்சம் கேட்கலை, சாமி!'அப்பாடி!'ன்னு படுக்கப் பத்தடி இடந்தான் கேட்கிறோம். அதுக்கு இந்தப் பத்து ரூவாயை வச்சுகிட்டு நாங்க என்ன செய்வது, சாமி!'

'அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? ஊரிலே எந்த எழவு நடந்தாலும் அதற்கு இந்த அன்னவிசாரம் தானா பொறுப்பாளி? - போங்கடா வேலையைப் பார்த்துக் கொண்டு!' என்று எரிந்து விழுந்தார் 'ஐயா'.

'அப்படிச் சொல்லிப்பிட்டா எப்படி, சாமி? கோடி வீட்டு ஐயா சொன்னாரு - உங்கக்கிட்ட சொன்னா மேலிடத்திலே சொல்லி எங்களுக்காக ஏதாச்சும் செய்விங்கன்னு!'

'அவனுக்கும் வேலை கிடையாது; உங்களுக்கும் வேலை கிடையாது. நானும் உங்களைப் போலவா இருக்கிறேன்? எனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது. நீங்கள் போய்த் தொலையுங்கள்!'

'வேலையோடு வேலையா இந்த ஏழைகளையும் கொஞ்சம் கவனிச்சிக்கிட்டா நீங்க நல்லாயிருப்பீங்க, சாமி!'

'இல்லாவிட்டால் கெட்டு விடுவேனாக்கும்! - அட சனியன்களே! நீங்கள் மட்டுந்தானா ஏழைகள்? நாங்களுந்தான் ஏழைகள்! - முதலில் நீங்கள் இங்கிருந்து நடையைக் கட்டுங்கள்; அப்புறம் நான் உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்!' என்று சொல்லி விட்டுக் கதவைப் 'படா'ரென்று சாத்திக் கொண்டு 'ஐயா' உள்ளே சென்று விட்டார்.

ஸ்ரீமான் அன்னவிசாரம் எம்.எல்.ஏ. ஒரு காலத்தில்



வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் தம்முடைய மனைவியை மாமனார் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, வேறு வழியின்றி நகரிலிருந்த சேவாகிராமத்தில் சேர்ந்தார். அந்த ஆசிரமத்தில் அவருக்கு மாதா மாதம் ரூபாய் ஐம்பது சம்பளம் கிடைத்து வந்தது. அதை அவர் வெளியே சொல்லிக் கொள்வதில்லை. அப்படிச் சொல்லிக் கொள்வது தம்முடைய தொண்டுக்குத் தாமே மாசு கற்பித்துக் கொள்வதாகுமென்று அவர் நினைத்தார்.

அந்த ஆசிரமத்தில் பொதுஜனச் செல்வாக்குள்ள ஒரு நண்பரின் சிநேகம் ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு கிடைத்தது. நண்பர் நல்ல பேச்சாளர்; அடிக்கடி பல பொதுக்கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வார். அவர் சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஸ்ரீ அன்னவிசாரத்தைப் பற்றிக் சக்கைப் போடு போட்டு வந்தார். ஸ்ரீ அன்னவிசாரத்தின் தன்னலமற்ற சேவையைப் பற்றியும், தேசத்துக்காக அவர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்திருப்பதைப்பற்றியும் அந்த நண்பர் சாங்கோயபாங்கமாக எடுத்துச் சொல்லி வந்தார்.

இந்த விஷயத்தில் ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு மட்டும் அடிக்கடி சந்தேகம் வந்துவிடும். அவ்வாறு சந்தேகம் வரும் போதெல்லாம் அவர் தம் உடலை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொள்வார்; அது என்றும் இருப்பது போல் வாடாமல் வதங்காமல் இருக்கும். அதற்குள் ஒரு முறை அவர் தம் அங்க அவயங்களையெல்லாம் அசைத்துப் பார்த்துக் கொள்வார்; அதன் மூலம் ஆவியும் இருப்பதாகத் தெரியவரும். பொருளைத்தான் அவர் பார்ப்பதேயில்லை. ஏனெனில், அதுதான் அவரிடம் கிடையவே கிடையாதே!

இருப்பதைச் சொல்லட்டும், இல்லாததைச் சொல்லட்டும் அந்தப் பக்கத்து ஜனங்கள் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படுவதேயில்லை. இத்தகைய மகாஜனங்களின் அசட்டுத்தனத்தினாலும், நண்பருடைய பிரசார பலத்தினாலும் ஸ்ரீ அன்னவிசாரம் எம்.எல்.ஏ. ஆனார். கனம் அங்கத்தினரானதும் ஸ்ரீ அன்னவிசாரத்தின் கவலை ஒருவாறு தீர்ந்தது. மாமனார் வீட்டிலிருந்த தம்முடைய மனைவியை அழைத்துக் கொண்டதோடு, இன்னொரு மாதரசியையும் காதலித்து இரகசியமாக மறு விவாகம் செய்து கொண்டார்!.

'பொதுஜனப் பிரதிநிதி' என்ற ஒரே ஒரு காரணத்துக்காக, அவருடைய 'சிக்கலான வாழ்க்கையை'யைச் சிலர் இன்னும் சிக்கலாக ஆக்கி வந்தனர். அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் அந்தச் செம்படவர்களும்.

அந்தத் 'தரித்திர'ங்களை அனுப்பிவிட்டு உள்ளே வந்த ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு ஒன்றுமே ஓடவில்லை.

அவருக்கு எதிரே பிரெஞ்சு அறிஞரான ரூஸ்ஸோவின் புத்தகமொன்று கிடந்தது. ஒரு காரணமுமில்லாமல் அதை எடுத்துப் புரட்டினார். அரசியல் நிர்வாகிகளைப் பற்றி அந்த மேதை எழுதியிருந்த ஒரு விஷயம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது!

'அரசியலை நிர்வகிக்கும் ஒவ்வொரு அதிகாரிக்கும் மூன்று வித மனப்பான்மைகள் இருக்கின்றன. முதலாவது, அவனுடைய சொந்த மனப்பான்மைகள்; இது சுயநலத்தை நாடுகிறது. இரண்டாவது, ஆளுகின்ற மனப்பான்மை; இது சர்க்கார் நலத்தை நாடுகிறது. மூன்றாவதாகத்தான் மக்களுடைய மனப்பான்மை இருக்கிறது; இது மக்களுடைய நன்மையை நாடுகிறது.'

நியாயமும் நேர்மையும் கொண்ட அரசாங்கம் நடைபெற வேண்டுமானால், சர்க்கார் நிர்வாகிகள் முதலாவது மனப்பான்மையைக் கைவிட வேண்டும். அதாவது, அவர்கள் சுயநலத்தைக் கருதக்கூடாது. இரண்டாவது மனப்பான்மை ஓர் அளவுடன் இருக்க வேண்டும். அதாவது, சர்க்காருடைய நன்மையைக் கவனிக்க வேண்டுமென்றாலும் அதுவே முக்கியமானதாகயிருக்கக்கூடாது. மூன்றாவது மனப்பான்மையைத்தான் அவர்கள் முதன்மையானதாகக் கொள்ள வேண்டும். அதாவது, மக்களுடைய நன்மையை முக்கியமாகக் கொண்டு, அந்த நன்மையின் மூலமாக மற்ற இரண்டு நன்மைகளையும் அடையப் பார்க்க வேண்டும். இந்த முறையை விட்டுவிட்டு, முதல் இரண்டு நன்மைகளின் மூலமாக மக்களுடைய நன்மையை நாடவே கூடாது.'

இந்த 'அரசியல் சித்தாந்தம்' ஸ்ரீ அன்னவிசாரத்தை என்னவோ செய்தது. புத்தகத்தை மூடி வீசி எறிந்துவிட்டு எழுந்தார். எதிரே சகதர்மிணி காப்பியுடன் வந்து நின்றாள். அதை அலட்சியமாக வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, அவசர அவசரமாகச் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார். இன்று சட்டசபையில் அந்த 'அசல் தரித்திர'ங்களைப் பற்றி எப்படியாவது வெளுத்து வாங்கி விடுவது என்றும், ரூஸ்ஸோவின் கூற்றைப் பொய்யாக்கி, மூன்றாவது மனப்பான்மையான மக்கள் மனப்பான்மையை இனி முதல் மனப்பான்மையாகக் கொள்வதென்றும் தீர்மானித்துக் கொண்டு கிளம்பினார்.

என்றுமில்லாத விதமாக அன்று ஸ்ரீ அன்னவிசாரத்தைக் கண்டதும் மற்ற எம்.எல்.ஏ.க்கள் எல்லோரும் முகமலர்ச்சியுடன் வரவேற்றனர். ஸ்ரீ அன்னவிசாரம் ஒன்றும் புரியாமல் அவர்களைப் பார்த்து விழித்தது விழித்தபடி நின்றார்.

'அன்ன விசாரத்துக்கு என்ன அப்பா! அடிக்கிறது யோகம்!' என்றார் ஒருவர்.

'இனிமேல் நம்மையெல்லாம் அவர் எங்கே கவனிக்கப் போகிறார்!' என்றார் இன்னொருவர்.

'எப்பொழுதாவது ஒரு சமயம் பேட்டியாவது அளிப்பாரோ, என்னமோ!' என்றார் மற்றும் ஒருவர்.

ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'என்ன விசேஷம்?' என்று மெல்லக் கேட்டார்.

'விசேஷமா! உங்களுக்குத் தெரியலே தெரியாதா! நீரும் ஒரு மந்திரியாகப் போகிறீர் ஐயா, மந்திரியாகப் போகிறீர்!' என்றார் ஒருவர்.

தூக்கி வாரிப் போட்டது ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு! இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, இதென்ன பிதற்றல்? எந்த இலாக்காவும் காலியாக இருப்பதாகக் கூடத் தெரியவில்லையே!' என்றார் அவர்.

'இலாக்கா காலியாக இல்லாவிட்டால் என்ன?' நீர் 'இலாக்கா இல்லாத மந்திரி'யாக இருந்துவிட்டுப் போகிறீர்!' என்றார் ஒரு வயிற்றெரிச்சல்காரர்.

இப்பொழுதுதான் இந்த விஷயத்தில் ஏதோ உண்மை இருக்க வேண்டுமென்று தோன்றிற்று ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு. உடனே அவருடைய கவனம் 'அசல் தரித்திரங்'களின் மீது சென்றது.

'இந்தச் சமயத்தில் அந்த 'அசல் தரித்திரங்'களைப் பற்றி நாம் இங்கே ஏதாவது உளறுவானேன்? சமுத்திரக்கரை அழகாக இருக்க வேண்டுமென்பது நகரத்துப் பெரிய மனிதர்கள், பிரமுகர்கள் ஆகியவர்களின் அபிப்பிராயம். அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது அரசாங்கத்துக்கு நல்லதா, அந்தத் தரித்திரங்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது நல்லதா? - சீ, வேண்டாம்; வேண்டவே வேண்டாம். என்ன இருந்தாலும் நம்முடைய புத்தி இப்படிக் கீழே போக வேண்டாம். நாளுக்கு நாள் முன்னேற வேண்டிய நாம், அப்படி ஏதாவது இப்போது கேட்டு வைத்தால் அது சிலருக்கு பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது. அதன் பயனாக ஒரு வேளை மந்திரிப் பதவி கிடைக்காமலே போனாலும் போய் விடலாம். நமக்கு எதற்கு வீண் வம்பு? 'எடுத்ததற்கெல்லாம் கையைத் தூக்கினோம், வீட்டுக்குப் போனோம்' என்று இருப்பதே மேல்!'

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் ஸ்ரீ அன்னவிசாரம் 'அசல் தரித்திரங்க'ளைப் பற்றிய விசாரத்தை விட்டார். சட்ட சபையில் 'சிவனே!' என்று உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு, வீடு திரும்பினார்.

அன்றிரவு அவருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. காரணம், அவருடைய மனம் 'மந்திரியின் மகாத்மிய'த்திலேயே லயித்து விட்டதுதான்!

மறுநாள் காலை ஸ்ரீ அன்னவிசாரம் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கும், அந்த 'அசல் தரித்திரங்'களில் ஒன்று வந்து ஜன்னல் வழியே தலையை நீட்டுவதற்கும் சரியாயிருந்தது.

'யாரடா, அது?'
'நான்தான் குப்பனுங்க!'
'குப்பனா!'
'ஆமாங்க, நேத்து வந்து குடிசையைப் பிரிச்சுப் போட்டுட்டாங்கனு முறையிட்டுக்கிட்டோமில்லே, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனுங்க!'

'ஓஹோ! இப்போது ஏன் இங்கே வந்தாய்?'
'மேலிடத்திலே எங்களைப் பற்றி ஏதாச்சும் சொன்னீங்காளான்னு கேட்கத்தான் வந்தேனுங்க!'

'மேலிடம் என்னடா மேலிடம்! எனக்கு மூளைகீளை ஒன்றும் கிடையாதா? நாலு பேருக்கு நல்லதென்று எண்ணி ஒரு காரியம் செய்தால், அது ஓரிருவருக்குக் கெடுதலாகவும் முடியுந்தான்! அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா, என்ன? - போ, போ!'

'என்ன சாமி, இப்படிச் சொல்றீங்க? 'நீங்க எங்க பிரதிநிதி, எங்க பக்கமாப் பேசத்தான் மேலிடத்துக்குப் போயிருக்கீங்க'ன்னு கோடி வீட்டு ஐயா சொன்னாரே! உங்க பேச்சைப் பார்த்தா நீங்க 'யாருக்குப் பிரதிநிதி'ன்னு தெரியலைங்களே!' என்றான் குப்பன் வியப்புடன்.

அவ்வளவுதான்; ஸ்ரீமான் அன்னவிசாரத்துக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்துவிட்டது. அவர் படுக்கையை விட்டுத் 'தடா'லென்று கீழே குதித்தார். குப்பனுக்கு நேராகச் சென்று ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு, 'அடேய், அதிகப் பிரசங்கி! நான் யாருக்குப் பிரதிநிதி என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், கேட்டுக் கொள்! நான் எனக்குப் பிரதிநிதி; என் வீட்டுக்குப் பிரதிநிதி! உனக்கும் பிரதிநிதி இல்லை; உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதி இல்லை, போ!' என்று கத்தி விட்டுக் குளிக்கும் அறையை நோக்கி 'மந்திரி நடை' நடந்து சென்றார்.


'அப்படிப் போடுங்கள், ஒரு போடு! அடுத்த 'எலெக்ஷன்' வரும் வரைதான் நமக்குக் கவலையில்லையே! என்று தன் பதி சொன்னதை அப்படியே ஆமோதித்தாள் அவருடைய சதி.

'விந்தன் பற்றி ....

தொழிலாளியாக வாழ்ந்து, அந்நிலையில் நின்று சிறுகதை படைத்தவர். இதன் காரணமாக அடிநிலையில் வாழ்ந்த மக்களின் மனநிலை, மனப்போராட்டம் என்பன இவர் எழுத்தில் பயின்று வந்தன. இது 40களின் பிற்பகுதியிலும், 50களின் முற்பகுதியிலும், தமிழிலக்கியப் பரப்பில் வித்தியாசமான கண்ணோட்டத்தை ஏற்படுத்தியது. இவர் 'மனிதன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். 'பாலும் பாவையும்' இவரது குறிப்பிட வேண்டிய நாவல் ஆகும். இவருக்குக் கிடைத்த அனுபவங்கள் ஏராளம். ஆயினும், தனது வளங்களை, அனுபவங்களை விரயம் செய்தவர் என்னும் குற்றச்சாட்டு இவர் மீது உண்டு.

நன்றி - நூலகத்திட்டம்





# அரங்காடிகள் பற்றிய அரிதேவாவின் கட்டுரை -ஒரு மறுப்பு

**அ.ரவி**

இம்மறுப்புக் கட்டுரையை நான் எழுத முற்படுவது துரதிர்ஷ்டமானது அரிதேவாவின் கட்டுரை அரங்காடிகள் பற்றியும் என்னைப்பற்றியும் சில குறிப்புகளைக் கொடுத்திருந்தது. அதற்கு நான் பதில் கொடுப்பது கூச்சத்திற்குரியது.ஆனால் கொழும்புச் சூழலில் -அரிதேவா கவனிக்கவும் -இது தவிர்க்க இயலாதது. எமக்காக நாமே இங்கு வக்கீலாக வேண்டும். இங்கு சகலதும் அவ்வாறு தான். இதனை அரிதேவாவும் போகப் போக அவதானிப்பார்.

**'அரங்காடிகளின் அளிக்கைகள் தொடர்பான சில கேள்விகளை' அரிதேவா** கேட்டிருந்தார். விமர்சனங்கள் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும். குறைநிறை சொல்லி தட்டிக் கொடுத்தல் ஒருவகை எனில், குறைமாத்திரம் சொல்லி 'மட்டந்தட்டுதல்' இன்னொரு வகை. அரிதேவாவின் கட்டுரை எவ்வகை என்பது வாசகர்களுக்குப் புரியும் மட்டந்தட்டியதனால் மனந்தளாநது இக்கட்டுரை எழுதப்பட்டதலல. சில விளக்கங்கள் கொடுக்க வேண்டிய கட்டாயம் எமக்கு உண்டு.

1) தலைப்பு அளிக்கைகள் தொடர்பான கேள்விகள் என்பது. கேள்விகள் எமக்குப் புரியவில்லை.

2) அரங்காடிகளின் தொடக்கப்புள்ளி பூச்சியமல்ல என்கிறார். எனக்கும், சோ. தேவராசாவுக்கும் நாடக அரங்கக் கல்லூரியுடன் இருந்த தொடர்பு, யாழ்ப்பாணத்தில் வேறும் நாடக முயற்சிக.ரில் ஈடுபட்டமை இவற்றைக் குறிப்பிடுகிறார். நானும், தேவராஜாவும் தனிமனிதர்கள். 'இவ்வளவும்' தெரிந்த அரிதேவாவிற்கு **நாடகம் ஒரு கூட்டுக்கலை** என்பது தெரியாதது ஆச்சரியம். இன்னுமொன்று, கொழும்புச் சூழலில் அரங்காடிகளின் தொடக்கப்புள்ளி பூச்சியமல்ல; பூச்சியத்திற்கும் முதற்புள்ளி. 1983 இன் பின்னர் கொழும்புச் சூழல் அரங்க அம்சங்களுடன் கூடிய நாடகங்களைக் கண்டதில்லை. இவ்வகையில் இது தொடக்கப்புள்ளிதான். அல்லது அதற்கும் முதற்புள்ளி.

3) இக்கட்டுரையின் முக்கிய தொனிப்பொருள் நாடகம், அரங்கம் தொடர்பாக தனக்குள்ள கல்வி அறிவை கட்டுரையாசிரியர் வெளிப்படுத்தியிருப்பது.

4)நாடகத் தெரிவுகள் பிரக்ஞையுடன் செய்யப்பட்டனவா? எனும் கேள்வி எழுப்புகிறார். பிரக்ஞையுடன் செய்யப்படவில்லை என்பதனை எதனை வைத்துக் கருதுகிறார்?

5) 'இப்போதைக்கேது வழி' பார்க்கவில்லை என்கிறார். பொறுத்தது போதும், அபசுரம் பற்றிய கறாரான விமர்சனம் என்ன? அல்லது இவர் முன்வைக்கும் கோட்பாட்டுக்குள்ளால் அதனை எவ்வாறு அளக்கிறார்?

6) இந்நாடகங்களின் பாத்திரங்கள் ஞாபகத்தில் நிற்கவில்லை என்பது இவரது குற்றச்சாட்டு. இரண்டு கேள்விகள். ஒன்று, பாத்திரம் ஞாபகத்தில் நின்றால் அது நாடகத்தின் சிறப்பம்சமா? இரண்டு, நல்ல நாடகத்தில் பாத்திரம் கட்டாயம் ஞாபகத்தில் நிற்க வேண்டுமா? நேரடி நாடகத்திற்கு (Straight Play)இது பொருந்தலாம். எல்லா நாடகத்திற்கும் அல்ல.

7) அபசுரத்தில் 'திருப்தியற்ற பாத்திர உருவாக்கம்' என எதனைக் குறிப்பிடுகின்றார்? தெளிவில்லை.

8) பின்னணி இசை, ஒளியமைப்பு பற்றிய குறைபாட்டினை ஏற்றுக் கொள்கிறோம்.

9) 'பொறுத்தது போதும்' கொழும்புச் சூழலுடன் இயைபு கொண்டதா? எனும் கேள்வியை எழுப்புகிறார். நாங்கள் ஒரு 'கடலோரக் கிராமத்தில்' மேடைகட்டி அளிக்கை செய்திருக்க வேண்டும் எனக் கட்டுரையாசிரியர் கருதுகிறாரா? இது சுத்த அபத்தம். அப்படியாயின் ;பிச்சை /வேண்டாம். ஒரு பாலை வீடு, யுகதர்மம், கண்ணாடி வார்ப்புகள் ஆகிய நாடகங்கள் இலங்கையில் மேடையேறியிருக்க முடியாது. கட்டுரையாசிரியர், நெறியாளர் எழுத்துருவை வியாக்கியானித்தல் நாடகம் என முதலில் குறிப்பிட்டார். ஏன் அவ்வாறு 'பொறுத்தது போதும்' நாடகத்தை அவரால் பார்க்க முடியாதிருந்தது? 'பொறுத்தது போதும்' நாடகம் ஒடுக்குபவனுக்கும் ஒடுக்கப்படுபவனுக்கும் இடையிலான போர் பற்றியது. மீனவச் சூழல் அதற்கான அழகிய வடிவம். அவ்வளவுதான்.

10) ஒளியமைப்பு தொடர்பாகப் பார்வையாளரை இருளூட்டல் என்பது நாடக வடிவம் எது என்பதனைப பொறுத்தே தீர்மானிக்க முடியும். பொறுத்தது போதும், ஒரு பாலை வீடு, பிச்சை வேண்டாம், கண்ணாடி வார்ப்புகள், கோடை, புதியதொரு வீடு முதலான நாடகங்களில் பார்வையாளரை இருளினுள் வைத்திருத்தல் என்பது நாடகத்தின் வெற்றியை அதிகப்படுத்தும் என்பது என் கருத்து. 'அன்னை இட்ட தீ' நாடகத்திற்கும் அது பொருந்தும். யாழ்ப்பாணத்தில் 1983 இன் பின் இரவில் நாடகம் மேடையேற்றப் படுவதில்லை. அதனால் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படுகிற நாடகங்கள் வெளிச்சத்துடன் கூடிய பகலைக் கவனத்தில் கொண்டே எழுதப்படுவதுண்டு. யாழ்ப்பாணத்துச் சூழலை இங்கு பிரதியிட வேண்டாம். அதுசரி, இருளில் ஆழ்த்தினால் நாடகம் என் சினிமா? நாடகத்திற்கும் சினிமாவிற்கும் நுண்ணிய, முக்கிய வேறுபாடுகள் உண்டு. விரிவஞ்சித் தவிர்க்கிறேன்.

11) வளமற்ற நடிகர், வளமற்ற பாடகர், போதாத ஒத்திகை நேரம் இவை நாடகத்தை எல்லைப்படுத்தும் காரணிகள் தான். எல்லா வகையிலும் யாழ்ப்பாணத்து வளத்துடன் ஒப்பிடுகிற போது ஏக்கம் தான் மிஞ்சும். யாழ்ப்பாணத்து அரங்க வளர்ச்சியுடன் கொழும்பை ஒப்பிடுவது சுத்த அபத்தமானது. இது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற வேலை. ஒரு நாடகத்தைச் செய்ய முயன்றால் அரிதேவாவும் அதனைப் புரிவார்.

12) எனது சிறுகதையுடன் எங்களது நாடகத்தை எதற்கு ஒப்பிடுவான்? சிறுகதை -தனிமனிதக் கலை. நாடகம் கூட்டுக்கலை. ''நீ சுட்ட தோசை நன்றாயிருக்கின்றது. ஆனால் நீங்கள் கொத்திய தோட்டம் விளைச்சல் தரவில்லை'' என்பது போலல்லவா இருக்கிறது இத்தகைய விமர்சனம். குருவியின் தலையில் பனங்காய் என்பது சரியான வசனம் அல்ல. அப்படி யென்றால் தாசீசியஸ், சிதம்பரநாதன் உட்பட யார்தான் குருவியாக இருக்க வில்லை?

13) உற்சாகப் படுத்தல் முக்கியமானது. ''எல்லாம் தெரியும்'' எனும் அதிகப் பிரசங்கித்தனத்துடன் தாங்கள் குறை சொல்கிற போது....நானென்ன சொல்ல?

14) குறைகள் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்வது போலவே படுகிறது. அரங்காடிகள் நண்பர்களிடம் கேட்ட போது அவர்களும் அவ்வாறு தான் சொன்னார்கள்.

15)ஆலோசனைகள் வேண்டாமென்றில்லை. செயற்படுதல் முக்கியம். சொல்லிலும் பார்க்க செயல் வலிமையானது.

லூசுனின் கருத்து ஒன்று: **'' ஒரு செயலிலும் ஈடுபாடு காட்டாதவன் ஒன்றுக்கும் அஞ்சத் தேவை இல்லை. ஏனெனில் அவனை விமர்சிப்பதற்கு ஒன்றுமில்லை. செயலில் ஈடுபடுபவன் குறை சொல்லலுக்கும் உட்படுவான்''.**

# மக்களுக்கான அரங்கு எது? அரிதேவாவிற்கு ஒரு பதில்

**விஜித் சிங்**

அரங்காடிகளின் அளிக்கை தொடர்பாக **அரிதேவா** அவர்கள் சரிநிகர் சிறப்பிதழில் சில கேள்விகளை எழுப்பியிருந்தார் அது அவருடைய தனிப்பட்ட விமர்சனம் அதனைக் கேள்விக்குள்ளாக்குவது எனது நோக்கமல்ல. சமூக மாற்றத்திற்கான ஈழத்து நாடக அரங்க வரலாறு சிதம்பரநாதன் ஊடாக முனைப்புப் பெற்று வருவதாகவும், இது நாடகத்துக்குரிய பரிமாணங்களை கேள்விக்குள்ளாக்குவதாகவும் கூறியிருந்தார் மாற்றீடான அரங்கிற்கான வடிவமும், மக்கள் அரங்கிற்கான அம்சங்களும் முதலில் வெளிப்படுத்தப்பட்டது மண்சுமந்த மேனியர் நாடகத்தில் அல்ல. எனக்குத் தெரிந்தவரையில் அத்தகைய அரங்கின் அம்சங்கள் முதன்முதலில் **''மலரும் புது யுகம்''**எனும் நாடகத்தினூடாகவே வெளிப்பட்டது.

அப்போதைய நிலையில், பலரால் அது நாடகம் அல்ல எனக் கருதப்பட்டது. அது வெறுமனே '' மேடை நிகழ்வு'' என்று கூறப்பட்டது. நாடக எழுத்து வடிவப் பிரதி இல்லாமல், நாடகம் என்ற கட்டுக் கோப்புக்குள் இல்லாது அழகியலைப் புறக்கணித்து அது நடத்தப்பட்டது. வெறுமனே கல்வியறிவில்லாத, எழுத்தறிவில்லாத நடிகர்களால் முக்கிய வேடமேற்று நடத்தப்பட்ட நாடகம்.

தொடர்ந்து **நிறம் மாறும் மனிதர்கள்** எனும் வீதி நாடகம், பிரதியில்லாமல் நாடகப்பட்டறை மூலம் வெளிப்பட்ட நாடகம்.

ஆயினும்சிதம்பரநாதன் CRY of ASIA எனும் நாடகத்திலான பயணத்தின் பின் அந்த அரங்கை விடுதலை அரங்கு என்று பெயர்சூட்டியது முக்கியமல்ல. அது மக்கள் அரங்கு. சிதம்பரநாதன் அதன் வித்தகரல்ல. இச்சிந்தனை ஈழவரலாற்றரங்கில் ஏற்கனவே வித்திடப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய இரு நாடகங்களும் கட்டுமானங்களை உடைத்து மேடையேற்றப்பட்டவை. நெறியாளர் செய்தியும் நாடகப் புலமுமே முக்கியம் • பெற வேண்டும். மறுபுறத்தில் கொழும்பில் மேடையேற்றப்பட்ட **''முகவரி தொலைந்த முகங்கள்''** எனும் நாடகம் நாடகக் கட்டுமானங்கள் அனைத்தையும் கேள்விச்குள்ளாக்கி நடத்தப்பட்டது.

1990களில் இருந்து பரிசோதனை நாடகங்களை மும்மொழி நாடகங்களினூடாக கொழும்பு பல்கலைக்கழகம் 'வழங்கி வருகிறது. இது நாடக வரலாற்றில் தாக்கம் ஏற்படுத்தியதா, இல்லையா என்பதனை இனிவரும் வரலாறு தீர்மானிக்கும்.

எனவே சரிநிகர் வாசகர்களுக்கு உண்மையான நிலைப்பாட்டினை விளக்கும் அதே சமயம் எண்பதுக்குப் பின் நாடக அரங்க வரலாறு சிதம்பர நாதனையும் சண்முகலிங்கத்தையும் மட்டும் கொண்டதல்ல. ஆனால் அவர்கள் செய்த பங்களிப்புகளை நிராகரிப்பது எனது நோக்கமல்ல.

கலைக்காக கலை என்பதைவிடுத்து கலை மக்களுக்காக எனும் போது, நாடகக் கட்டுமானங்கள் அனைத்தும், மக்களின் தேவைக்காக புதிய பரிமாணத்தை அடையும்.

இது விடுதலை அரங்கு அல்ல; மக்களின் அரங்கு. மக்களுக்கு அறிவூட்டுவதற்காக, மக்களின் மாற்றத்திற்கான தேவைகளுக்காக நடத்தப்படும் அரங்கு. அங்கு அரசியலும் விவாதிக்கப்படும். மனிதத்துவம், சமூக, பொருளாதார மாற்றங்கள் யாவும் விவாதிக்கப்படும் ஒரு பொதுவான மாற்றத்திற்கான அடிப்படைக்கு நாடகம் உந்து சக்தி மட்டுமே தொடர்ந்து அம்மாற்றத்தினை நெறிப்படுத்த வேண்டியது, மாற்றத்திற்காக உழைக்கும் ஏனைய சக்திகளின் கடமையாகும்.

அரிதேவாவின் கட்டுரையில் இவைகள் சேர்க்கப்பட்டால் இன்னும் நிறைவாக இருக்கும். இது என்னுடைய கருத்து மட்டுமே. இது ஒரு விவாதத்திற்கு வழி வகுக்கும் என நம்புகிறேன். கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மக்கள் அரங்கின் மாற்றத்திற்கான உச்சக்கட்டத்தில் மக்களே நடிகர்களாவர். நாடகத்திற்கு பயிற்சி பெற்ற கலைஞர்கள் அல்ல. மனிதத்துவம் கொண்ட சாதாரண மனிதர்களே அவசியம். மக்கள் அரங்கு கரடுமுரடான பாதைகளைக் கொண்ட பயணம்.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே 90 'களில் மேடையேற்றப்பட்ட நாடகங்களும் 85-86 வரையில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு வெளியே மேடையேற்றப்பட்ட நாடகங்களும் எவ்வளவு தூரம் மக்கள் அரங்கிற்கான தேவையை எட்டியிருக்கின்றன என்பதற்கு விரிவான ஆய்வுகள் தேவை.

பிற்குறிப்பு:**மண்சுமந்த மேனியர்** நாடகம் ஏற்படுத்திய தாக்கத்தையும் சிதம்பரநாதன், சண்முகலிங்கம் ஆகியோர் ஈழத்து நாடக, அரங்க வரலாற்றில் செய்த பங்களிப்பினையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை.

# ஏழு வெள்ளம் போடும் மாரி



வானத்துக்கு
விரிச்சகை.
ஊற்றத் தொடங்கிவிட்டது
இனிமாரி.

காற்றின்
உடம்பெல்லாம்
ஊசி
குத்தத் தொடங்கிவிட்டது.
இது-
கூதல்.

இந்தமாரி
ஏழு வெள்ளம் போடுமாம்
நாளும் பெய்யுது மழை!
பெய்யட்டும்!

இந்த மார்கழியில்
மணமுடிப்பவர்தாம்
அதிர்ஷ்டசாலிகள்...!
ஆளை ஆள்
கவட்டுக்குள் அணைக்க
இதுவேளை!

பார்...!
மழைவிடும் இடைவேளை
வானத்தின் ஒரு
பள்ளக்கையில் படுத்துக் கொண்டு
சூரியன் உறுஞ்சி
உறிஞ்சிவிடு
புகைக்காட்டுப்பேய்கள்
ஓடு வானம்!

வா
குளிக்கலாம்..
இன்னும் சற்றுநேரத்தில்
இருட்டுவானம்
என்வீட்டுப்பீலியால்
ஊத்தப் போகிறது
ஒருகடலை

— காத்தான்குடிறவூீம்

நன்றி - நூலகத்திட்டம்



ஊரெங்கும் இதுதான் பேச்சு. யாழ்ப்பாணத்தில் தொகைக்கணக்கில் கொல்லப்பட்டதில் இதுதான் முதல்.

பல இடங்களிலிருந்து கண்டனக்குரல்கள். இந்தக் கொடுமையைக் கேட்பதற்கு அரசாங்கம் தயாராகவில்லை.

உங்களில் யாரேனும் ஒருவர் கேட்டால் என் பதில் இதுதான். ''அது அப்படித்தான் ஆகும்.''

இவை பற்றி நான் சொல்ல ஒன்றுமில்லை. அப்போது பதின்மூன்று வருடங்கள் நிறையாத பருவம். என் சிந்தனை இப்படித்தான் இருந்தது.

## எதிலிருந்து தொடங்குவது -3

ஆனால் வேறு பலர் தயாராக இருந்தனர்.

**மேஜர் அல்பிரட் துரையப்பா** இக்கொலைக்கு பின்னணி என்று ஊரில் பேசிக் கொண்டனர். துரையப்பாவிற்கு இம்மரணங்களில் துணை போனது **ஏ.எல்.பி.சந்திரசேகர** என்றும் பேசிக்கோண்டனர்.

தமிழ் இளைஞர்களிடம் ஆத்திரம் இருந்தது. ஆவேசம் இருந்தது. ஆயுதம் இருக்கவில்லை என்று முன்னர் குறிப்பிட்டேன்.

எப்படியோ தெரியாது- கைக்குண்டுகள் தயாரிக்கப்பட்டன.

ஏ.எல்.பி.சந்திரசேகரவின் ஜீப்புக்கு இரண்டுமுறை கைக்குண்டுகள் வீசப்பட்டன. இரு முறையும் மயிரிழையில் உயிர் தப்பினார் என்று பத்திரிகைச் செய்தி கூறியது.

''அடச் சீ....' என்று கையைப் பிசைந்தனர் மக்கள்.

மக்களுக்குத் துரையப்பாவையும் தெரியாது. சந்திரசேகரவையும் கண்டதில்லை. ஆனால் அவர்கள் கொடுமை தெரிந்தது.

அவர்கள் மரணம் இயற்கையாக நிகழக் கூடாது என்றும், அந்தப் பொழுதில் மக்கள் மிக விரும்பியிருந்தார்கள்.

சந்திரசேகரவின் ஜீப் இரண்டு முறை குண்டு வீச்சுக்கு இலக்கானது. தப்பிவிட்டான். (ஒருமை ஆண்பாலில் சொல்வதில் எவ்வளவு சந்தோஷம்)

அப்போது ஒரு பெயர் அடிபடத் தொடங்கியது. **உரும்பிராய் சிவகுமாரன்.**

ஒரு மந்திரம் போல ஒலித்துக் கொண்டிருந்தது -சிவகுமாரன்.

யார் இந்தச் சிவகுமாரன்?

**தமிழாராய்ச்சி மாநாட்டின் வேலைப்பணிக்கு இளைஞர் குழுவுக்கு தலைமை தாங்கியவன். ஊர்வலத்தின் போது பண்டார வன்னியன் உருவத்தில் ஊர்தியொன்றின் பயணம் செய்தவன். தமிழ் தன் மூச்சு என்றானவன்.**

தலைமை அகிம்ஷாவாதம் பேசின போது ஆயுதம் தூக்கினான்.

சந்திரசேகரவின் ஜீப்புக்கு இரண்டு தரம் குண்டுகள் வீசப்பட்டன. இரண்டு தரமும் வீசிய கைகள் சிவகுமாரனுடையவை.

சிவகுமாரன் பெயரை மந்திரமாக்கி முணுமுணுத்தோம்.

சிவகுமாரன் பெயர் சொல்லிப் பொலிஸும் தேடிக் கொண்டிருந்தது.

இந்த இடத்தில் நாம் சற்று வேறு களத்திற்குப் போகலாம்.

அது ஒரு அருமையான, அழகான பருவம்.

ஒரு மைல் தூரத்திலிருக்கிற பாடசாலை. வீதியின் இரு புறமும் விரிந்த பனை. வீதிக்கு அழகு செய்கிற பனை.

நடக்கத் தொடங்கினால் முப்பதாவது நிமிடம் பாடசாலையில் கால் வைப்போம்.

மாலை 3.30க்குப் பாடசாலை விட்டால் வருகிற வழியில், வாசிகசாலையில் பேப்பர் படித்து விட்டு வீட்டில் புத்தகத்தை எறிந்து. விளையாடப் போனால் இருள் வந்து பந்து தெரியாத வரை விளையாட்டு. பனைகளுக்கிடையே சின்ன மைதானம்.

முதலாம் தவணையில் கிரிக்கெட்; இரண்டாம் தவணையில் ஹொக்கி, கிளித்தட்டு சுற்றிவர உள்ள கோயில்களில் திருவிழாக்கள் நடப்பதானாலும், பாடசாலையில் விளையாட்டுப் போட்டியை ஒட்டி பயிற்சி நடப்பதானாலும், இரண்டாம் தவணை விளையாட்டுக்கள் கொஞ்சம் மந்தம். மூன்றாம் தவணை உதை பந்தாட்டம்.

விளையாட்டுக்கு குறைவில்லை. ஓயாத விளையாட்டு. மற்றைய நாட்களில் விளையாட்டு. சனி, ஞாயிறுகளில் மாட்ச் அனேகமாகச் சண்டையில் முடிகிற மாட்ச்.

டம் பால் வாங்கப் போக வேண்டும். அது கொஞ்சம் கொடுமையான பொழுது. விசுவையாப்பா அனேகமாக பால் தரப் பிந்தி விடுவார். பிந்தினால் இருள். பயம்.

ஒருமுறை பயத்தில் தேவாரம் பாடி ஓடியதில் வைரவர் கோயிலடியில் கல்தடக்கியோ கால் தடக்கியோ விழுந்தாகி விட்டது. அரைப் போத்தல் பால் நிலத்துக்குத் தானம்.

இருக்கவே இருக்கிறது வைரவர் கோயில் கிணறு. கிணற்றில் கயிற்றுடன் வாளி. தண்ணீர் அள்ளி, நிலத்தில் சிந்திய பாலை தண்ணீர் மறைத்தது.

இரவு அம்மா 'வர வர விசுவையப்பா பாலுக்கை நல்லாத்தண்ணி கலக்கிறார்' என்றார். இரவுகளில் பிந்திப் பால் தருகிற விசுவையாப்பாவுக்கு இது வேணும்.

நாங்கள் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்தோம். வெள்ளைச்சாரம், வெள்ளை சேர்ட் இவைகள் அணிந்த ஒருவர் நாங்கள் கிரிக்கட் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருநாளும் அவரை நாங்கள் கண்டதில்லை.

முன்னுள்ள ஆனந்தண்ணை வீட்டிலிருந்துதான் வந்தார். எங்கள் விளையாட்டை புன்முறுவலுடன் பார்த்தார். ஒருபோதும் காணாத முகம். ஒருபோதும் கேட்டறியாத குரல்.

இடைக்கிடைதான் பந்தை வாங்கி எறிந்தார். கிளீன் போல்ட். விக்கற் பறந்தது. இந்த் பந்தில் என்ன மந்திரம். அவர் கையில் என்ன மாயம்.

சிரித்துக் கொண்டு ஆனந்தண்ணை வீட்டில் புகுந்தார்.

விளையாட்டு முடிய சோதியக்காவிடம் கேட்டோம்! 'யார் இவர்?'

'அது சுரேஸ் எண்டு தம்பி ஆனந்தன்ர (F) பிரெண்ட். சுரேஸ் நிற்கிறதை ஒருத்தருக்கும் சொல்ல வேண்டாம்'. ஓமென்றோம்.

யார் அந்த சுரேஸ்?

ஒவ்வொரு நாளும் விள்ளயாட வந்தார். சனி, ஞாயிறு நாட்களில் அம்பயராகி நின்றார். சுரேஸ் அண்ணாவின் கை பிடித்து தொங்கினோம்.

ஒரு மாதம் நின்றாரா? தெரியாது. பிறகு காணவில்லை.

இரண்டாம் தவணை.

பிள்ளையார் கோயில் பெரிய திருவிழா. பூங்காவனம். கலகலப்பான திருவிழா. பார்க்கும் இடமெல்லாம் சிகரம். நோக்குமிடமெல்லாம் சப்பறம். மேளச்சமா பார்த்து மடத்தில் நித்திரை கொண்டவர்களுக்கு மீசை வைத்து. சின்ன மேளம் பார்த்து, அவர்கள் சலங்கை சப்திக்கப் போகிற போது பின்னால் போய்விடுகிற நேரத்தில் கோஷ்டி பார்த்து காலை ஏழு மணிக்கு வீடு வந்து. முகம் கழுவி அதே நடை. கண்ணில் நித்திரை கனத்திருக்க, காலில் புழுதி படிந்திருக்க பாடசாலை சென்றோம்.

பாடசாலை போகாது வீட்டில் நின்றிருக்கலாம். ஐயா விட மாட்டார்.

## பொடியங்கள் போராடட்டும்

தனிநபர் பயங்கரவாதம், அது இது என்று இப்போது நாங்கள் தத்துவார்த்த நோக்கில் பலதையும் கதைக்கிறோம். ''தத்துவத் தெளிவில்லாமல் தீவிரமாக துவங்கினால் இப்படித்தான்.'' என்றும் கதைக்கிறோம்.

அந்தக் காலத்தில் ஆத்திரம் இருந்தது. உணர்ச்சி வசப்பட்டோம். அதனை வழிப்படுத்த ஆட்கள் இருக்கவில்லை.

**''பொடியன்கள் போராடட்டும்**
**போராடிச் சாகட்டும்**
**பொடியங்கள் சிறைகளுக்கை**
**போயிருந்து காயட்டும்**
**நாம் கத்தித் திரிந்திடுவோம்''**

என்று 'ஆற்றுப்படுத்து'கிற தலைமைதான் இருந்தது. ஆதலினால் உணர்ச்சி ஒன்றே நமக்கிருந்த உரிமை. ஆத்திரப்படுவதே நமக்கிருந்த ஆயுதம். அந்த ஆயுதம் ஒன்றும் பண்ணாது; பண்ணிக் குவிக்காது என்பது எமக்கு இப்போது தெரியும்.

ஆனால் அப்போது? அதுதான் சரி. மிகச் சரி. வேறு வழி தெரியவில்லை. சரியான வழியைக் காட்ட ஒருவருமில்லை.

ஆயுதப் போராட்டமே ஒரே வழி. ஆயுதத்தையும் தத்துவத் தெளிவுள்ளவர்களே தூக்க வேண்டும் என்று நம்பியிருந்த கொம்யூனிஸ்ட் கட்சிகளும் இங்கு நடத்த பிரச்சினைகளை தமிழ் இனவாதம் எனும் கண்கொண்டு நோக்கின.

இதுவெல்லாம் உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்களின் வெற்றாரவாரச் செயற்பாடு இளப் பருவக் கோளாறு. சிறுபிள்ளை, வேளாண்மை வீடு வந்து சேராது என்றுதான் பார்த்தார்கள்.

வழி நடந்த ஒருவரும் முன்வரவில்லை.

அப்படியென்றால் 1974 காலப்பகுதிகளில் தமிழிளைஞர் செய்த போர் வழிமுறை சரி என்று சொல்கிறாயோ என்று

### அ.டேவிட் நந்தகுமார்

இடையில் தோட்ட வேலை இருக்கும். ஆட்டுக்கு குழை தேட வேண்டும். நமக்கு கிடைப்பது 'தரித்திரம் பிடித்த' ஆடு. சாப்பிட்டால் பூவரசங் குழை. கிளுவைக்குழை அல்லது சீமைக் கிளுவைக்குழை. மஞ்சமுன்னா, வேம்பு, பலாக்குழை ஒன்றையும் திரும்பியும் பார்க்காது. புல்லென்றாலும் சுத்தமான புல் வேண்டும். தொய்யில் வகைப் புல்லின் மணமும் பிடிக்காது.

இவ்வளவு வேலைகளுக்கும் மத்தியிலும் விளையாட்டுக்கள் ஒழுங்காக நடந்தேறின.

பொழுது பட்டால் விசுவையாப்பாவி

அம்பாள் கோயில் மடத்தடியில் திண்ணைச் சந்திரண்ணை மறித்தார்.

'இன்டைக்கு ஒருத்தரும் பள்ளிக்கூடம் போகக்கூடாது. ராத்திரி சிவகுமாரன் செத்துப் போனான். அதால இன்டைக்கு கர்த்தால். ஒருத்தரும் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை'.

நித்திரை சுழட்டிக் கொண்டு வந்தது. இன்றைக்கு பள்ளிக்கூடம் போகாமல் விடுவது நல்லது. 'நல்ல நித்திரை அடிக்கலாம்'

ஆனால் இதுவென்ன? சிவகுமாரன் செத்துப் போனாரா?

---

# நாலு வார்த்தை எழுத விடு

ஜூரி

## தமிழ்ப் புனைகதைத் துறை

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் '**தமிழ்ப் புனைகதைத்துறையில் அண்மைக்காலப் போக்குகள்**'எனும் தலைப்பில் **பேரா.சிவத்தம்பி** உரை நிகழ்த்தினார்.

சற்றுத் தேக்கமுற்றுக் காணப்பட்ட புனைகதை இலக்கியம் மீண்டும் இக்காலத்தில் எழுச்சியுற்றுக் காணப்படுவதாகக் குறிப்பிட்டார். புறத்தில் நின்றுபார்த்து எழுதாமல், தான் அதில் ஒரு வகை அகவயப்படி நின்று, தன் வாழ்வு, தன் அனுபவமாக புனைகதைகள் வெளியாகின்றன எனும் கருத்து பேராசிரியரின் உரையில் வெளிப்பட்டது. இதற்கு அவரிடம் மிகச் சரியான உதாரணங்கள் இருந்தன. குறிப்பாக **ஜெயமோகன், ரஞ்சகுமார்** ஆகியோரின் சிறுகதைகள் இத்தகைய அனுபவத் தொற்றல்களைத் தருகின்றன. **ஜெயமோகனின்** நாகம், திசைகளின் நடுவே, ஆகியனவும் **ரஞ்சகுமாரின்** கோசலை, கோளாறு பதிகம் முதலிய சிறு கதைகளும் அவ்வகையினதே. இவ்வகையான சிறுகதைகளின் தலைப்புக்களும் புதிய வடிவத்தைக் காட்டி நிற்கிறது.

முக்கியமாக பேராசிரியரின் உரையின் சுருக்கம் இதுதான்.

பிறகு கலந்துரையாடல்

நந்தி அவர்கள் கண்டிக்கிற தொனியில் பேராசிரியர் சிவத்தம்பியிடம் கேள்வியும், குற்றச்சாட்டும் தொடுத்தார். சொல்கிற விடயங்களுக்கு உதாரணங்கள் கொடுக்க வேண்டும். உதாரணமில்லாமல் கருத்துகளை கொடுப்பதனால், கருத்துக்கள் தெளிவடைவதில்லை. இதனை எழுத்தில் தருவது முக்கியமானது என்று நந்தி குறிப்பிட்டார். அத்துடன் பேர்ாசிரியர் வெறுமனே கனக.செந்திநாதன் போன்று பட்டியலிடுகிறார் எனும் குற்றச்சாட்டும் நந்தியிடம் இருந்தது.

பொதுவில் பேராசிரியரின் உரையில் முதலில் குறிப்பிட்ட பலவீனம் காணப்படுகிறது. சொல்கிற விடயங்கள் உதாரணங்களுடன் எடுத்துக் காட்டப்படல் வேண்டும். குறிப்பிட்ட படைப்பாளிகள் தமது வடிவத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் அம்மாற்றங்கள் யாவை? முன்னைய எழுத்தாளர்களிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறார்கள் போன்றன உதாரணங்களால் காட்டப்படல் வேண்டும். எழுத்துருவில் இவை வருவதும் முக்கியமானது. இப்போதுள்ள தமிழ் அறிஞர்களில் பேராசிரியர் சிவத்தம்பியினால் இது இயலும். ஜெயமோகனையும், தோப்பில் முகம்மது மீரானையும், ரஞ்சகுமாரையும் சொல்லிவிட்டு போவதானால் விடயம் முழுமையடைந்து விடமுடியாது.

பேராசிரியர் பட்டியலிடுகிறார் என்பதினை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அது அநாவசியமான குற்றச்சாட்டு. பட்டியல் இடுவதென்றால் இன்னும் நிறைய பெயர்களை செலவழித்திருக்கமுடியும். அதுமட்டுமன்றி **கோணங்கி, தமிழ்ச்செல்வன், நந்தினி சேவியர், சட்டநாதன், உமாவரதராஜன்** போன்றோர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். அதற்காக பட்டியல் இடவேண்டுமென்றில்லை. இத்தகைய உரையைப் பேராசிரியர் இன்னும் விரிவாகச் செய்திருக்க வேண்டும்.

இன்னுமொன்று உரையாடலில் தெரிந்தது. **நந்தி, டொமினிக் ஜீவா** போன்றோரிடம் பேராசிரியர் தம்மைக் குறிப்பிடாத ஆதங்கம் தெரிந்தது.

அன்றைய உரையாடலில் இருவகையான போக்குகள் காணப்பட்டன. தமக்கு எல்லாம் தெரியும் எனக் காட்ட வேண்டும் என்பதால், உரையாடலில் கலந்து கொள்வது. மற்றது, புதிய விடயங்கள் தமக்கு விளங்கவில்லை என்பதால், அதனைக்கண்டிக்க வேண்டும் என்பதாகும். இதன் அபத்தமாக, ஒருவர் ரஞ்சகுமாரின் **கபரக்கொய்யாக்கள்** இரண்டு மூன்றுதரம் வாசித்தும் தமக்கு விளங்கவில்லை என பெருமையாகச் சொல்லிக் கொண்டார். அக்கதையில் விளங்குவதற்கு என்ன இருக்கிறது? எளிமையான கதை அது. ரஞ்சகுமாரின் நல்ல கதைகளில் ஒன்று.

இது வேண்டுமென்று சொல்லப்படும் ஒன்றாகும்? அல்லது உண்மைநிலை இதுதானா? அன்றைய உரை வீதியில் போவோர் வருவோர்க்காக வைக்கப்பட்டது அல்ல. இலக்கியத்தில் ஓரளவுக்காவது அக்கறையுள்ளவர்களுக்காக, பேராசிரியர் சிவத்தம்பி அன்று உரையாற்றியுள்ளார் என்று நினைக்கிறேன். 'புரியாவிட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள். புரிந்து கொள்ள நீங்களும் முயலுங்கள்' எனத் தோப்பில் மூகம்மது மீரான் கூறியதைத்தான் இதில் எடுத்துக் காட்டலாம்.

இன்னொரு விவாதம் சுவாரசியமானது. நந்தி அவர்கள் 'இலக்கணம் தெரிந்தவன் தான் இலக்கியம் படைக்க முடியும்' என்றார். **டொமினிக் ஜீவா** இக்கருத்தை ஆக்ரோஷமாக எதிர்த்தார். எதிர்க்கப்பட வேண்டிய கருத்துதான் இது. அதென்ன இலக்கணம் தெரிந்தால்தான் இலக்கியம் படைக்க முடியும்? அப்படியென்றால் பண்டிதர்கள் மட்டும்தான் இலக்கியம் படைக்க முடியும். இது எவ்வளவு அபத்தமான கருத்து. பண்டித மரபுக்கெதிரான போராட்டம் மீண்டும் நடத்த வேண்டும் போலிருக்கிறதே.

முக்கியமான விடயம் இலக்கியத்துக்குத்தான் இலக்கணம் எழுதப்பட்டது. இப்போதுள்ள இலக்கண வரையறை இலக்கியத்தைக் கட்டுப்படுத்துமாயின் இலக்கணத்தைத் தூக்கியெறிந்து விட்டு புதிய இலக்கணம் எழுத வேண்டும்.

இன்னுமொன்று, பொதுவில் மனிதர்கள் மொழியை இலக்கண அமைவுக்கு ஏற்பவே பயன்படுத்துகிறார்கள். ஒருவரும் 'சாப்பிட்டேன் சோறு நான்' என்று கூறுவதில்லை. எழுவாய், செயற்படு பொருள், பயனிலைக்கேற்ப 'நான் சோறு சாப்பிட்டேன்' என்றுதான் மூன்று வயசுப்பிள்ளையும் கூறும். இலக்கியமும் தேவைக்குரிய இலக்கண அமைதிக்கேற்பவே இயங்கும். இதை விடுத்து, பண்டித இலக்கணம் படைப்பிலக்கியத்திற்கு ஆகாது. பேராசிரியர் சரியான உதாரணம் கூறினார். 'வீடு கட்டுகின்ற மேசனுக்கு கல்லையும், சீமேந்தையும் தெரிகின்ற அளவுக்கு, படைப்பிலக்கியவாதிக்கு இலக்கணம் தெரிந்தால் போதுமானது'.

நவீன இலக்கியங்களில் பண்டித மனப்பாங்கினை புகுத்துகின்ற ராஜாஜி, கல்கி, பரம்பரை நந்தியின் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம். மற்றவர்களுக்கு அது சரிப்பட்டு வராது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அடிக்கடி இப்படி நல்ல காரியங்கள் ஆற்றலாம்.

# என்றென்றைக்குமாக ஆள ஐ.தே.க செய்த தந்திரம்

## விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திலிருந்து தொகுதிவாரித் தேர்தல் முறை பற்றி ஓர் அலசல்

தாமே இந்நாட்டின் என்றென்றைக்குமான ஆட்சியாளராக இருக்க வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு நீண்டகாலமாகவே இருந்து வந்த ஆசையாகும். அதற்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்பையும் சூழலையும் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். 1977 தேர்தல் வெற்றி மூலம் அதற்கான வாய்ப்பு ஏற்பட்ட போது உடனடியாகவே அதனைப் பயன்படுத்திக் கொண்டனர். இனி தாங்கள் தான் இலங்கையின் நிரந்தர ஆட்சியாளர்கள் என்ற இறுமாப்போடு ஜனாதிபதி தேர்தல், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் என்பவற்றை எல்லாம் அவர்கள் அறிமுகப்படுத்தினர். அத்துடன் தம் திட்டங்களை ஒருவரும் மாற்றி விடக் கூடாது என்பதற்காகவே அரசியலமைப்பைத் திருத்துவதற்கு 2/3 பெரும்பான்மை அவசியம் எனும் ஏற்பாட்டையும் கொண்டு வந்தனர்.

ஆனால் இன்று தாம் உருவாக்கிய அரசியல் திட்ட ஏற்பாடுகளே தாம் காலூன்றி நிற்கும் சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு சவாலாக வந்து நிற்பது கண்டு திகைத்து நிற்கின்றனர் ஐ.தே.க.வினர். தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அரசியல் திட்டத்தின் மீது குற்றம் சுமத்தி வரும் போது விழி பிதுங்கி நிற்கும் ஐ.தே.க. ஆற்றிலே தத்தளிப்பவன் ஓலமிடுவது போல ஓலமிட ஆரம்பித்துள்ளது. இந்த ஓலங்களின் வெளிப்பாடுகளாகவே இன்றைய ஜனாதிபதியின் அண்மைக்கால உரைகள் வெளிவருகின்றன.

இப்போது இருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் முறை தொடர்ந்தால் பெரும்பான்மையினம் இரண்டாகி விடும் என்றும் இதனால் சிறுபான்மையினரின் தயவை நாடுவதற்காக அவர்கள் கேட்கின்ற சலுகைகளை கொடுக்க வேண்டி வரும் என்றும் அநகாரிக தர்மபாலாவுக்கு பிறகு சிங்கள மக்களை இரட்சிக்க வந்த தூதன் என்ற நினைப்பில் ஓலமிடுகின்றார் அவர். இதனாலேயே இரவிரவாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு பிரஜாவுரிமை கொடுக்க வேண்டி வந்தது என்றும் கூறுகின்றார். இவரது கட்சியினால் பிரஜாவுரிமை கொடுக்கப்பட்டவர்கள் ஏதோ நேற்றுத் தான் நாட்டுக்கு வந்தவர்கள் என்பது போலவும் தாங்கள் தான் முட்டாள்தனமாக மனமிரங்கி அவர்களுக்கு பிரஜாவுரிமை கொடுத்துவிட்டோம் என்பது போலவும் பேசுகின்றார். இதன் மூலம் அவர்கள் 150 வருடத்துக்கு மேலான வரலாற்றைக் கொண்டவர்கள் என்பதையும், அவர்களுக்கு ஏற்கனவே இருந்த பிரஜாவுரிமையை தங்களது கட்சிதான் பறித்தது என்பதையும் தாம் வாக்குரிமையை வழங்கியது ஒன்றும் மனமிரங்கியல்ல. அவர்களது தொடர்ச்சியான போராட்டத்தினாலேயே என்பதையும் வசதியாக மறைத்து விட முனைகின்றார் இவர்.

இவர்களது மூலவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நடைமுறையில் இருக்கும் விகிசாரப் பிரதிநிதித்துவத் தேர்தலை விட முன்னர் நடைமுறையில் இருந்த தொகுதி வாரியான தேர்தல் முறையே சிறந்தது என கூட்டமொன்றில் பேசியிருக்கிறார். 1978 இல் பல அரசியற்சக்திகள் எதிர்த்த போதும் விடாப்பிடியாக மறுத்து விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்திய இவர் காலம் கடந்து ஞானம் வருவது போல தற்போது பழைய முறையை வற்புறுத்துகின்றார்.

வெளி விவகார அமைச்சர் ஹமீத்தும் தன் பங்குக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் காணப்படுகின்ற விருப்பத் தேர்வு முறை ஒரு கட்சியில் இருக்கும் உறுப்பினர்களிடையே கூட முரண்பாடுகளை வளர்க்கின்றது என்றும் இதனால் இம்முறையை மாற்றுதல் அவசியம் என்றும் குறிப்பிடுகின்றார்.

இவர்களைவிட ஐக்கிய தேசியக்கட்சியில் இருக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கூட இதே கருத்துக்களைக் கொண்டு இவற்றை மாற்ற வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

சிறுபான்மை இனங்களின் கட்சிகளான தமிழர்கட்சிகள், முஸ்லீம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்றவை மட்டும் இவை மாற்றப்படக் கூடாது என்றும் இவை மாற்றப்பட்டால் சிறுபான்மையினங்களின் அரசியல் ஸ்திரமும் பேரம் பேசும் ஆற்றலும் குறைந்து விடும் எனவும் கூறி வருகின்றன.

இந்நிலையில், ஐக்கிய தேசியக்கட்சியினர் தற்போது இதனை ஏன் மாற்ற முனைகின்றார்கள்? சிறுபான்மையினங்களைப் பொறுத்த வரையில் இவை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை ஆராய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

1970இல் தேர்தல் நடைபெற்ற போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளவிய ரீதியில் 37.9% வாக்குகளைப் பெற்றிருந்தும் பாராளுமன்றத்தில் 18 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி நாடளாவியரீதியில் 36.8% வாக்குகளை மட்டுமே பெற்ற போதும் பாராளுமன்றத்தில் 91 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

இதே போன்ற ஒருநிலை.1960ம் ஆண்டு யூலை தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றிய போதும் ஏற்பட்டிருந்தது. அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 37.25% வாக்குகளைப் பெற்ற போதும் 30 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி 33.59% வாக்குகளை பெற்ற போதும் 75 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

இவ்வாறான நிலையே சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அமைத்த வேளைகளில் எல்லாம் காணப்பட்டது. 1956 தேர்தல் மட்டும் இதற்குப் புறநடையாக இருந்தது. அத்தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, பிலிப் குணவர்த்தனாவின் நவலங்கா சமசமாஜக் கட்சி, டபிள்யூ தஹநாயக்காவின் பாஷா பெரமுனை, ஐ.எம்.ஆர்.ஏ ஈரியக் கொலையின் தலைமையில் இயங்கிய குழு என்பவற்றுடன் கூட்டுச் சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் தேர்தலில் நின்றதால் நாடு தழுவிய ரீதியல் ஐக்கிய தேசியக் கட்சியை விட கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தது. இத்தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளுடன் தேர்தல் தொகுதி உடன்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதால், அதுவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் வாக்குவீதத்தைக் கூட்டியிருந்தது. இத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி 51 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி 08 ஆசனங்களை மட்டும் பெற்றுப் படு தோல்வியடைந்திருந்தது.

எனவே வரலாற்று ரீதியான இவ்வாக்களிப்பு முறையிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு பாடத்தை மாத்திரம் நன்கு கற்றுக் கொண்டனர். அதாவது அளிக்கப்படுகின்ற வாக்குகளின் வீதாசாரத்திற்கேற்ப உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தினால் வரலாறு முழுவதும் தாம் ஆட்சிப்பீடத்தில் இருக்கமுடியும் எனக் கருதினர். அதற்கான சந்தர்ப்பம் 1978 தேர்தலின் போது கிடைத்த 4/5 பெரும்பான்மை மூலம் கிட்டவே அரசியலமைப்பை மாற்றி மாவட்டரீதியிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தினர் ஐ.தே.க.வினர்.

இம்முறையிலும் கூட மாவட்டங்களுக்கிடையே வாக்களிப்பு வீதாசாரத்தில் வித்தியாசம் ஏற்பட்டு தனது பாராளுமன்ற அங்கத்துவத்தை குறைத்து விடலாம் எனக்கருதி நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்படுகின்ற தேசியப்பட்டியல் முறையையும் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றின் மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்தவ முறையுடன் இணைத்துக் கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இத் தேர்தல் முறை மாற்றத்திற்கு மேற்கூறிய காரணங்களை விட பேரினவாத நோக்கிலிருந்து உருவாகிய காரணங்களும் கூட தொழிற்பட்டிருந்தன. அதில் பிரதானமானது தமிழ்ப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்ட பிரதேசங்களில் பேரினவாத அரசியலை ஸ்திரப்படுத்துவதாகும். திருகோணமலை, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு. மன்னார் மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் இவ்வாறான நோக்கங்களைக் கொண்டிருந்தன. ஏற்கனவே இருந்த தேர்தல் முறையில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் சார்பாக பாராளுமன்றத்தில் ஒவ்வோர் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த போதும் (திருகோணமலையில் சேருவில தொகுதி, அம்பாறையில் அம்பாறைத் தொகுதி) உள்ளூராட்சிச் சபை மட்டத்தில் அதிகளவிலான ஸ்திரத்தைக் கொண்டிருக்கவில்லை. ஏனைய வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இப்பிரதிநிதித்துவம் அறவே இருக்கவில்லை.

இப்பிரதேசங்களைப் பொறுத்தவரை அதன் அரசியல் பிரதிநிதித்துவம் குடியேற்றங்களின் ஸ்திரத்தையும் பேணக்கூடிய ஒன்றாக இருப்பதனால் அதனை உருவாக்குவதும் எண்ணிக்கையைக் கூட்டுவதும் பேரினவாதிகளுக்கு அவசியமாக இருந்தது. அதற்குச் சிறந்த வழியாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை இருந்தமையினால் அதை அறிமுகப்படுத்துவதில் அக்கறை காட்டினர்.

இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை மூலம் அதிக எண்ணிக்கையான சிங்களப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக இப்பிரதேசங்களில் செயற்கையாக மாற்றங்களைச் செய்தனர். அம்பாறை மாவட்டத்தில் சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் முன்னர் மொனராகல மாவட்டத்துடன் இணைந்திருந்த இரண்டு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான மகாஓயாவையும், பதியத்தலாவையையும் இரவோடு இரவாக வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் அம்பாறை மாவட்டத்துடன் இணைத்தனர். இதனால் மகாஓயாவிலிருந்து 13,018 பேரும் பதியத்தலாவிலிருந்து 13,501 பேரும் ஒரே இரவில் அம்பாறை மாவட்ட பிரஜைகளாகினர். அம்பாறை என்ற பெயர் கூட சிங்களப் பெயராக இல்லையென்பதற்காக அதனை ''திகாமடுல்ல'' எனவும் மாற்றினர். இதன் தலைப்பட்டினமாகவும் அம்பாறைப்பட்டினத்தை மாற்றி மாவட்டத்தின் நிர்வாக ஆதிக்கத்தையும் சிங்கள மக்களின் உரிமையாக்கினர். இத்தனையும் செய்தும் கூட அம்பாறை மாவட்டத்தின் 37.8% சிங்கள மக்கள் தான் வசிக்கின்றனர். ஏனையவர்கள் முஸ்லீம் மக்களும் , தமிழ் மக்களுமே யாவர். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இம்மாவட்டத்தில் இருந்த ஐந்து தேர்தல் தொகுதிகளில் அம்பாறைத் தொகுதி ஒன்றுமட்டுமே சிங்கள மக்களின் தொகுதியாக இருந்தது. ஏனைய 4 தொகுதிகளும் முஸ்லீம் மக்களையும், தமிழ் மக்களையும் கொண்ட தொகுதிகளாகவே விளங்கி இருந்தன என்பது கவனிக்கத்தக்கது.

வவுனியா மாவட்டத்திலும் சிங்கள குடியேற்ற மக்களுக்கென வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிற்கு புறம்பாக மலையகத்திலும் இவ்வரசியற் பிரதிநிதித்துவத்தை கருத்திற் கொண்டு செயற்கையான மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக சிங்களத் தொகுதியான வலப்பன தேர்தல் தொகுதி நுவரெலியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இவ்வீதாசார பிரதிநிதித்துவமுறை நடைமுறையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 1978க்குப் பின்னர் நடைபெற்ற ஒவ்வோர் தேர்தலிலும் பெருவெற்றியைக் கொடுத்ததோடு சுமார் 16 வருடங்களாக தொடர் ஆட்சியுரிமையையும் கொடுத்திருந்தது. ஆனால் அதன் இரண்டாவது நோக்கமான பேரினவாத நோக்கைப் பொறுத்த வரை இது வெற்றியைத் தராததோடு எதிர்மாறான விளைவுகளையும் உருவாக்கியுள்ளது. வடக்கு, கிழக்கின் போர்கால நிலை தோன்றியதால் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய பல குடியேற்ற பிரதேசங்கள் சூனியப் பிரதேசங்களாக தோற்றமளிக்கின்றன. இதனால் அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பேரினவாத போக்கு அவ்வளவுதூரம் வெற்றியளிக்கவில்லை.

மாறாக வடக்கு, கிழக்குக்கு வெளியே தமிழ் மக்கள் கணிசமான அளவு வாழும் பிரதேசங்களில் பாராளுமன்ற மட்டத்திலும், மாகாணசபை மட்டத்திலும் உள்ளூராட்சி சபை மட்டத்திலும், தங்களது பிரதிநிதித்துவத்தை உருவாக்கத் தொடங்கினர். இவர்கள் இப்பிரதேசங்களில் பெரிய கட்சிகளின் வெற்றி தோல்விகளை தீர்மானிப்பவர்களாகவும் விளங்கினர். மலையக மாவட்டங்களான நுவரெலியா கண்டி, பதுளை என்பவற்றிலும் கொழும்பு மாவட்டத்திலும் இந்நிலை அதிகமாக இருந்தது. இதனால் அவர்கள் கேட்கின்ற சலுகைகளையும், உரிமைகளையும் கூடச் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் இந்தியாவம்சாவழியினர் இருந்ததனால் அவர்களின் ஸ்தாபனமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பலமும் இயல்பாகவே அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அதுவும் நுவரெலியா மாவட்டத்தில் இதன் நிலை ஒரு படி கூடுதலாகவே உள்ளது. கடந்த மாகாண சபைத் தேர்தல்களில் நுவரெலியா மாவட்டத்தின் 17 உறுப்பினர்களில் 10 உறுப்பினர்கள் தமிழர்களாக இருந்தமை இதனைத் தெளிவாகக் காட்டியது. இதில் 7 பேர் இ.தொ.கா.உறுப்பினர்களாக இருந்தமை அதன் நிலையையும் தெளிவுபடுத்தியது. பதுளை, கண்டி, கொழும்பு போன்ற மாவட்டங்களிலும் 4,3,2 என்ற வகையில் தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே பேரினவாதிகள் விழித்துக் கொண்டனர். இத்தேர்தல் முறை வடக்கு கிழக்குக்கு வெளியே கூட சிறுபான்மை இனங்களின் அரசியல் ஸ்திரத்தை வளர்ப்பதற்கு உதவுகின்றது என்பதைக் கண்டனர். குறிப்பாக தொண்டமானினதும் இ.தொ.கா.வினதும் பலம் பெருகுவதைக்கண்டனர். இதனைத் தடுத்து நிறுத்துமாறு அரசை வற்புறுத்தத் தொடங்கினர். முன்னைய ஜனாதிபதிகள் கண்டியப் பிரதேசத்தை சேராதவர்களானபடியால் அவர்களுக்கு அழுத்தம் குறைவானதாக இருந்தது. தற்போதைய ஜனாதிபதி கண்டியரானபடியால் அவருக்கு அழுத்தம் கூடுதலாக உள்ளது. அவரும் அசல் கண்டிய விசுவாசியாகவே தன்னை இனம் காட்ட முற்பட்டார். அதன் விளைவுகளாகவே அவரது அண்மைக்கால உரைகள் உள்ளன.

சரி, இந்த விகிதாசார முறையை மாற்றி பழைய முறையை அறிமுகம் செய்வது எப்படி இந்தப் பேரினவாதிகளைப் பாதுகாக்க முடியும் என்ற கேள்வி இவ்விடத்தில் எழுகிறது. பாராளுமன்றத்தினை முடிந்தளவுக்கு சிங்கள பிரதிநிதிகளால் நிரப்பிக் கொள்ளுவதற்கு வாய்ப்பாக ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள புதிய தேர்தல் தொகுதிகள் இடமளிக்கும். தவிரவும் இனவாத மூலதனத்துடன் பெருமளவுக்கு பிற இனவாத சக்திகளை இணைத்துக் கொள்ளுவதன் மூலம் சிறுபான்மை இனங்களுக்கெதிரான முகாமின் தலைமையை தான் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறது புதிய ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை. இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் சிதறடிக்க உகந்த அரசியல் உபாயமாக அது கருதுகிறது.

எப்படியாவது ஐ.தே.க. தொடர்ந்து ஆட்சியிலிருக்க வேண்டுமென்ற குறியுடன் தான் இந்தத் தீர்மானத்தையும் ஐ.தே.க வினர் இப்போது முன்மொழிந்தனர். இது மாறி அது என்று ஆலாய்ப் பறக்கும் ஐ.தே.க.வினரும் ஜனாதிபதியும், பேரினவாதிகளும் ஒன்றை மறந்து விடப் பார்க்கிறார்கள். அதாவது தமிழ்த் தேசிய இனத்தை இவர்களுடைய மாற்றங்கள் எதுவும் செய்து விடப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் தங்களது அதிகாரத்தை நிலைநாட்டும் போராட்டத்தை தொடங்கி விட்டார்கள். காலம் பிந்தியாவது அவர்கள் அதில் வெற்றியடைவார்கள். இவ்வாறே ஏனைய சிறுபான்மை இனங்களின் தனித்துவங்களை பேணமுடியாத வகையில் அவர்கள் மீதும் தடைகள் போடப்படுமானால் அவர்களும் விரைவில் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுக்க முடியாது. அப்போது வடக்கு கிழக்கு மாத்திரம் அல்ல. மலையக, முஸ்லீம் மக்களின் பிரதேசங்கள் கூட இலங்கை வரைபடத்தில் இல்லாமல் போகின்ற சூழல் ஏற்படலாம். ●

-பரந்தாமன்-

நன்றி - நூலகத்திட்டம்



# மாத்தையா விவகாரம்:
# புலிகள் இயக்கத்தின்
# 'இயக்கவிதி'


மாத்தையாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை; பல்வேறு மட்டங்களிலும் குறிப்பாகப் பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையிலிருந்தும் வந்த எதிர்ப்புகளினால், மாத்தையாவுக்கு அவர்பக்க நியாயங்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளினால் இது தற்காலிகமாகவேனும் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற புலிகளின் ஆதரவு அமைப்புகள், பத்திரிகைகள் மத்தியில் இப்போது ஏற்பட்டுள்ள பிளவு மிகவும் வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்துள்ளது. பரிஸ் ஈழநாடு காரியாலயம் தாக்கப்பட்டது இதன் தீவிரமான ஒரு வெளிப்பாடே ஆகும். புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தாக்கி விடுதலைப புலிகளின் மாத்தையா பிரிவு என்ற பெயரில் ஒரு துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது;லண்டனில் பல எதிர்ப்புச் சவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன

விடுதலைப் புலிகளின் இயக்க வரலாற்றில் ஏற்பட்ட இரண்டாவது பிளவு இது. ஆரம்பத்தில் ஏற்பட்ட பிளவு அரசியல் ரீதியாக, விடுதலை யுத்தத்துச்கான சரியான பாதை என்ன என்பது தொடர்பாக ஏற்பட்ட பிளவு. இந்தப் பிளவின் போது உருவானதுதான் பின்னர் பல்வேறு சீரழிவிற்கும் உள்ளாகிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்). அதற்குப் பிறகு 'கழகம்' பல்வேறு குழுக்களாக உடைந்து சிதறுண்ட போதும், விடுதலைப் புலிகள் அமைப்பில் எத்தகைய 'பிளவும்' ஏற்பட்டதில்லை. இப்படிச் சொல்லும் போது அந்த இயக்கத்தில் கருத்து முரண்டாடுகளோ அல்லது பிளவுக்கான சந்தர்ப்பங்கள் உருவாகவே இல்லை என்று கருதிவிடக்கூடாது. ஒரு தடவை அல்ல, பலதடவைகள் இத்தகைய நிலமைகள் ஏற்பட்டன. ஆனால் அவையெல்லாம் களையெடுப்புக்கள் மூலமும், 'வீர மரணங்கள்', 'தியாகங்கள்' மூலமும் இல்லாதொழிக்கப்பட்டன. அம்மான் என்று அழைக்கப்படும் செல்லக்கிளி முதல் அண்மைக்கால கிட்டுவரையான பல திறமைசாலிகளான புலிகள் இயக்கத் தலைவர்களின் (விக்டர், ராதா கூட விதிவிலக்கல்ல) மரணங்களுக்கும் இவையே காரணம் என்று இன்றுவரை பேசப்பட்டு வருவது ஒன்றும் இரகசியமல்ல. கிட்டுவின் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்த போது பழியை மாற்று இயக்கங்கள் மீது போட்டு, கைதாகி இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்த பல அப்பாவிகள் 50க்கு மேற்பட்டோர் யாழ் பிரவுண் றோட் சிறைக் கூடமொன்றில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். கிட்டுமீதான இத்தாக்குதல் முயற்சிக்குக் காரணம் கூட பிரபாகரனின் கட்டளையே என்றும் அப்போது பேசப்பட்டது. விசாரணைக்காக இந்தியாவுக்கு அழைக்கப்பட்ட போதும் போக மறுத்ததால் கிட்டுவுக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது என்பது அன்றைய கதையாக இருந்தது.

எப்படியோ கிட்டுவின் கொலை முயற்சி தவிர்ந்த அனைத்துக் கொலைகளும் மிகவும் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டன. புலிகளின் ஏகதலைவர் பிரபாகரனே என்ற அங்கீகரிப்புடனும் அவர் மீதான விசுவாசத்துடனும் திட்டமிட்ட வகையில் -இந்த நிகழ்ச்சிகளினூடு இயக்கம் கட்டி வளர்க்கப்பட்டது.

இவையெல்லாவற்றிற்கும் பிறகு, இப்போதுதான் முதன்முதலாக இயக்கத்துள் ஏற்பட்ட பிளவு ஒன்று பகிரங்கமான வடிவம் எடுத்துள்ளது. கொள்கைகட்காக, மாற்றுக் கருத்துகட்காக முனைந்தவர்கள், தமது திறமைகளால் புகழேணியில் ஏறியவர்கள் எல்லாம் கண்முன்னே வீரமரணத் தியாகிகளாவதைக் கண்ட மாத்தையா என்றைக்கோ ஒரு நாள் தனக்கும் இந்த நிலை வரக்கூடும் என்பதை எதிர்பார்க்காமல் இருந்திருக்க முடியாது.



பிரபாவும் மாத்தையாவும் படம்... Sudasien 1-02-94

இதன் காரணமாக அவர் மிக நிதானமாகத் தன்னை வளர்த்து வந்துள்ளார். கிட்டுவைப் போல புகழாசையைப் பிரதானப்படுத்தி அவர் செயற்படவில்லை. ஸ்தாபனத்துக்குள்ளேயே தனக்குப் பலமான வேரை உருவாக்கிக் கொண்டார். விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியைக் கட்டினார்; இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்; எந்த வழிகளில் எல்லாம் பிரபாகரன் தனது ஸ்தாபனத்துள் தனது கையைப் பலமடையச் செய்து தனது தலைமையை ஸ்திரப்படுத்தி கொண்டாரோ அதே பாணியை மாத்தையாவும் கையாண்டார்.

விளைவு, இன்று சிறியளவிலேனும், மாத்தையாவுக்கு என ஒரு பிரிவு உள்ளும் புறமும் இருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

மாத்தையா மீதான மரண தண்டனையை எதிர்த்துக் குரலெழுப்புகின்ற சக்திகள் மாத்தையா ஆதரவு சக்திகள் பிரபாகரனின் செயலை ஒரு ஜனநாயக விரோதச் செயலாக சித்திரிக்கின்றனர். மாத்தையாவின் மீதான விசாரணை, ஒரு நியாயமான விசாரணையாக இல்லை என்றும் பொய்க் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர். மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பு ஓரளவுக்கேனும் புலிகளின் இறுக்கமான இராணுவ நடைமுறைகளுக்கு எதிரான ஒரு எதிர்ப்புக்குரல் என்பதால், இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனநாயக சக்திகள் நியாயமான விசாரணைக்காக குரலெழுப்ப வேண்டும்; மரணதண்டனையை நிறுத்த வேண்டும் என்று பிரபாகரனை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

இன்னும் சிலர், ஒருபடி மேலேபோய், மாத்தையா மீதான தண்டனையை அம்பலப்படுத்தி புலிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்புக்குரலை ஒரு ஜனநாயகத்திற்கான திறவுகோலாக்க முயல வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால், இவர்கள் மறந்து விடுகின்ற ஒரு விடயம் என்ன வென்றால், இங்கே ஏற்பட்டிருக்கும் பிளவு, இரண்டு இராணுவத் தலைவர்களுக்கிடையிலான அவர்களைப் பின்பற்றுகின்ற குழுக்களுக்கிடையிலான பிளவு; இவர்கள் இருவரதும் கோட்பாடுகளும், ஜனநாயகம் சம்பந்தப்பட்ட கருத்துக்களும் ஒன்றேதான்; மாற்றுக்கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் எதிர் கொள்வதுதான் என்பதே. இத்தகையதொரு ஸ்தாபனத்தில் எந்தவிதத்திலும் இது தவிர்ந்த வேறோர் நிலைமை உருவாக முடியாது என்பதே அது.

கட்சி அதிகாரம் அல்லது இயக்க அதிகாரம், இயக்கத் தலைமையின் அதிகாரமாகி, அதன் தலைவரது அதிகாரமாகக் குறுகிவிடுகின்ற நிலையில், முழு மக்களுடைய, அவர்களது வாழ்வு பற்றிய தீர்மானம் ஒரு தனி மனிதனாலேயே எடுக்கப்படுகின்ற நிலையில், இத்தகையதொரு நிலைமை ஏற்படுவது வரலாற்று நியதி.

மாற்றுக்கருத்துக்களுக்கு இடமே இல்லாமல் செய்கின்ற ஒரு கட்சி ஸ்தாபனம் தான் மட்டுமே ஒரே கட்சியாக இருக்க முடியுமெனக்கருதுகின்ற ஒரு ஸ்தாபனம், தான் விரும்பியோ விரும்பாமலோ எல்லாக் கருத்துக்களுடைய சக்திகளும் தன்னுள் ஊடுருவி விடுவதை அனுமதிக்க வேண்டி வந்து விடுகிறது. தலைமை விசுவாசம் மட்டுமே அளவு கோலாக மாறிவிடுகிறது; அதன் பின் அந்த விசுவாச முகமூடியுடன் யார் வேண்டுமானாலும் உள்ளே வந்துவிடுவதற்கு அது வாய்ப்பளித்துவிடுகிறது. வெளியே உள்ள கட்சிகளை, கருத்து முரண்பாட்டாளர்களை அழித்தபின், உள்ளே நுழைந்துவிடுகின்ற சக்திகளுக்கு அது நல்லதோர் பாடமாகி விடுகின்றது. கூட இருந்தே குழிபறிக்கும் சதியாளர் நிறைந்த அமைப்பாக அது மாறிவிடுகிறது.

தன்னைத் தற்காத்துக்கொள்ள அது விசேட புலனாய்வுப் பிரிவுகளை நம்பத் தலைப்படுகிறது. அதற்கும் எல்லையில்லை. விசுவாசம் ஒன்றே அளவுகோல் என்று ஆகிப் போகிறபோது, களையெடுப்புகள் உள்ளே வளர்கின்றன. இக் கொலைகளுக்கு முடிவே இல்லாமல் போகுமளவிற்குக் கட்சியின் தலைவன் அச்சத்தால் குறுகிப் போகின்ற பைத்தியக்கார நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றான்.

இப்போது ஏற்பட்டுள்ளது அப்படிப்பட்ட ஒன்றுதான்.

இன்று மாத்தையாவை 'விசாரி'த்துக் கொண்டிருக்கும் பொட்டம்மான் (பல நூறு நெற்றிகளில் துப்பாக்கிக் குண்டுகளால் 'பொட்டிட்ட' காரணத்தாலேற்பட்ட பெயராம் இது) கூட நாளை இவ்வாறானதொரு சதிக்குற்றச் சாட்டுக்கு ஆளாக்கப்படலாம்!

இது அந்த இயக்கத்தின் 'இயக்கவிதி'

மக்களின் ஜனநாயகத்தையும், சமூகத்தில் நிலவும் வர்க்கங்களையும் கருத்துக்களையும், விடுதலையையும் வெற்றுச் சடப் பொருளாக, கையிருப்பிலுள்ள ஆயுதங்களுள் இன்னொரு ஆயுதமாகக் கருதும் அந்த இயக்கத்தின் 'இயக்கவிதி' அந்த இயக்கத்திற்காக உயிரைக் கொடுத்து உழைத்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான போராளி ஒவ்வொருவரதும் நிலை இதுதான்.

விடுதலைப் போராட்டம் என்பது எந்தத் தனிநபரினதுமோ அல்லது எந்தத் தனிப்பட்ட அரசியற் கட்சியினதுமோ தனிப்பட்ட போராட்டமல்ல. அது முழுத் தேசத்தினதும், மக்களதும், விடுதலைக்கான போராட்டம். அனைத்து மக்களதும் மக்களின் அனைத்து வர்க்கங்களதும் கூட்டிணைப்பாக அமைய வேண்டிய அது ஒருபோதும் இறுக்கமான ஒற்றைக் கட்சியால் சாத்தியமாக்கப்படமுடியாதது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாத வரை இந்த நிலைமைகள் நீடிக்கவே செய்யும்.

மாத்தையாவின் மரணதண்டனைக்கு எதிரான போராட்டம், வெறும் மாத்தையா என்ற மனிதனை சிலவேளைகளில் காப்பாற்றிவிட்டாலும் கூட இது வேறொருவழியில் தொடரவே செய்யும்.

இன்று மாத்தையாவுக்காக குரல் எழுப்புவர்கள் மாத்தையா என்ற மனிதனைக் காப்பதில் மட்டும் கவனம் செலுத்தினால் அவர்கள் எதையும் சாதிக்கப் போவதில்லை.

ஏனென்றால், இன்று வடக்கில் இந்த 'இயக்க விதிக்கு' சமாந்தரமாக இன்னொரு புதிய விதியும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதுதான் உருவாகியுள்ள 'புதிய அரசு.'

அது படிப்படியாக அனைத்து அசையாச் சொத்துக்களையும் 'அரசுடமை' ஆக்குகிறது. நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் எல்லோரிடமும் இருந்து அது சொத்துக்களை கையேற்கிறது. பல்வேறு புதிய வடிவங்களில் வரிகளை அறவிடுகிறது. புதிய கல்வித்திட்டத்தை அது அறிமுகப்படுத்துகிறது. பல்கலைக்கழகத்தில் டொக்டர்களையும், தொழில்நுட்பவியாலாளர்களை தமது சொந்தப் பயிற்சிக் கல்லூரிகளிலும் உருவாக்குகிறது.

பொலிஸ் நிர்வாகம், நீதிமன்றம், வழக்குப் பதிவுகள் என்பவற்றை அது உருவாக்கியுள்ளது. இந்தப் புதிய அரசு விடுதலைப்புலிகளை, விடுதலைப் போருக்கான மக்களை எதிரியிடமிருந்து காப்பதற்கான ஒரு இராணுவமே என்று நம்பவைத்து விடுகிறது. அதிகாரபீடமான இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான சமரசத்தை - எல்லா அரசுகளும் செய்யும் சமரசத்தை மிக நேர்த்தியாக அது ஆற்றத் தொடங்கியுள்ளது.

பலநூறு சம்பளம் பெறும் ஊழியர்களுடன் இயங்கும் இந்த அரசு விரைவிலேயே மாத்தையா விவகாரம் போன்ற விடயங்களை ஒரு 'இராணுவ' விவகாரமாக நம்பவும் வைத்து விடும் சக்திமிக்கதாகி விட்டுள்ளது.

எல்லாவித ஜனநாயகமும் நிலவுவதான ஒரு தோற்றத்தை அது படிப்படியாக உருவாக்கி வருகிறது.

தீவிர தேசியவாதமும், தொடர்ச்சியான யுத்த நிலைமையும் இச்சமாந்தர 'விதி'யை சாதகமான, சக்திமிக்க ஒன்றாக வளரச் செய்து வருகின்றன.

இதைப்பற்றிக் கவனிக்கத்தவறுபவர்கள், உருவாகிவரும் அங்கீகரிக்கப்பட்ட சட்டவிதிகளுக்குக்கீழ், உட்கொலைகள் சட்டபூர்வமானவைகளாக அங்கீகரிக்கப்படுவதற்கு சாட்சிகளாக இருக்க வேண்டியதுதான்.

இது தொடருமானால், என்றென்றைக்குமாகப் பலியாகப் போவது, எல்லாவற்றிக்கும் மேலாக, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையே!.

மாத்தையா விடயத்துடன் விடயத்தை குறுக்கிவிட நினைப்பவர்கள் சாதிக்கப் போவதெல்லாம், இவையனைத்துக்கும் சாட்சியாக இருந்துவிட்டுப் போவதுதான்.

அல்லது, இந்தச் சாதனைகளுக்கான உரமாகிப் போவதுதான்!

சோசமறிப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



## ரிச்சர்ட் -ராஜினி

# அமைதி ஊர்வலத்தில் பொலிஸாரின் அடக்குமுறை

ராஜினி திரணகம, ரிச்சர்ட் டி சொய்சா நினைவாக நடத்தப்பட இருந்த ஊர்வலத்தினைப் பொலிஸார் அடக்குமுறையைப் பாவித்துத் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிலர் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளானார்கள். இதன் காரணமாக ஊர்வலம் இடை நடுவில் இடை நிறுத்தப்பட்டது. இது பற்றிய விபரம் வருமாறு.

பெப்.21ம் திகதி 'சரிநிகரின்' சகோதரப் பத்திரிகையான 'யுக்திய' பத்திரிகையால் நடத்தப்பட்ட ராஜினி திரணகம, ரிச்சர்ட் டி சொய்சா நினைவு விழாவில் ரிச்சர்ட் ஊர்வலத்தினைப் பொலிஸார் அடக்கு முறையினைப் பிரயோகித்து தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

இவ்விழாவினை நடத்த 'சுதந்திர பத்திரிகை இயக்கத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை இயக்கங்கள் என்போர் ஒத்துழைப்பு வழங்கினர்.







ஊர்வலத்தின் போது ▲

ராஜினியின் நினைவாக மொறட்டுவ் பல்கலைக்கழகத்திலிருந்து பல்கலைக் கழக மாணவர்களால் தீப்பந்தம் ஏந்தி ஊர்வலம் ஒன்றும் அதே வேளை ரிச்சார்ட் டி சொய்சாவின் நினைவாக அவர் கொல்லப்பட்ட போது அவரது உடல் கரையொதுங்கிய பிரதேசமான மொறட்டுவயில் உள்ள கொரலவெலவிலிருந்து தீப்பந்தம் ஏந்திய இன்னொரு ஊர்வலமும் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இவ்ஊர்வலத்தினை நடத்த அனுமதி கோரிய போது அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது. எனினும் சட்டவல்லுனர்கள் 'அப்படியொரு அனுமதி கோர வேண்டிய அவசியமே இல்லை' எனத் தெரிவித்திருந்தனர். அதற்கிணங்க மீண்டும் பொலிஸாரிடம் இவ்வனுமதி மறுப்புத் தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்த அனுமதி கோரப்பட்டது. ஆனால் அதற்கு கூட அனுமதி தர பொலிஸார் மறுத்தனர்.

ரிச்சர்ட் கொல்லப்பட்ட நாளான பெப்-18ம் திகதியன்று 'சுதந்திரப் பத்திரிகை இயக்கம்' கொழும்பு நீதிமன்றத்தின் முன்னால் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியது. 'ராஜினி -ரிச்சர்ட் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கு' 'ரிச்சர்ட் மரணம் தொடர்பாக விசாரணைகளை நடத்து' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் இந்த மறியல் போராட்டம் நடாத்தப்பட்டது.

இறுதிவரை அனுமதி தர மறுத்த போதும் பத்திரிகையாளர்களும் மற்றும் விழா ஏற்பாட்டாளர்களும் அனுமதி அவசியமில்லை என்பதற்கிணங்க ஊர்வலத்தை நடாத்தத் தீர்மானித்தனர். பெப். 21ம் திகதியன்று மொறட்டுவ கொரலவெலவிலிருந்து ஊர்வலத்தைத் தொடங்கினர். இவ்வாறு நடக்குமென்பதை முன்கூட்டியே அறிந்த பொலிஸார். அன்று காலையிலேயே மொறட்டுவ காலி வீதியில் வாகனப் போக்குவரத்தைத் தடை செய்தனர். அப்பாதையில் ஏறத்தாழ இரு கிலோ மீற்றர் தொலைவில் இரு வாசல்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். ஊர்வலத்தில் ஒன்று குவிந்த மக்கள் இப்பாதையில் நடுவில் அகப்பட்டுக் கொண்டனர். ஊர்வலத்தை நகரவிடாமல் பொலிஸார் கைகோர்த்துத் தடை செய்தனர். எனினும் ஊர்வலம் அடிமேல் அடி வைத்து நகர்ந்தது. அதனைத் தொடர்ந்து மேலும் இரு பஸ்களில் பொலிஸார் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். ஊர்வலத்தை நகர முடியாதவாறு தடுத்து நிறுத்துவதில் இப் பொலிஸார் ஈடுபட்டனர்.



விகாரமகாதேவி பூங்கா விழாவில் -

ஏற்பாட்டாளர்கள் ஊர்வலமாக பேசாமல் ஒவ்வொருவராக இச்சங்கிலியைத் தாண்டிப் பாதசாரிகளாகக் கடப்பதற்கு முடிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து அருகிலிருந்த ரயில் பாதை வழியாகவும், சிறு இடைவெளிகள் வழியாகவும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் பொலிஸாரைக் கடக்க ஆரம்பித்தனர். பொலிஸார் செய்வதறியாது திகைத்து நின்ற போது பொலிஸ் அதிகாரியால் ஊர்வலத்தினரைத் தடுத்து நிறுத்துமாறு மீளவும் உத்தரவிடப்பட்டது. பொலிஸார் ஓடிவருவதைக் கண்ட ஊர்வலத்தினரும் ஓட ஆரம்பித்தனர். குண்டாந்தடியுடன் பொலிஸார் எல்லோரையும் துரத்திக் கொண்டு போனார்கள். சிலர் பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்திற்குள்ளானார்கள். 'சரிநிகரைச்' சேர்ந்த பத்திரிகையாளர்கள் இருவரும் இச்சம்பவத்தின் போது பொலிஸின் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இதற்கிடையில் கண்ணீர் புகைக் குண்டுவீச்சுப் படையினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். அதேபோல் பொலிஸாரும் சங்கிலியமைத்து பாதையை முழுதும் தடுத்தனர்.

பொலிஸ் அதிகாரிகள் இவ்விடத்தில் வந்து குவிந்தனர். கல்கிஸ்ஸ சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜெயந்த பரணதல, மொரட்டுவ பொலிஸ் அதிகாரி நிமல் சிறி பெரேரா, கல்கிஸ்ஸ பொலிஸ் பொறுப்பதிகாரி மகேந்திர குணசேகர, மொரட்டுவ பிரதிப் பொலிஸ் அதிகாரி கித்சிறி தயானந்த போன்றோர் வந்து குவிந்தனர். ஊர்வல ஏற்பாட்டாளர்கள் தாம் ஊர்வலத்தைத் தொடர்ந்து நடாத்தப் போவதாகப் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரிகள் உயர்மட்டத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தை அறிவித்த போது அனுமதி வழங்கக்கூடாது என உத்தரவு வழங்கப்பட்டது. இதனை அறிந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டோரில் சிலர் தீக்குளிக்கத் தயாராகப் போவதாக அறிவித்தனர். ஒருசிலர் ரயில் தண்டவாளத்தில் படுக்கப் போவதாக அறிவித்தனர்.

இறுதியில் விழா ஏற்பாட்டுக்குழு சார்பில் 'யுக்திய' ஆசிரியர் 'சுனந்த தேசப்பிரிய' ஊர்வலத்தினர் மத்தியில் உரையாற்றினார். "இங்கு கூடியுள்ள இளைஞர்கள் எத்தனையோ பொலிஸ் அடிதடிகளையும், டயர்களையும் இன்னும் பல எதிர்ப்புக்களையும் சந்தித்துள்ளனர். மனித உரிமை மீறல்களில் ஒரு செயலான ரிச்சர்ட் -ராஜினி சம்பவத்தைக் கண்டித்து இவ்வூர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தோம். இந்தப் பாஸிஸ அரசு எங்களது நியாயமான, அமைதியான ஊர்வலத்தை இன்று தனது அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி அடக்கி விட்டது. ஆனால் அனுர பண்டாரநாயக்க தனது 16 வருட அரசியல் வாழ்க்கையை முன்னிட்டு ஊர்வலம் நடாத்த முடியும்! ஆளும் வர்க்கத்திற்கு தனக்குத் தேவையான ஊர்வலங்களை நடத்தவும் முடியும். ஆனால் எங்களுக்கு இந்த அமைதி ஊர்வலத்தை நடத்த விடாமல் தடுக்கிறது அரசு. ஆனால் இதே இளைஞர்களின் உண்மையான எதிர்காலப் போராட்டத்தை ஒரு போதும் முற்றாக அடக்கி விட முடியாது. அவ்வாறான இலக்குகளில் ஒன்றே இங்கு நாம் நடத்திக் கொண்டிருப்பது" எனக் குறிப்பிட்டார்.

ஊர்லவம் இடைநிறுத்தப்பட்டுக் கலந்து கொண்டோர் வாகனங்களில் விழா நடைபெற இருந்த விகாரமகாதேவி பூங்காவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

**என்.எஸ்.குமரன்**

கலைநிகழ்ச்சிகள் மற்றும் உரைகள், கண்காட்சிகள் போன்றன இடம் பெற்றன. விழா இரவு 9.30 மணியளவில் முடிந்த போது விழாவிற்கு ஒலிபெருக்கி வசதிகளை செய்து கொடுத்த 'பராக்கிரம' ஒலிபெருக்கி சேவையைச் சேர்ந்தவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இத்தினத்தில் கொழும்பு நகரெங்கும் ஏனைய நாட்களைவிட அதிகளவு பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். விழாவுக்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## பாரிஸ்...

இலங்கை இராணுவம் 'உதயன்' காரியாலயத்தைக் குண்டு வீசித் தகர்த்தது. ஈழநாடு ஆசிரியர், வீரகேசரி ஆசிரியர் என இருவரைப் புலிகள் படுகொலை செய்தனர் . யாழ்ப்பாணத்தில் வீரகேசரி பத்திரிகை தனது கிளையை நிறுவ முயன்றபோது ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் அதன் உபகரணம் முழுவதையும் பறித்துச் சென்றனர். பின்னர் புலிகள் அவற்றை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரிடமிருந்து பறித்துச் சென்றனர். இவ்வாறு பத்திரிகைகளுக்கு எதிரான வன்முறை எல்லாத் தரப்பிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

இந்த வகையிலேயே ஈழநாடு காரியாலயமும் தாக்கப்பட்டிருக்கிறது.

பிரபாகரனின் சதியில் மாத்தையாவுக்கு மரணதண்டனை வழங்கப்படுவதை நியாயப்படுத்தி பாரிஸ் 'ஈழநாடு' எழுதியுள்ளது. இதனால் ஆத்திரமுற்ற மாத்தையா பிரிவினரே 'ஈழநாடு' காரியாலயத்தை எரித்ததாகக் கருதப்படுகின்றது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பிரிவு (மாத்தையா குழு) ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. இப் பிரசுரத்தில் பிரபாகரனின் துரோகத்தனத்துக்கு ஆதரவான சகல பத்திரிகைகள், ஸ்தாபனங்கள் தனிநபர்களுக்கு எதிராக எம்மால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என எச்சரித்துள்ளனர்.

இவ் எச்சரிக்கை பிரபாகரனின் ஆதரவாளர்களுக்கு மட்டுமல்ல. இவர்களை விமர்சிக்கும் எல்லோருக்குமே சேர்த்து விடப்பட்டுள்ளது. எமது போராட்ட வரலாற்றில் இது போன்று வளர்ந்தவை பின்னர் பல ஆயிரம் மக்களைக் கொலை செய்யக் காரணமாயிற்று. இதே மாத்தையா பிரபாகரனுடன் இருந்த காலத்தில் அவருக்குச் சளைக்காமல் கொலைகளில் ஈடுபட்டவரே. பிரபாகரன் தமிழ்நாட்டில் தங்கியிருந்த போது தளத்தில் இருந்த மாத்தையா, இயக்கத்தைக் கட்டிய காலத்தில் விடுதலையை இதயசுத்தியுடன் நேசித்த நூற்றுக்கணக்கானோரைக் கொன்று குவித்தார். மாத்தையா குழு என உரிமை கோருவோர் அக் கொலைகளுக்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். மாறாக இக் கொலைகளை மூடி மறைத்தபடி மாத்தையாவை தூய்மையானவராகக் காட்ட முனையும் செயற்பாடும் அதன் பின்னுள்ள நோக்கும் இன்னுமொரு பிரபாகரனையும் ஒரு புலியையும் கோரி நிற்பதாகவே அர்த்தப்படும்.

அதே புலிப் பெயருடன் தொடங்கும் மாத்தையா குழுவினரது செயற்பாடுகள் பிரபாகரன் வழிப்பட்டதே ஒழிய ஜனநாயக வழிப்பட்டவை அல்ல.

மறுபுறத்தில் 'ஈழநாடு' எரிக்கப்பட்டதைக் கண்டித்த திலகர் இப்படிக் கூறுகிறார். 'தமிழ் ஈழ எதிரிகளால் எம்மிடையேயுள்ள புல்லுருவிகள் ஊடாகக் கொடுக்கப்பட்ட அச்சுறுத்தலே 'ஈழநாடு' மீது...'

அவ்வாறானால் பாரிஸ் 'ஈழநாடு' பத்திரிகை தம்மை நடுநிலைப் பத்திரிகை என்று கூறிக் கொண்ட போதும் கனடாவில் 'தாயகம்' ஆசிரியரும்; 'செந்தாமரை' ஆசிரியரும் புலிகளால் தாக்கப்பட்ட போது மௌனம் சாதித்திருந்தது. ஐரோப்பாவில் பல பத்திரிகைகளைப் புலிகள் மிரட்டியபோது 'ஈழநாடு' அதனைக் கண்டிக்கவில்லை. இலங்கையில் இருந்து வரும் 'சரிநிகர்', லண்டனில் இருந்து வரும் 'ஈழபூமி' கனடாவிலிருந்து வரும் 'தாயகம்' என்பன பாரிஸ் கடைகளில் விற்பனை செய்வதைத் தடுத்த போது 'ஈழநாடு' பத்திரிகைச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கவில்லை. அண்மையில் லா சப்லாவில் நடந்த மோதலை 'ஈழநாடு' நடுநிலையுடன் எழுதவில்லை. எமது மண்ணில் 4000க்கும் மேற்பட்ட கைதிகள் புலிகளின் வதை முகாமில் உள்ளனர். அது பற்றி ஒரு வார்த்தையைக்கூட 'ஈழநாடு' எழுதவில்லையே ஏன்? சர்வதேச மன்னிப்புச் சபை அம்பலப்படுத்திய புலிகளின் மனித உரிமை மீறல்களைப் பிரசுரிக்காமல் 'ஈழநாடு' மூடி மறைத்தது ஏன்?

இவ்வளவு விடயங்கள் நடந்த போதும் 'ஈழநாடும்', திலகரும் கண்டு கொள்ளவில்லை. இப்போது தான் கருத்துச் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறார் திலகர். இதே போல புலிகளது இது வரை காலம் கருத்துச் சுதந்திர மறுப்புக்குத் துணைபோன 'வான்மதி', 'ஏலையா', 'மண்' போன்ற பத்திரிகைகளும் பாரிஸ் 'ஈழநாடு' தாக்கப்பட்ட பிறகு தான் கருத்துச் சுதந்திரம் பற்றிக் கூக்குரலிடுகின்றன.

ஏற்கனவே கருத்துச் சுதந்திரத்தை மறுத்தபடியே திலகரும், இந்தப் பத்திரிகைகளும் கருத்துச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுப்பது வேடிக்கையானது.

இந்தப் பத்திரிகைகள் புலிகளால் மிரட்டப்பட்ட, தடுக்கப்பட்ட தாக்கப்பட்ட பத்திரிகைகளுக்காகவும், பத்திரிகையாளர்களுக்காகவும் குரல் கொடுக்க முன்வருமா? திலகர் முன்வருவாரா?

மாத்தையா பிரிவினர் 'ஈழநாட்டை' எரிப்பதால் ஜனநாயகத்தைப் பெற்று விடப் போவதில்லை. பதிலாக மக்களைச் சார்ந்து நின்று அனைத்து வகையான கருத்து மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் ஜனநாயக உரிமைகளுக்காகவும், புலிகளின் பாஸிஸச் செயற்பாடுகளுக்கெதிராகவும் தொடர்ந்து போராடுதலே ஒரே சரியான வழி முறையாக இருக்கும்.

இந்த வகையில் மாத்தையாவுக்கெதிராக மரணதண்டனை விதிக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டும். 'ஈழநாடு' எரிக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டும். பத்திரிகைகளே! புலிகளின் பாஸிஸத்தை நியாயப்படுத்தாமல் நேர்மையாக எழுதுங்கள், மக்களைச் சார்ந்து நில்லுங்கள் என்றும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் சென்ற இதழிலும் இவ்விதழிலும் இடம் பெறாமல் போய் விட்ட செம்பாட்டான் எழுதும் 'இலங்கை அரசியலமைப்பும் இனப்பிரச்சினையும்' கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் இருந்து தொடர்ந்து வெளிவரும் -ஆ-ர்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்




ராஜினி - ரிச்சர்ட்

# 15 அமைதி ஊர்வலத்தில் பொலிஸாரின் அடக்குமுறை



# தேர்தல் செய்திகள்

## பிரதமர் பேசிய மேடையும் கட்டாக்காலி நாய்களின் தங்குமிடமும்

பெப். 20ந் திகதி அன்று மட்டுநகரில் பிரதமர் கலந்து கொண்ட ஐ.தே.க கூட்டம் சுமார் 60 பேருடன் ஆரம்பமாயிற்று. ஐ.தே.க. பட்டியலில் உள்ள 25 பேரும் ஆளுக்கு 3 ஆதரவாளரைத் திரட்டி வந்திருந்தால் கூட 75 பேர் வந்திருப்பர் எனக் கடமையில் நின்ற ஒரு சிங்களப் பொலிஸார் அங்கலாய்த்தார். நிலைமையைச் சமாளிக்க பின்னர் அவசரமாகக் கூட்டி வரப்பட்ட சிவில் உடைப் பொலிஸாரின் நன்மை கருதியோ என்னவோ கூட்டத்தில் அனைத்து அறிவிப்புகளும் சிங்களத்திலும் செய்யப்பட்டன.

பிரதமர் ஆங்கிலத்தில் பேசியதை பயங்கரத் தப்பும் தவறுமாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் மொழிபெயர்த்தார். தமிழ் மொழியை அரச மொழியாக்கிய ஒரே ஒரு உலக நாடு இலங்கைதான் (!) என்றும் மட்டக்களப்புக்கு ஒரு மருத்துவக் கல்லூரியும், போதனா வைத்தியசாலையும், கல்விக் கல்லூரியும் தரலாம் என்றும் கூறிய பிரதமர் தன் பேச்சின் முடிவில் மட்டு.மக்களுக்கு ஜனாதிபதியே ஜனநாயக உரிமைகளை மீட்டுத் தந்தவர் எனவே அவர் தலைமையிலான ஐ.தே.கவுக்கே வாக்களியுங்கள் எனக் கூறினார். ஐ.தே.க போட்ட மேடை இன்றும் (பெப். 22) எடுக்கப்படவில்லை. அது தற்போது சில கட்டாக்காலி நாய்களின் தங்குமிடமாயுள்ளது.

## அரச பயங்கரவாதத்தை எதிர்ப்போம்!

### ஐ.தே.க. பிரசுரம்

மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச சபைக்குப் போட்டியிடும் ஐ.தே.கவினர் தமக்கு ஆதரவு கோரி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன.

''அரச பயங்கரவாத அடிமைத்தனத்திலிருந்து எமது தமிழ் மக்களையும் மண்ணையும் மீட்டெடுப்போம்''!

''ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களியுங்கள்''!

பிரசுரம் எழுத ஆளில்லாமல் ஐ.தே.கவினர் யாரோ ஊறிப் போன தமிழபிமானியை நாடியிருக்கிறார்கள் போலிருக்கிறது. மனிதர் பழிவாங்கிவிட்டார் போலும்!

## நக்குண்டார் நாவிழ்ந்தார்!

ஜனாதிபதியின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற பேச்சுகளினால், பெரும்பாலான மட்டு. மக்கள் ஆத்திரமடைந்திருப்பதைத் தெளிவாகத் தெரிந்திருந்தும் கூட சுயேச்சையாகப் போட்டியிடும் தமிழ்க் குழுக்கள் தமது அரச, ஐ.தே.க எதிர்ப்புப் பிரசாரத்தை வீறுடன் நடத்தத் தயங்குகின்றன. ''இனப் பிரச்சினையா? பயங்கரவாதப் பிரச்சினையா? என்பதைத் தீர்மானிக்கும் உங்கள் வாக்கு'' என்பது போல் பட்டும் படாமலும் பேசுகின்றார்கள். இம் மாவட்டத்தில் எத்தனையோ ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. கற்பழிப்புகள், சூறையாடல் என ஐ.தே.க அரசின் ஆசிகளோடு படைகள் செய்த அட்டூழியம் அநேகம். எதைப் பற்றியும் மூச்சில்லை. ''நக்குண்டார் நாவிழந்தார்'' என்ற கதையா என வினவுகின்றனர் மட்டு. மக்கள் சிலர்.

## பிறந்த எண் ஒன்பது தேர்தல் எண் ஒன்பது கிடைக்கும் வாக்குகளும் ஒன்பதோ?

மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதம வேட்பாளர் எம்.பத்மநாதன் எண் சோதிடத்தையும் விட்டு வைக்கவில்லை. தன் தளராத தேர்தல் முயற்சியில் அவர்து பிரசுரமொன்று இவ்வாறு கூறுகின்றது. ''தேர்தல் மகள் துள்ளி வந்தாள். ஒன்பதாம் நம்பர் அள்ளித் தந்தாள். வெற்றி அவரைத் தேடி வரும் நன்னாள் 1-3-1994. அவரது பிறந்த நாள் 9. அவரது எண் 9. தேர்தல் நடைபெறும் தினத்தைக் கூட்டினால் 9''

## சக்கரவர்த்தி ஐயா எடுத்தியம்பும் உண்மை

மட்டு மாநகரசபையின் இன்னொரு ஐ.தே.க வேட்பாளரான அ.சக்கரவர்த்தி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தமிழருக்கு ஒரு ''மாபெரும் உண்மையை'' எடுத்தியம்புகிறார். ''ஐ.தே.கட்சியினால் மட்டுமே எப்பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள முடியும். இல்லையெனில் என்றோ நம்மினம் பூண்டோடு அழிக்கப்பட்டிருக்கும்'' வேட்பாளரான கையோடு தன்னைச் 'சக்கரவர்த்தி ஐயா' எனப் பிரசுரங்களில் குறிப்பிடத் தலைப்பட்டிருக்கிறார் இந் நபர்.

## ஐ.தே.கவுக்கு பொலிஸாரும் பிரச்சாரம்

செங்கலடிப் பகுதியில் ஐ.தே.கவின் பிரசுர விநியோகம், ஒலி பெருக்கி பூட்டிய ஓட்டோவில் தேர்தல் பிரச்சாரம் ஆகியவற்றை சிவில் உடைப் பொலிஸாரே செய்கின்றனர்.




## பரிசுகள்

நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டுமொருமுறை வந்தார்
கிராமத்தில் வாக்குச் சேகரிக்க

இந்தமுறை கிராம மக்கள்
தங்கள் காதுகளையும் கண்களையும் கழற்றி
அவருக்குப் பரிசாகக் கொடுத்தனர்

அவர்கள் கூறினர்
இவற்றை எடுத்துச் செல்லுங்கள்,
நாடாளுமன்றத்தில் இவற்றை மாட்டி வையுங்கள்
அப்போது எங்களால் உங்களைப் பார்க்க முடியும்
நீங்களும் உங்கள் கட்சியும்
எங்களை இந்தச் சேற்றிலிருந்து கைதூக்கி விடுவதற்காக
நடத்தும் சண்டையை எங்களால் கேட்க முடியும்
நாடாளுமன்ற உறுப்பினர் நன்றி கூறினார்
ஆனால் அந்த அற்புதமான பரிசுகளைத்
தனது சட்டைப் பைக்குள் வைத்துவிட்டு மறந்து விட்டார்

அந்த ஏழைக் கிராமமோ
குருட்டுக் கிராமமாகி விட்டது
செவிட்டுக் கிராமமாகி விட்டது
கால்நடைக் கிராமமாகி விட்டது
கிராமமக்களோ சேற்றில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்

அவர்கள் இன்னமும் சாகவில்லை யென்றால்
வாழ்ந்து கொண்டுதானிருக்க வேண்டும்
நாடாளுமன்ற உறுப்பினர் போலவே.

-கோஸ்டிஸ் பாப்பகோங்கோஸ்
தமிழில்: எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா
நன்றி: அவ்வப்போது பறித்த அக்கரைப்பூக்கள்

அரங்காடிகள் வழங்கும்
இருநாடகங்கள்
இ.முருகையனின்
இரு துயரங்கள்
பேராதனை பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின்
விசாரணை
1994 மார்ச் 05 சனி மாலை 6.00 மணிக்கு
தெஹிவளை ஜெயசிங்க மண்டபத்தில்
நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்.
(ரசிகர் அவை அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ அட்டையைத் தவறாது கொண்டு வரவும்)

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03.